# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 14 சனிக்கிழமை (26-02-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:39


# யுத்தக்கைதிகளின் உண்ணாவிரதம் தற்காலிகநிறுத்தம்!

## அரசுக்கு 15 நாள் அவகாசம் அளித்து

வவுனியா,பெப்ரவரி 26

**விடுதலைப்புலிகளின் காவலில் இருக்கும் பதினைந்து யுத்தக்கைதிகளும் கடந்த 16 தினங்களாக மேற்கொண்டுவந்த உண்ணாவிர்தப் போராட்டத்தை நேற்றுக்காலை தற்காலிகமாகக் கைவிட்டனர்.**

**தம்மை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு அரசுக்கு 15 நாள்கள் காலஅவகாசம் வழங்கும் விதத்திலேயே தாம் உண்ணாவிரதத்தை இடைநிறுத்துவதாக அவர்கள் அறிவித்தனர்.**

பல்வேறு தாக்குதல் சம்பவங்களின்போது விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 15 யுத்தககைதிகளும் தம்மை விடுவிக்க ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புனானை முகாம் மீது புலிகள் ஷெல் தாக்கு!

### ஏழு படையினர் படுகாயம்

மட்டக்களப்பு - பொலன்னறுவை பிரதான வீதியில் உள்ள புனானை இராணுவ முகாம் மீது அருகில் உள்ள காட்டுப்பகுதியிலிருந்து நேற்றுக் காலை 7.45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்ஷெல் தாக்குதலில் 7 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்று மாலை கொழும்பு ஆஸ்பத்திரிக்குக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - கடற்படையினர் சல்லிப் பகுதியில் மோதல்!

திருகோணமலை,பெப்.26

திருகோணமலை மாவட்டத்தில் சல்லிக்கிராமத்தில் நேற்றுமுன் தினம் இரவு 10.30 மணியளவில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் கடற்படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மற்றுமிரு கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பொருள்கள் கொள்வனவு செய்த சமயம் அவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

அதன்பின்னர் மோதல் வெடித்ததாகவும் கூறப்பட்டது.

(உ-3-150)

## சல்லியில் பதற்ற நிலை! மக்கள் மீது தாக்குதல்!!

திருகோணமலை,பெப்.26

சல்லிக் கிராமத்தில் கடற்படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மோதல் சம்பவத்தை அடுத்து சல்லி, சாம்பல்தீவு ஆகிய கிராமங்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் -

இதனால் பொதுமக்களின் உடைமைகள் நாசமானதாகவும் - கூறப்பட்டது.

சல்லிக் கிராமத்தைச் சுற்றி வளைத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது பொதுமக்கள் நையப் புடைக்கப்பட்டதாகவும் -

ஆறு வீடுகள், இரு கடைகள், ஒரு வான் ஆகியன தீயிட்டு எரிக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பல்கலை மாணவர் மறியல்

மட்டக்களப்பு,பெப்.26

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வோர் பாஸ் பெறவேண்டும் என்ற புதிய நடைமுறையை உடனடியாக நீக்கக்கோரி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முற்பகல் பல்கலைக்கழக முன்றலில் வீதிமறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 500 மாணவர்கள் இதில் பங்குபற்றினர். (உ-7-21)

## தம்பலகமத்தில் மின்மாற்றி தகர்ப்பு

கொழும்பு,பெப்.26

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகமம் பகுதியில் அமைந்திருந்த மின்மாற்றி ஒன்று நேற்றுமுன் தினம் இரவு இனந்தெரியாதோரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சிகிரி முகாம் மீதும் ஷெல் தாக்கு!

அம்பாறை,பெப்.26

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள சிகிரி இராணுவ முகாம் மீதும் விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தினர். அதில் 2 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-7)

## கண்டியில்தேடுதல் 61 தமிழர் கைது

கொழும்பு,பெப்.26

கண்டியில் நேற்று அதிகாலை முதல் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 61பேர் தவிர்ந்த ஏஞ்சியோர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர். (உ-3)

## ஜெயலலிதாவுக்கு எதிராக உத்தரவு

புதுடில்லி,பெப்.26

டான்ஸி நிலப்பேர ஊழல் வழக்கில் இருந்து முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை விடுவித்து சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இந்தியஉச்ச நீதிமன்றம் நேற்று இடைநிறுத்தி வைக்க உத்தரவிட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக கடந்தமாதம் 13ஆம்திகதி சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவின் மீதே உச்ச நீதிமன்றம் நேற்று இந்த இடைக்காலத் தடை உத்தரவை விடுத்தது.

(உ-4)

பயணிகள் சேவையில் ஈடுபடவிருக்கும்

## 'லங்கா ராணி' கப்பலை கொண்டுவர குழு பயணம்

கொழும்பு,பெப்.26

அடுத்தமாதம் முதல் திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையை நடத்தவிருக்கும் 'லங்கா ராணி' கப்பலைப் பார்வையிட்டு அதனைத் திருகோணமலைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக கப்பல் கூட்டுத்தாபன அதிகாரிகள் குழு ஒன்று இன்று சிங்கப்பூருக்குச் செல்கின்றது.

இந்தச் சேவையை நடத்துவதற்காக கப்பல் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட கொள்வனவுக் கட்டளையை ஏற்ற தனியார் நிறுவனம் ஒன்று 'லங்கா ராணி' கப்பலை சிங்கப்பூரில் உள்ள தனது தளத்தில் கட்டி முடித்துள்ளது.

இதையடுத்து கப்பலைப் பார்வையிட்டு அதனை கொழும்புக்கு எடுத்து வரும் பணிகளை மேற்கொள்ளவே இந்தக் குழு சிங்கப்பூருக்குச் செல்கின்றது.

இந்தக் கப்பல் சேவையை எதிர்வரும் ஆறாம் திகதி முதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (8 ஆம் பக்கம் பார்க்க)

செஞ். வழித்துணையுடனான

## பயணிகள் கப்பல் சேவைக்கு புலிகள் தரப்பில் 3 நிபந்தனை

யாழ்ப்பாணம்,பெப்.26

திருகோணமலைக்கும் - காங்கேசன்துறைக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வழித்துணையுடன் பயணிகள் சேவை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

*செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடி மற்றும் வழித் துணையுடன் கப்பல் செல்லும் போது அதில் -*

★ *ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படக்கூடாது.*

★ *துருப்புக்கள், படையினர் ஏற்றிச் செல்லப்படக்கூடாது.*

★ *சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் கப்பலை மறித்து புலிகள் அதனைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கவேண்டும்.*

- ஆகியனவே அந்த நிபந்தனைகள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிபந்தனையை அரசுதரப்பு ஏற்றிருப்பதாகவும் -

அது பற்றிய விவரம் ஜெனீவாவில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்குவதற்கான மேல் நடவடிக்கைகளை இனி எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 'லங்கா முடித்த' கப்பலில் 1200 பேர் திருமலைக்கு!

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நாளை புறப்படவிருக்கும் 'லங்கா முடித்த' கப்பலில் ஆயிரத்து 200 பயணிகள் அழைத்துச் செல்லப்படவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்கு டிக்கெட் பெற்றவர்களை பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலய மைதானத்துக்கு வருமாறும் அவர் கேட்டுள்ளார்.

காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்படும் பயணிகள் அங்கு தங்க வைக்கப்பட்டு நாளை காலை கப்பல் மூலம் அனுப்பப்படுவர் என்றும் அவர் சொன்னார். (உ-3)

## புறக்கோட்டையில் நேற்று வர்த்தகர்கள் கடையடைப்பு

கொழும்பு,பெப்.26

இந்தியா மற்றும் பாகிஸ்தான் வர்த்தகர்களிடமிருந்து வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றை எவரும் வாங்கக்கூடாது என்றும் -

இந்தப் பொருள்களின் இறக்குமதியில் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்றும் -

பாதாள உலக கோஷ்டியுடன் இயங்கும் சிலர் எச்சரித்ததை ஆட்சேபித்து புறக்கோட்டைப்பகுதியில் நேற்று கடையடைப்பு இடம்பெற்றது.

இந்தப் பொருள்களின் இறக்குமதியில் ஈடுபடுபவர்களில் 98 சதவீத மானவர்கள் தமிழர்கள் ஆவர்.

இவர்களை எச்சரிக்கும் வகையில் பாதாள உலகக்குழு செயற்பட்டதாக கூறப்பட்டது.

இந்த நிலையைக் கண்டித்தே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இங்கும் சாரதி 'லைசென்ஸ்' வழங்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம்(லைசென்ஸ்) வழங்கும் பணி அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக யாழ். செயலக மோட்டார் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகளை நடத்தும் பரீட்சகர் இங்கு நியமிக்கப்படாததால் 89 ஆம் ஆண்டுக்குப்பின் இந்தப்பணி இங்கு நடைபெறவில்லை என்றும் -

பரீட்சகர் ஒருவர் தற்போது நிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்களின்

அன்பு மகன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயரடைகிறோம். பாசமிகு புதல்வனின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்,
நெடுந்தீவு.

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள். (73990)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோ.திருநாவுக்கரசு அவர்களின்

பாசமிகு மைந்தன் திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பொதுமுகாமையாளர்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
மானிப்பாய் ப.நோ.கூட்டுறவுச்சங்கம்.

(c/11190)

# நீங்காத நினைவில் 31 தினங்கள்



பிறப்பு 1950 - 02 - 07

இறப்பு 2000 - 01 - 27

## திருமதி சகுந்தலாதேவி இராசேந்திரன்

அன்பின் உருவமே தேவமக்கா
பண்பிற்கு ஒரு தெய்வமே
உடன் பிறவா சகோதரியாய்
உருக்கமாக பழகிய நாங்கள்
நெஞ்சை விட்டகலாது நிழலாடுகிறது.
பூவுலகின் உத்தமியே
சொர்க்கத்திலும் உத்தமியே ஆக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாமியன் அரசடி,
கரவெட்டி மத்தி

திரு.திருமதி சிவராஜா

(73986)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 - 12 - 1949

மறைவு 27 - 01 - 2000

அமரர்

## சண்முகம் பரமானந்தன்

கூடுகள் குலைந்ததாலே குஞ்சுகள் வாடுதையா!
வீடுதான் வெளிச்சுப்போச்சே விரைந்து நீ வருவாயா?
தேடுவாரற்று நாங்கள் திகைத்துமே நிற்கின்றோம்.
நம்பிகள் நாங்கள் நனைந்தோம் உன் நினைவில்
ஞாலம்தான் மறைந்ததேனோ ஞானமே சொல்லுமையா.

இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அனைவரும் கலந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போமாக!!!

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
சிவம் குடும்பத்தினர்,
அம்பிகாவதி குடும்பத்தினர்,
நண்பர்கள்.

கோவில் வீதி
பொக்குவில் கிழக்கு
பொக்குவில்.

(73989)

### 'குகனின்' கட்டுரையின் தொடர்ச்சி

சஞ்சிகையின் நடுப்பக்கத்தில் 'குகன்' வரைந்துள்ள "அங்கிகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒரு விதம்" கட்டுரையின் தொடர்ச்சி XV ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. அது பற்றிய குறிப்பு நடுப்பக்கத்தில் இடம்பெறாமல் தவறியதற்காக வருந்துகிறோம். (ஆ-ர்)

## நூல் அறிமுகம்

சைவப் புலவர் சு.செல்லத்துரையின் வானொலி உரைத் தொகுப்பான 'வாக்கும் வாழ்வும்' என்னும் நூலின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு வழக்கம்பரை அறநெறிப்பாடசாலையில் நடைபெறவுள்ளது. பாடசாலை இயக்குநர் சிவத்திரு சு.சுந்தரராசக் குருக்கள் தலைமையில் நூல் அறிமுகம் இடம்பெறும். (3-28)

## தபால்பொதிகள் வந்தன

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் குடாநாட்டுக்கான உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்கள் அடங்கிய 487 தபால் பொதிகள் நேற்று இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (3-9)


### ஸ்ரீ செல்வா சினிமா

ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தினசரி - 10.30 - 2.30
(பழைய நேரம்)
அர்ஜுன், ரம்பா
நடித்த
சுதந்திரம்
(புதிய வெளியீடு)
CD பிரதி (73996)

### லிபேட்டி

அச்சுவேலி
புதிய வெளியீடு
பிரபு, கார்த்திக்
தை பிறந்தாச்சு
காட்சிகள் 10.30, 2.30
T.P:- 070 - 212223
070 - 212678
(C/11197)

### ராஜா

யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயாணி
நடித்த
சூர்யவம்சம்
காட்சிகள்
10.30, 2.00,6.00
(C/11154)

### நாகம்ஸ்

சுன்னாகம்
அர்ஜுன்,ரேவதி,
பிரகாஷ்ராஜ்,வடிவேலு
நடித்த
சுபாஸ்
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11105)


# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகிவருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 25 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

### யாழ்ப்பாணம்

(132012ஏ),(132012பி),(132012சி), (132012டி), (132012ஈ), (132012எப்), (132026ஏ), (132037ஏ), (132037பி), (132206ஏ), (132243ஏ), (132243பி), (132243சி), (132243டி), (132261ஏ), (132267ஏ), (132267பி), (132272ஏ), (132321ஏ), (132321பி), (132321சி), (132321டி), (132399ஏ), (132399பி), (137008ஏ), (137070ஏ), (137070பி), (137070சி), (137070டி), (137105ஏ), (137108ஏ), (137108பி), (137114ஏ), (137119ஏ), (137164ஏ), (137168ஏ), (137200ஏ), (137206ஏ), (137211ஏ), (137211பி), (137284ஏ), (137302ஏ).

### கரவெட்டி

(125755ஏ)(135363ஏ),(135363பி).

### கோப்பாய்

(134050ஏ), (134050பி), (134114ஏ), (134114பி), (134114சி), (134122ஏ), (134122பி), (132141ஏ), (134141பி), (134162ஏ), (134163ஏ), (134178ஏ), (134178பி), (134178சி), (134197ஏ), (136231ஏ), (136231பி), (136414ஏ), (136414பி), (136418ஏ), (136718ஏ), (136718பி), (130377ஏ).

### நல்லூர்

(132045ஏ),(132146ஏ),(132146பி), (132146சி), (132146டி), (132387ஏ), (132387பி), (132387சி), (137074ஏ), (137140ஏ), (137140பி).

### உடுவில

(134129ஏ), (134131ஏ), (134262ஏ), (134264ஏ), (134264பி), (134265ஏ), (134287ஏ), (136308ஏ), (136308பி).


# POST OF INTERNAL AUDITOR

Application are invited for the above post from persons with suitable experience in auditing for a long standing establishment in Jaffna.

The duties include cheking of stores producting payment and personnel section & reporting to the Managing Director salory negotiable

Application shold be sent to the following address to reach on or before 8th march 2000

Advertiser
Box No-1007
Uthayan,
361,Kasthuriar Road,
Jaffna.

(C/00001)


# யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்

இன்று (2000-02-26) சனிக்கிழமை நடைபெற விருந்த வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி காலநிலை சீரின்மை காரணமாக ஒத்திவைக்கப் பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்

அதிபர்.

# இதய அஞ்சலி

பாசமிகு தந்தையார் திரு.செ.திருநாவுக்கரசு
அருமை மிகு அன்னை
திருமதி கோமளா திருநாவுக்கரசு
(யாழ். மாவட்ட கூ.அ.உ. ஆணையாளர் - கணக்காய்வு)
அவர்களின் சிரேஷ்ட புதல்வனாக அவதரித்த

## செல்வன் சுதர்சன் அவர்களின்

அகால மறைவு எம்மையெல்லாம் வருடி நிற்க
எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.
அவரின் ஆன்ம சாந்திக்காக உருக்கமாகஇறைஞ்சுகின்றோம்.
பிரிவால் துவண்டு நிற்கும் அவர்தம் அன்புப் பெற்றோர்
உடன்பிறப்புக்கள், உறவினர்கட்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களை நெஞ்சார நவில்கின்றோம்.

அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
அனைத்து பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகளும்,
சி.வை.கூட்டுறவுச்சங்கமும்
வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசமும். (C/11194)


# MINE ACTION ASSISTANCE GROUP

(MAAG - JAFFNA)

(A Co-operation between Government Agent, Jaffna and the UNOPS- JRRP)

## VACANCIES

## MEDICS

**Eligibility Requirements:**

Paramedical Practitioners or traind in advanced First Aid with introduction course on Trauma


Please send your application with CV and your contact telephone number (if any) to reach the office before 16h30 on March 3rd, Friday

MINE ACTION OFFICER,
Secretariat,
Jaffna.

(73991)

## கொழும்பில் தங்குமிட வசதி

*கீழ்க் காணும் விலாசத்தில் அமைந்துள்ள தங்கு விடுதியில் சகல வசதிகளுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.*



- மாதாந்த வாடகை
- நாள்வாடகை
- சமையல் வசதி
- தொலைக்காட்சி வசதிகள்
- 24 மணிநேர தண்ணீர் வசதி
- வெளிநாட்டு, தொலைபேசி, பக்ஸ் வசதி
- உலகநாடுகளுக்கான விமான டிக்கெட் வசதியும் செய்து கொடுக்கப்படும்.
- விமான நிலைய போக்குவரத்து வசதிகள்

### *வினோத் இன்*

33, ஸ்ரீ குணாநந்த மாவத்தை,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

**VINOTH INN LODGING HOUSE**
33, Sri Gunanada Mawatha, Kotahena, Colombo - 13
**TEL : 431845, 342711** (73979)


## வடமராட்சி தொலைபேசி உரிமையாளர் சங்கம்
## விசேட பொதுக் கூட்டம்

**மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 12-03-2000 பி.ப. 3 மணிக்கு நெல்லியடி வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடை பெறவுள்ளது.**

**இதுவரை அங்கத்தவர்களாகச் சேராதவர்கள் உங்களுக்குரிய விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து ரூபா100 இவ்வாண்டுக்குரிய சந்தாப்பணத்துடன் கீழ்க் குறிப்பிட்டவர்களிடம் 10-03-2000 இற்கு முன்னதாக ஒப்படைக்கவும்.**

1. **திரு. பி.கந்தையா** — முகவர் தபால் நிலையம், பிரதான வீதி, நெல்லியடி. தொலை. இல. 3216
2. **திரு. எம்.எஸ்.சபாநாயகம்** — உடுப்பிட்டி வீதி, மாலி சந்தி, தொலை. இல. 3247
3. **திரு. எஸ்.சந்திரகாந்தன** — 1ஆம் கட்டை, பருத்தித்துறை. தொலை. இல. 3286
4. **திரு. ரீ.தங்கேஸ்வரன்** — சந்தைத்தெரு, உடுப்பிட்டி. தொலை. இல. 070 212297

**பி.கந்தையா,** *தலைவர்.*
**எம்.எஸ். சபாநாயகம்,** *செயலாளர்*

(73982) வடமராட்சி தொலைபேசி உரிமையாளர் சங்கம்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 05 - 12 - 1965



ஆண்டவன் அடியில் 26 - 02 - 1994

**செல்வன் நாகமுத்து சக்குணபாலா**(அங்கு)
(ஜேர்மனி)

திதி 26.02.2000

ஆறாண்டு சென்றதையா
ஆறியதா எம் துயர்
இன்று அரும்பிய துயர்-
போலவே துடிக்கிறோம் ஐயா!
நூறாண்டு சென்றாலும் உம் நினைவு
எம் நெஞ்சை விட்டு அறுத்திட
முடியுமா ஐயா!

சாந்தி!சாந்தி!!சாந்தி!!!

M.N.மகேந்திரன்
(அண்ணன்),
மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி.

**ஐயா, அம்மா; சகோதரர்கள் மைத்துனர், மைத்துனிமார்; தம்பி பாலன்.** (லண்டன்).

(73982)

## அறிமுகவிழா

யாழ்ப்பாணம். பெப்.26

யாழ். இலக்கிய வட்டத்தின் மூத்த எழுத்தாளர் கசினின் 'கசின் சிறுகதைகள்' அறிமுக விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியான் தலைமையில் யாழ் ஆரிய குளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை வரவேற்புரையையும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் அறிமுகவுரையையும் யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி அ.சண்முகதாஸ் மதிப்புரையையும் நிகழ்த்த உள்ளனர். (உ-10-133)

## இறுதிப்போட்டி

நெல்லியடி. பெப்.26

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் எம். செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிஆட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும்.

கழகத் தலைவர் க.ரவீந்திரன் தலைமை வகிப்பார். பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இறுதிப் போட்டியல் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி மோதும். (உ-8-109)

## இல்ல விளையாட்டு

நெல்லியடி. பெப்.26

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு செ. யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம்.ஸ்ரீபதி கலந்துகொள்வார். (உ-8-109-173)

* * *

வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் த.தபேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.(உ-8-109)

* * *

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஞானம்பாள் தெய்வேந்திரராஜா கலந்துகொள்வார். (உ-109)

## கூட்டம்

யாழ்ப்பாணம்.பெப்26

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-10)

## சமய சந்நிதி

வடமராட்சி.பெப்.26

பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துதினங்கள் மஹோற்சவம் நடைபெறும். இரதோற்சவம் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், சமுத்திர தீர்த்தோற்சவம் 6ஆம் திகதி திங்கட்கிழமையும் நடை பெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுபெறும். (உ-173)

## பண்ணையில் 160 மீற்றர் உயர கோபுரம்

யாழ்ப்பாணம்.பெப்26

யாழ். பண்ணை தொலைத்தொடர்பு நிலையத்தில் 160 மீற்றர் உயரமுடைய கோபுரம் ஒன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ரெலிக்கொம் நிறுவன பிரதிமுகாமையாளர் எஸ்.கனகசூரியர் தெரிவித்தார்.

இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக இரு நிபுணர்கள் கொழும்பில் இருந்து யாழ். வந்துள்ளனர் என்றும் -

மூன்று மாதங்களில் இந்தப்பணிகள் பூர்த்தியடையும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07 - 02 - 1950



மறைவு 27 - 01 - 2000

திருமதி
**சகுந்தலாதேவி இராசேந்திரன்**
திதி 27-02-2000

**எமது முன்னாள் வடபிராந்தி பிரதிப் பொதுமுகாமையாளரும் தற்போதைய மேலதிகப் பொதுமுகாமையாளருமாகிய (கொழும்பு) திரு. வேலுப்பிள்ளை இராசேந்திரன அவர்களின் பாசமிகு துணைவியாரின் 31 ஆம் நினைவு நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*மின் அத்தியட்சகர் செல்வச்சந்திரனும் ஊழியர்களும்*

வடமாகாண கட்டமைப்பு பகுதி,
இலங்கை மின்சாரசபை,
யாழ்ப்பாணம்.

(73957)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோதிபதியம்மா கணபதிப்பிள்ளை

வேதவுடையாவளவு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை (செட்டியார்) சோதிபதியம்மா 24-02-2000 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மல்லிகாதேவி (கனடா), இராசரத்தினம் (வவா), சீவரத்தினம் (அளவெட்டி-மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), குணரத்தினம், விமலாதேவி (நோர்வே), ஜெயரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரத்தினம் (கனடா), இராசாத்தி, தவமலர், பரமேஸ்வரி, யோகநாதன் (நோர்வே), ஜெயலட்சுமி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகரன்( ஜேர்மன்), கிருபாகரன் (கனடா), லேகா (கனடா), சுதாகரன் (நோர்வே), சுஜாதா (ஜேர்மன்), சுஜீவா, தினேஸ்கரன், கார்த்திகா, கவிதா, பாமினி, நிசாந்தா, கயூரன், விதூரன், மயூரேகா (நோர்வே), நிவேதா(நோர்வே), மிதுஷா(ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிரவீணாவின்(ஜேர்மன்) அன்புப் பூட்டியும், சரஸ்வதி, காந்திமதி(லண்டன்), காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற நாராயணபிள்ளை, வன்னியசிங்கம்(கொழும்பு), காராளசிங்கம், விஜயராமன்(ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னம்மா, தவமலர், பூங்கோதை, காலஞ்சென்ற நித்தியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-02-2000 வியாழக்கிழமை 2 மணிக்கு புத்தூர் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
கானியானை,
புத்தூர்.

தகவல்:
இராசரத்தினம் (வவா),
சீவரத்தினம், குணரத்தினம்.
(மகன்மார்)

(73981)

### சிங்காரம் வல்லிபுரம்
(சட்டத்தரணி)

பிரபல சட்டத்தரணி சிங்காரம் வல்லிபுரம் 23-02-2000 புதன்கிழமை காலமானார்.

அன்னார் நவமணி - வல்லிபுரம் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிப் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், நிரஞ்சனா, சத்தியேந்திரா, யமுனா, காஞ்சனா, நிமலேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், அனோஜி, அன்ட்ரியாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அகல்யா, விரேன், அனிஷா, நிக்கலஸ், ஜோகனா ஆகியோரின் அன்புப்பாட்டனாரும், காலஞ்சென்ற லச்சுமியம்மா, வேதநாயகி, மகேஸ்வரி, நேசம்மா, சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வல்லிபுரம், கந்தையா, சிவஞானம், காலஞ்சென்ற வைரவநாதன், தவமணி கனகசபை, மனோன்மணி, வேலாயுதபிள்ளை, பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை காலை இல.68, டேவிட்சன் றோட், பம்பலப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக அவரின் பூதவுடல் கனத்தை இந்து மயானத்துக்கு 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

68, டேவிட்சன்றோட்,
பம்பலப்பிட்டி.
Tel. 590838

தகவல்:
சி.சிறீஸ்கந்தராஜா
(சகோதரன்)

(C\11169)

### கார்த்திகேசு புவனேந்திரராஜா
(முன்னாள் ஆசிரியர் வைத்தீஸ்வராக் கல்லூரி)

கந்தர்மடத்தை வதிவிடமாகக் கொண்ட கா.புவனேந்திரராஜா 08-02-2000 அன்று கண்டியில் காலமாகிவிட்டார்.

அன்னார் பாலாம்பிகையின் (முன்னாள் உப அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், மோகனா (கூட்டுறவுப் பரிசோதகர், வவுனியா), ரோகினி (ஆசிரியை, கண்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வானந்தனின் (ஆசிரியர், வவுனியா) அன்பு மாமனாரும், மகேந்திரராஜாவின் (முன்னாள் உயர் நீதிமன்றப் பதிவாளர்) அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-02-2000 அன்று கண்டியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*C\O, Miss S.N. Atukorale,*
*44\3, William Gopallawa Mawatha,*
*Kandy.*

தகவல்:
குடும்பத்தினர்.

(73987)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 63ஆம் ஆண்டு பிறந்த, லண்டனில் டாக்டராகப் பணிபுரியும் நிரந்தர வதிவிட அந்தஸ்து உடைய மணமகனுக்குப் படித்த, அழகிய, மெல்லிய, குடும்பப்பண்பு நிறைந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். சீதனமும் விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்புடன் குடும்ப விவரங்களுடன தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1004, மே/பா. உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (73814)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயது நிரம்பிய செவ்வாய்த் தோஷமற்ற பயிற்றப்பட்ட ஆசிரியருக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆசிரியை விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:- விளம்பர இல. 1000, மே/பா. உதயன் பணிமனை. (73879)

### மரக்கன்றுகள்

மா, பலா, தோடை, தேசி,றோஸ், செவ்வரத்தை, குறோட்டன் மற்றும் பூங்கன்றுகள், பூச்சாடி, மருந்து வகைகள் என்பனவும் பெற்றுக் கொள்ளலாம். முகவரி:- 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (73876)

### திருமண சேவை

நட்சத்திரம் மகம், 1965 ஆம் ஆண்டு லக்கின பாவம் 21, B.Com. பட்டதாரி ஆசிரியருக்கு பட்டதாரி மணமகள் தேவை. எம்மிடம் அரச, தனியார்துறைகளில் ஜாதகக் குறிப்புகள் உண்டு. தொடர்பு தா. நிர்மலமூர்த்தி, 'திருவெள்ளாறை திருமண சேவை', அல்லாரை வீதி, மீசாலை. (73899)

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள ஜப்பானியத் தயாரிப்பு YAMAHA-SR125 ரக மோட்டார்சைக்கிள் (பதிவுச் சான்றிதழ் உள்ளது. பதிவு இல. 150 - 9471) விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச.சபாபதி, கத்தாப்படிவீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. தொலைபேசி இல. 2226 அல்லது 212595. (73863)

SHRIRAM HONDA E650K ஜெனரேற்றர், SONY CD PLAYER GRX - 8 (2000 W), மரத்தளபாடம் செய்வதற்குரிய BAND SAW, JAPAN NATIONAL DECK (N.V. 450EN) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு 67, செட்டித்தெரு, நல்லூர். (73919)

இசைக்கருவிகள் YAMAHA PSR100 STEERIO ORGAN டபிள்றீட் (42KEY), ஹார்மோனியம், றிபிள் பொங்கோறம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு எ.அருள்நாதன், பத்திரகாளி கோயில் பின் ஒழுங்கை, சுழிபுரம். (73920)

### ஆண்டு 6 - 9

விஷேடமாகக் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் உயர்ந்த பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படுகின்றது. அனுபவமுள்ள ஆசிரியர். இல. 85, சிவன்கோவிலடி, சிவன்கோவில் பின்புறம், திருநெல்வேலி. (73930)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு இல:- 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (73929)

## லயன்ஸ் பரிசோதனை

தென்மராட்சி, பெப். 26

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் திங்கட்கிழமை தோறும் நடத்தப்படும் நீரிழிவு கிளினிக்கில் சிகிச்சை பெறும் நோயாளர்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் பரிசோதனை செய்ய உள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பரிசோதனையில் 49 நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டனர் என்றும் அடுத்த வாரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ள சுகவனிதையர் கிளினிக்கிலும் இப்பரிசோதனை நடத்தப்படவுள்ளதாகவும் லயன்ஸ் கழகச் செயலாளர் வீ.வீ. மகாலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை இந்தப் பரிசோதனைக்குத் தேவையான தாள்களை கொள்வனவு செய்து வழங்குமாறு நலன்விரும்பிகள் கோரப்பட்டுள்ளனர். (இ-117)

# இருபாலை கிழக்கில் தினமும் பவுசர் மூலம் குடிதண்ணீர்

## 750 குடும்பங்கள் பயன்பெறுகின்றன

வலி.கிழக்கு. பெப்,26

இருபாலை கிழக்கில் உள்ள 750 க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நாளாந்தம் 4 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் பவுசர் மூலம் வலி.கிழக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வருகிறது.

கோப்பாய் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் லான்ட்மாஸ்ரர் பவுசரை வலி.கிழக்கு பிரதேச சபை வாடகைக்கு அமர்த்தியே குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகிறது.

இதனால் இருபாலை கிழக்கு சனசமூக நிலையம், ஆனந்தபுரம், விக்னேஸ்வரா சனசமூக நிலையம், ஞானஒளி சனசமூக நிலையம், கதிரொளி சனசமூக நிலையம், கலைவாணி சனசமூகநிலையம், அன்னை திரேசா சனசமூக நிலையம், பாரதி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு உட்பட்ட 750க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நாளாந்தம் 4 ஆயிரம் லீற்றர் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருவதாக பிரதேசசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-180)

# சிறுவர் பூங்கா நிறுவ முடிவு

வலி.கிழக்கு. பெப்,26

இருபாலை கோண்டாவில் வீதியில் இரண்டு லட்சம் ரூபா செலவில் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வலி. கிழக்குப் பிரதேசசபை இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

பிரதேச சபையின் விசேட நிதி மூலம், இதற்கான நிதி ஒதுக்கப்பட்டது. (இ-180)

## நடிகர்கள் தேவை

**எமது நிறுவனம் கண்ணிவெடி சம்பந்தமான சமூக விழிப்புணர்வு நாடகம் ஒன்றினைத் தயாரித்து மேடையேற்றவுள்ளது. இந்நாடகத்தில் தொண்டு அடிப்படையில் பங்குபற்றி நடிப்பதற்கு நடிகர்கள் தேவை. நடிப்புத்துறையில் ஆர்வமும் சமூகசேவை மனப்பான்மையும் உடைய அனைவரும் (வயதெல்லை இல்லை) வரவேற்கப்படுகின்றார்கள்.**

**03-03-2000 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் (UNDP),
யாழ். புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் (JRRP)
125, கோயில் வீதி, நல்லூர்.

(சி/11140)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 03 - 06 - 1945



இறப்பு 27 - 01 - 2000

### திருமதி சங்கரன் நாகம்மா
(அனலைதீவு)

**ஆழ்கடல் வற்றும், வற்றாது உங்கள்**
**அன்பும் அரவணைப்பும் எம்மையெல்லாம்**
**ஆறாத் துயரில் மூழ்கவிட்டு ஆண்டவன்**
**பாதம் சேர்ந்த அம்மாவே! உங்கள்**
**ஆத்மா சாந்திபெற என்றென்றும்**
**இறைவனை வேண்டுகின்றோம்.**

**இன்று (26-02-2000) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

இவர் காலஞ்சென்றவர்களான வேலன் - இராமி தம்பதிகளின் அன்புமகளும், கந்தன் சங்கரனின் அன்பு மனைவியும், பிள்ளையான், முருகேசு, காலஞ்சென்ற இளையவன், காலஞ்சென்ற ஐயன் ஆகியோரின் அன்புத் தங்கையும், திருமதி தெ.நகுலாம்பிகை, சௌந்தரராஜன், காலஞ்சென்ற துரைசிங்கம், தர்மலிங்கம் (சங்கர்-சுவிஸ்), செல்வநாயகம் (சுவிஸ்), செந்தமிழ் (ஜேர்மனி), கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெய்வேந்திரன் (சரவணை), நாகராணி (அனலைதீவு), சத்தியவாணி (வவுனியா),கலையரசி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், தாட்சாயினி, வசந்தன், ரேவந்தன், கிருபானந்தவேல்,விஜிதினி, நிலானி, நிரோஷன், குகேந்திரன், மோகனன், ரேணுகா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

**கணவன், மகள், மகன்மார்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

கந்தன் சங்கரன்,
5ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

(73708)

# இராணுவ சோதனை அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாக இராணுவ சோதனைகள் அதிகரித்துள்ளன.

சுன்னாகம், மருதனார்மடம், மல்லாகம் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மீண்டும் வீதிக்கு குறுக்கே பரல்கள் வைக்கப்பட்டு வீதித்தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வீதியில் செல்வோர் அடையாள அட்டைச் சோதனையுடன் உடல் சோதனைக்கும் உள்ளக்கப்பட்டு வருகின்றனர். (இ-86)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1935 - 06 - 19



மறைவு 2000 - 01 - 28

### திருமதி அரியநாயகம் இராசம்மா

**28-01-2000 அன்று காலமான எமது குடும்பத் தலைவியின் மரணச்செய்தி கேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**அத்துடன் எமது இல்லத்தில் நாளை (27-02-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பொ.அரியநாயகம்** (கணவன்),
**பிள்ளைகள்.**

முனிகோவிலடி,
இருபாலை,
கோப்பாய்.

(73902)

## நெஞ்சை விட்டகலா மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1948 - 11 - 13 உதிர்வு 1997 - 02 - 26

### அமரர் சின்னத்துரை நடராசா
(முகாமையாளர், AM. AM. Pee. Colombo)
(நயினாதீவு)

திதி:- 23-02-2000

**இடியெனவே அன்றெழுந்த முகாரியில் அமிழ்ந்து**
**இன்று ஆண்டுகள் மூன்று ஆனதுவோ**
**இனிய நின் வதனம் காண்பதெப்போ?**
**இறைவனைக் கையெடுப்போம்**
**நித்தம் உங்கள் ஆத்ம சாந்திக்காய்!**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

உங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**உடன் பிறப்புக்கள்,**
**உற்றார், உறவினர்.**

சி.கோவிந்தப்பிள்ளை,
பிரம்படி, கொக்குவில்.

(73894)



வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் புதிதாக அமைக்கப் பட்ட, மினி சத்திரசிகிச்சைக் கூடம், நூலகம், நோயாளர் வாகனத்தரிப் பிடம், ஆண்கள் விடுதி என்பன அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வுகள் தொடர்பான விழாவில், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நிர்வாக அதிகாரி என்.மகேந்திரன் உரையாற்றுவதையும், அருகில் இவ்விழாவுக்கு தலைமை தாங்கிய வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் அமர்ந்திருப்பதையும் ஆண்கள் விடுதிக் கட்டடத்தை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத் தொடர்பு அதிகாரி செல்வி கில்டா, நாடா வெட்டித்திறந்து வைப்பதையும் காணலாம்.
(படம்:- நெல்லியடி செய்தியாளர். இ.கிருபாகரசூரியன்)


# புனித சலேசியார் ஆலயத்திறப்புவிழா சங்கானை

சங்கானை புனித சலேசியார் ஆலயத் திறப்பு விழாக் கொண் டாடும் பங்கு மக்கள், சாந்தியும் அமைதியும் ஏற்பட்டு சுபீட்சத் துடன் வாழ புனித சலேசியார் அருள்பாலிப்பாராக.

## 'வாழ்த்து வழங்குவோர்'

| | | |
|---|---|---|
| நிர்றா | மேரி | எட்வேட்டாசன் |
| எண்ணை ஆலை | சைவ உணவகம் | உணவகம் |
| சங்கானை. | சங்கானை. | சங்கானை. |




# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லலும்



மலர்வு 07 - 02 - 1950

உதிர்வு 27 - 01 - 2000

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி

## சகுந்தலாதேவி இராசேந்திரன் அவர்கள்

திதி: 27-02-2000

பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், கணவனுக்கு மந்திரியாய், பிள்ளைகட்கு ஆசானாய், எமது குடும்பத்தின் ஒளிமிகு குலவிளக்காய் யாவரும் போற்றத் திகழ்ந்து எமக்கெல்லாம் நீங்காத அன்பையும் நிறைவான அறிவையும் ஊட்டி வாழவழிகாட்டிய தியாகச் சுடராய் வாழ்ந்து எம்மையெல்லாம் எதிர்பாராத ஆற்றொணாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வத்துக்கு எமது ஆறாக் கண்ணீரைக் காணிக்கையாகச் செலுத்தி, அன்னாரின் ஆத்மா விநாயகரின் திருவடிகளில் சென்று முத்திநிலைப்பேறு பெறப் பிரார்த்திக்கின்றோம்.

இறைவனடி சேர்ந்த அன்புத் தெய்வமாகிய எங்கள் அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ்வேளையில், அவர் மறைந்த செய்தி கேட்டு உடனடியாக நேரில் வந்து அரும்பெரும் பணிகளை ஆற்றியவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, தபால் மூலமாகவும், இரங்கல் மடல்கள் அனுப்பியும், மலர்வளையங்கள் சாத்தியும், எமது துயரில் பங்குபற்றி வேறுபல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மற்றும் அனைத்து ஈரம் நிறைந்த உள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, 27-02-2000 ஞாயிற்றுக் கிழமை (Sunday) அன்று பம்பலப்பிட்டி சனசமூகக் கூடத்தில் (Bampalapitty Govt Flats Community Centre Hall) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகள், நன்றி நவிலல்களோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

வே.இராசேந்திரன் (கணவர்)
(மேலதிக பொதுமுகாமையாளர், இலங்கை மின்சாரசபை)
ரமேஷ் (மகன் - கணனி பொறியியலாளர், UK)
ஷர்மிலா (மகள் - யாழ். பல்கலைக்கழகம்)
ஜெனா (மகள் - ACBT/CIMA)

புகையிரத வீதியூடாக,
இல.34, ஸ்கூல் அவெனியு,
தெஹிவளை.

(C/11136)

# 31 ஆம் நாள் நினைவு கூரல்



பிறப்பு 07 - 02 - 1950

இறப்பு 27 - 01 - 2000

திருமதி

## சகுந்தலாதேவி இராசேந்திரன்

திதி: 27-02-2000

எமது முன்னாள் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளரும், தற்போதைய மேலதிகப் பொதுமுகாமையாளருமாகிய (கொழும்பு) திரு.வேலுப்பிள்ளை இராசேந்திரன அவர்களின் பாசமிகு துணைவியாரின் 31 ஆம் நினைவு நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறுப்பினர்கள்
வடமாகாண ஊழியர் நலன்புரிச்சங்கம்,
இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்.

(C/11162)

## மீண்டும் உண்ணாவிரதத்தில் இணைவு

வவுனியா,பெப்.26

உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் புதுக்குடியிருப்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உபாலி சோமபால என்ற உண்ணாவிரதி உடல் நிலை தேறியதை அடுத்து நேற்று முன்தினம் மீண்டும் உண்ணாவிரதத்தில் இணைந்து கொண்டார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வாகனத்தில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் அழைத்து வரப்பட்ட அவர் உண்ணாவிரதிகளுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டார் எனக் கூறப்பட்டது.

அதே நேரம் - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் நேற்றுப் பல தடவைகள் மருத்துவர்களுடன் சென்று உண்ணாவிரதிகளைப் பரிசோதனை செய்தனர். (இ-3-4)

## வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா,பெப்.26

கடந்த 22ஆம் திகதி திருகோணமலை அருவிமலைப்பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் தமது தரப்பில் லெப்டினட் செங்கதிர் (இராசதுரை ஜெகநாதன் - திருகோணமலை) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-4)

## கிண்ணியாவில் தாக்குதல்!

திருகோணமலை,பெப்.26

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவில் அமைந்துள்ள கடற்படையினரின் காவல் நிலையம் மீது நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலின் போது இரு கடற்படையினர் உயிரிழந்தனர் என்று செய்திகள் தெரிவித்தன. (இ-3-7)

## உரும்பிராயில் இருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.26

உரும்பிராய்ப் பகுதியில் கடந்த புதன்கிழமை வெற்றிலை வியாபாரி ஒருவரும், சைக்கிள் திருத்துநர் ஒருவரும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த வெற்றிலை வியாபாரியான சிவலிங்கம் பிரபாகரன் (வயது 21) என்பவரும், உரும்பிராய் யோகபுரத்தைச் சேர்ந்த சைக்கிள் திருத்துநரான இராசதுரை சேகர் (வயது 28) என்பவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான ரசிதும் இவர்களின் குடும்பத்தினரிடம் படையினரால் வழங்கப்பட்டது.

இக்கைதுகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## பேடன்பவல் தினவிழா

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சாரணர் இயக்க ஸ்தாபகர் பேடன்பவலின் 143ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

இந்த நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் அன்றையதினம வழங்கப்படும். (உ-8-133)

## நாடகப்போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆரம்பக்கல்வி நாடகப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறும்.

மேற்படி நாடகங்கள் ஒவ்வொன்றும் 15 நிமிடம் கொண்டவையாக இருக்கும். நாடகத்திற்குத் தேவையான பக்கவாத்தியங்கள் அந்தப் பாடசாலைகளே ஒழுங்கு செய்து கொண்டுவருதல் வேண்டும் என வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-8-133)


COMPUTER TYPING

உங்களுக்கு தேவையான ஆவணங்கள், கடிதங்கள், விண்ணப்பங்கள் போன்ற அனைத்தும் கணனி மூலம் சிறந்த முறையில் அச்சு பதிப்பித்து தரப்படும்.

பத்மாஸ்
28/1, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் சின்னக்குட்டி குண்டுமணி

மலர்வு 15-04-1933

உதிர்வு 27-01-2000

திதி:- 26-02-2000

குடும்பம் எனும் கோயிலின்
கோபுரமாய் நீங்கள் இருந்து
சிறந்த சிற்பங்களாய்
சிரித்து நமை வாழவைத்தவரே!
ஆசானாய் வீற்றிருந்து
அறிவுரைகள் தந்தவரே
வாடுகின்றோம் நாமிங்கு
வழிகாட்ட நீங்களின்றி!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி: கமலம்
பிள்ளைகள்: புஷ்பராணி, கனிலதாசன், கமலமணி, கலாராணி, அனுசாராணி.
மருமகன்: செல்வநாதன்
பேரன்: தமிழ்க்குமரன்

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(73932)

# 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



திருமதி

## சந்தானலக்ஷ்மி நடராஜா

மலர்வு 16-05-1945

உதிர்வு 27-01-2000

உறவிற்கு உயிர்ப்பாக அன்பை விதைத்தீர்
உயர்வான பண்பினால் மனங்களில் நின்றீர்
தயங்காது கடமைகளை தலையாய கடனென்றீர்
தற்காத்து தன்பிள்ளையாய் தயவுடனே பேணினீர்
துடுக்கான சிந்தனையால் திகைத்த தேனோ
துடியாகத் துடிக்கின்றோம் துன்பத்தில் ஐயோ!
மங்காத குலவிளக்கே மனதினுள் புதைந்த தென்னோ
மனமுவந்து சொல்லாமல் மாயமாக மறைந்தீர் ஐயோ!
இறைவன் இட்ட கட்டளையின் நியதி இதுவோ?
இறைமேன்மை கண்டு நீர் சாந்தியில் வாழ்க!

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் நன்றி கூறுவதுடன் இன்று (26-02-2000) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல.123, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
சோதி குடும்பத்தினர்

(C/11166)

## அதிரடி ராங்கு

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவன் வரப்பிரகாஷ் 'ராகிங்' கொடுமையால் அநியாயமாக சாவைத் தழுவிக் கொண்டதை அடுத்து யாழ்ப்பாணத்திலும், வெளியூர்களிலும் 'ராகிங்' கொடூரம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது உண்மைதான். பொதுமக்களின் உணர்வெழுச்சி, கோபம் காரணமாக சில பல்கலைக்கழக 'சாத்தான்கள்' அடங்கிப்போனார்கள். குறிப்பாக வரப்பிரகாஷைப் பறிகொடுத்த பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' பிசாசுகள் அடங்கிப்போயின. அங்கு இது விடயத்தில் சட்டரீதியான கெடுபிடிகளும் இறுக்கப்பட்டதை அடுத்து சிரேஷ்ட மாணவர்கள் தமது அத்து மீறல்களை அடக்கி வாசித்தனர்.

ஆனால் அவர்களில் சிலர் இங்கு யாழ். வந்ததும் - இங்குள்ள யாழ். பல்கலைக்கழக மாணவரின் சகவாசம் காரணமாகவோ அல்லது பேராதனை இறுக்கம் இங்கு இல்லாத காரணத்தினாலோ 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய' கதையாகத் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகக் கல்விப் போதனைகளுக்கு மத்தியில் தமது களநிலைப் பயிற்சிக்காக யாழ். வந்த சிரேஷ்ட மாணவர்களே, பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு இனிமேல் அனுமதி பெற்றுச் செல்லக்கூடிய புதுமுக மாணவர்கள் என்று கருதுவோரை அவரது இடங்களுக்குச் சென்று தேடிப்பிடித்து 'ராகிங்' கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

இத்தகைய மாணவர் ஒரு தொகுதியினரை 'ராகிங்'கிற்கு வசதியாக இன்று ஓரிடத்துக்கு சமுகம் தருமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. அவ்வப்போது சிலரின் வீடுகளுக்குப் போய் தொல்லை கொடுப்பதாகவும் தகவல்.

இத்தகைய 'ராகிங்' சாத்தான்களை அவர்கள் ஒன்று திரளும் இடத்தில் வைத்து 'நல்ல பாடம்' படிப்பித்து, 'நல்ல ஹோட்டலில் சாப்பாடும்' கொடுத்தனுப்புவதற்கு உள்ளூர் குழு ஒன்று தயாராகி வருவதாகவும் தகவல்.

பெண்களை 'ராகிங்' செய்ய முற்பட்ட சிலரை பார்த்துக் கொண்டு நின்ற அயல் வீட்டுக்காரர் ஒருவர் வாளுடன் கலைத்தது போன்ற சம்பவங்களும் இனிமேல் அடிக்கடி நிகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

* * *

யாழ் கல்வித்துறையில் ஒரு சாபக்கேடு, பாடசாலைகளும், அதிபர்களும் பாடசாலையில் நடைபெறும் பொது நிகழ்வுகளை மேலதிகாரிகளுக்குப் பந்தம் பிடிக்கும் விழாவாகவும், அவர்களுக்கு 'முதுகு சொறியும்' வாய்ப்பாகவும் பயன்படுத்தி வருவதுதான் அது.

பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டியாகட்டும், பரிசளிப்பு விழாவாகட்டும், கண்காட்சியாகட்டும், ஆங்கிலதின - தமிழ்தின விழாக்களாகட்டும் பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர் என்று கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் என்று கல்வி அதிகாரிகளின் பெரிய பட்டியலே "நோட்டீஸில்" இடம்பெற்றிருக்கும். ஏதோ இந்த அதிகாரிகளுக்குக் கௌரவம் கொடுத்து, பந்தம் பிடிப்பதற்குத்தான் பாடசாலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றனவோ என்ற மயக்கத்தைக் கூட அவை தரத் தவறுவதில்லை.

சில சமயங்களில் இங்கு 'உதயன்', 'சஞ்சீவி' அலுவலகத்துக்கு வரும் பாடசாலை நிகழ்ச்சிகள் பற்றிய நோட்டீஸ்களில் ஒரே நேரத்தில் நடக்கும் இரண்டு, மூன்று நிகழ்ச்சிகளுக்கு ஒரே அதிகாரியின் பெயர் பிரதம விருந்தினராகக் குறிப்பிடப்பட்டிருக்கும். கடைசியில் விசாரித்துப் பார்த்தால் மூன்று நிகழ்ச்சியிலும் தலைகாட்டி, பெருமையோடு கழுத்தில் மாலையை வாங்கி - மூன்று இடத்திலும் முழு நேரமும் நிற்காமல் - மூன்றையுமே குழப்பியிருப்பார் அந்த அதிகாரி.

இது பொதுவாக இங்கு ஐந்து கல்வி வலயங்களிலும் வழமையாக நடப்பதுதான். இன்றுநேற்றல்ல. பல காலமாகவே நடந்து வருவதுதான்.

ஒரு வலயத்தில் நூற்றுக்கு அதிக பாடசாலைகள். இந்தப் பாடசாலைகளின் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் தலைகாட்டிக் கழுத்தில் மாலை வாங்கச் செல்வதால் அதிகாரிகளை அலுவலகங்களில் காணமுடிவதில்லை. பாடசாலை நிகழ்ச்சிகளில் வைபவங்களில்தான் காணலாம் என்ற நிலைமை.

அதுவும் தற்போது பாடசாலைகளில் மும்முரமாக இல்ல மெய்வன்மைப்போட்டிகள் நடைபெற்றுவரும் காலகட்டத்தில் சொல்லவே தேவையில்லை.

ஒரு பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் உடற் கல்விக்குப் பொறுப்பான அதிகாரி கலந்து கொள்வதைப் புரிந்து கொள்ளமுடிகின்றது. வலயப் பணிப்பாளரிலிருந்து ஆசிரிய ஆலோசகர் வரை விருந்தினர் 'அணிவகுப்பு' தேவைதானா? அந்த இடத்துக்குப் பாடசாலை பழைய மாணவரையோ, சமூகத்தின் மூத்த பிரஜையையோ அல்லது ஒரு மூத்த விளையாட்டு வீரரையோ அழைத்து அவரையும் கௌரவித்து அதன் மூலம் பாடசாலையும் சமூகமும் தன்னையும் கௌரவித்துக் கொள்ளலாமே!

இந்த விவகாரத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கத்தின் முன்மாதிரி பாராட்டுக்குரியது. இந்த முதுகு சொறிந்து 'ஐஸ்' வைக்கும் வேலைக்கு அடியோடு இடம்கொடுக்க மறுத்துவிட்டார் அவர்.

"நீங்களே சமூகத்தில் உரியவர்களை விருந்தினராக அழைத்து நிகழ்ச்சிகளை நடத்துங்கள். எனக்கு வேலை இடங்கொடுத்தால் - நேரம் இருந்தால் - பார்வையாளனாக வந்து பார்த்துவிட்டுப் போகிறேன்" என்று 'வெற்றிலை வைத்து' அழைக்க வருபவர்களுக்கு வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியிருக்கிறாராம் அவர்.

மறுபுறத்தில் தம்மைப் பிரதமவிருந்தினர்களாக அழைக்காததற்காக சில அதிபர்கள் மீது 'கறள்' வைத்து, அவர்களை மாட்டிவிடுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கறுவிக் கொண்டு காத்திருக்கும் சில இரண்டாம் மட்ட உயரதிகாரிகளும் நமது கல்வி வலயங்களில் இருப்பதாகப் பெருமிக் கொள்கின்றார் விடயமறிந்த மூத்த அதிபர் ஒருவர்!

* * *

சாதாரண மின்வெட்டுக்கும் மேலதிகமாக சுதுமலைப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. இதனால் பாவனையாளர்களுக்கு எரிச்சலோ எரிச்சல். என்னவென்று விசாரித்துப் பார்த்ததில் சுதுமலை அண்ணாமலை வீதிப் பகுதியில் உள்ள மின் மாற்றிப் பிரதேசத்தில் பிரதான மின் இணைப்புக் கம்பிகளுக்கு இடையே 'சைக்கிள் செயினை' எறிந்து, குறுக்கு மின்னோட்டத்தை ஏற்படுத்தி, மின்சாரத்தைத் துண்டிக்கும் கைவரிசையைச் சில விஷமிகள் அடிக்கடி செய்து வருவதுதான் காரணம் என்பது தெரியவந்தது.

ஒவ்வொரு தடவையும் இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் சென்று திருத்திவிட்டு வந்ததும் விஷமிகள் தமது கைவரிசையைக் காட்டுவதாகப் புகார். கடந்த புதன், வியாழன் இரண்டு நாள்களிலும் கூட இரவு 7.30 மணியளவில் இதே 'குசும்பு' வேலை நடந்துள்ளது. இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் நால்வர்தான் இந்தக் குசும்பைப் பண்ணுவதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

'கள்ளக் கரண்ட்' எடுத்தவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் மின் இணைப்பை மின்சாரசபை அதிகாரிகள் துண்டித்ததால் ஏற்பட்ட புகைச்சலே இந்தத் திருவிளையாடலுக்குக் காரணம் என்றும் கூறப்பட்டது.

இவர்களை யார் திருத்துவது? சட்டம், ஒழுங்கு இப்படிச் சீர்கெட்டால் சமூகத்தின் எதிர்காலம் எங்கே போய் முடியப்போகிறது?

*- மின்னல்.*

## காணாமற்போனவர் வீடு திரும்பினார்

யாழ்ப்பாணம்,பெப்.26

சாவகச்சேரி சரசாலை வடக்கு பகுதியில் இருந்து கடந்த 18ஆம் திகதி காணாமற் போனதாக தெரிவிக்கப்பட்ட அருமைநாயகம் குணசாந்தன் (வயது 35) என்பவர் கடந்த 23 ஆம் திகதி வீடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் காணாமற் போனது தொடர்பாகவும் தற்போது வீடு திரும்பியுள்ளமை தொடர்பாகவும் மனிதஉரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-9)

## பிணை மனு நிராகரிப்பு

கோண்டாவில் பகுதியில் கடந்த மாதம் 26ஆம் திகதி கட்டாக்காலி நாய்களுக்கு நஞ்சூட்டி அழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தாக்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு பிணை வழங்குவதற்கு யாழ். நீதிமன்றம் நேற்றும் அனுமதி மறுத்தது.

நேற்று யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சந்தேக நபர் இரண்டாவது தடவையாக ஆஜர் செய்யப்பட்டார். அப்போதே மீண்டும் பிணை மனு நிராகரிக்கப்பட்டது.

சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-9)

## தாக்குதலுக்கு இலக்கானார்

சங்கானை பிரான்பற்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது சிப்பாய் ஒருவரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு பொதுமகன் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானை, விளாவெளியைச் சேர்ந்த கனகரட்ணம் ஞானசேகரம் (வயது 38) என்பவரே காயமடைந்தவராவார்.

சங்கானைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுற்றிவளைப்புச் சம்பவத்தின் போது பிரான்பற்று கலைமகள் வித்தியாலயப் பகுதியில் வைத்துத் தான் தாக்கப்பட்டதாகவும் -

கையில் காயமடைந்து இரத்தம் வழிந்த நிலையில் உடனடியாக சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் -

தாக்குதலுக்கு இலக்கானவர் தெரிவித்தார்.

சங்கானை வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அன்றைய தினமே அவர் யாழ். வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்டார். (உ-9)

## வவுனியாவில் 34 பொதுமக்கள் தடுத்து வைப்பு

வவுனியாவில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதான 34 பொதுமக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

வவுனியா 211ஆவது படையணி தலைமையகத்தில் 12 தமிழ் பொதுமக்களும் -

வவுனியா பயங்கரவாதத் தடுப்பு முகாமில் 22தமிழ் பொதுமக்களும் - தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் சொன்னார்.

(உ-3)


எமது வீடியோ CD வெளியீடு

அர்ஜுன், ரம்பா நடித்த

* சுதந்திரம்

* தைபொறந்தாச்சு


* ஹேராம்

CD பிரதி

வீடியோ ஆனந்

யாழ் வீதி,

மானிப்பாய். (C/11195)

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த வியாழனன்று திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட திருவள்ளுவர் விழாவில் திருக்குறள் மனன, எழுத்துப் போட்டிகளில் கூடிய புள்ளிகளைப் பெற்ற வித்தியாலய உயர்தர மாணவி செல்வி ஜெயமலர் பத்மநாதனுக்கு யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதல் பரிசான தங்கப் பதக்கத்தை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய முதல்வர் வி.மாணிக்கம், போட்டி அமைப்பாளர் எம்.பி. அருளானந்தன், தங்கப்பதக்கத்தை அன்பளிப்புச் செய்த வர்த்தகர் கு.கங்கைவேணியன் ஆகியோர் காணப்படுகின்றார்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஆறுமுகம் குமாரசுவாமி

(உரும்பிராய் தெற்கு)

**அன்னாரின் ஆண்டுத் திவசக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (26-02-2000) சனிக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்.**

உரும்பிராய் தெற்கு (73998)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டக்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோ.திருநாவுக்கரசு அவர்களின்

**பாசமிகு மைந்தன்**

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்.**

வேலணை ப.நோ.கூ. சங்கம். (74002)

## மரண அறிவித்தல்கள்

### பேதுருப்பிள்ளை சவிரிமுத்து

கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 44, சோமசுந்தரம் அவெனியுவை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுருப்பிள்ளை சவிரிமுத்து நேற்று (25.02.2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிரேஸின் அன்புக் கணவரும், ஸ்ரெலா செல்வநாயகம், காலஞ்சென்ற அன்ரன், பற்றிமா பத்திநாதர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் அந்தோனிப்பிள்ளை செல்வநாயகம் (கொழும்பு), பத்திநாதர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகிலன் (ஜேர்மனி), குமார், அனிற்ரா (ஆசிரியை, ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), அலெக்ஸ், ஜெனிற்ரா, கெனடி, ரொபிற்றா, கிளாரா, குளோறியா, விக்ரோரியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 (மு.ப.) மணிக்கு நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.அலெக்ஸ்
(பேரப்பிள்ளை)

(C/11196)

### திருமதி பாலசிங்கம் செல்வரட்ணம்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம செல்வரட்ணம் 24-02-2000 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் பாலசிங்கத்தின் அன்புமிகு மனைவியும் நமசிவாயம் (கஜிதன் வர்த்தக நிலையம் - புன்னாலைக்கட்டுவன்), நகுலேஸ்வரி (தேவா - கொழும்பு), சர்வேஸ்வரி (குஞ்சு - நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயகௌரி, நகுலேஸ்வரன் (மக்கள் வங்கி - கொழும்பு), பூபாலசிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெனார்த்தனன், துஷ்யந்தினி, கஜேன், சாளினி, கஜிதன், பிரியா, தனுசியா, நகுந்தன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பா. நமசிவாயம்
(கஜிந்தன் வர்த்தக நிலையம் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (73995)

### கனகசபை நித்தியானந்தன்

**(ஆனந்தன்)**

மாவிட்டபுரம் மடத்தடியை நிரந்தரவதிவிடமாகவும், நீர்வேலி வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகசபை நித்தியானந்தன் நேற்று (25.02.2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் மாவிட்டபுரம் கனகசபை தம்பதிகளின் மகனும், ஸ்ரீதேவியின் அன்புக் கணவரும், வேலணை கந்தசாமி ஆச்சாரி தம்பதிகளின் மருமகனுமாவார்.

இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஸ்ரீதேவி
(மனைவி)

காமாட்சி அம்பாள் கோவிலடி,
நீர்வேலி (74000)

யாழ். குடாநாட்டுக்கு

# செய்மதி ஊடாக தொலைபேசி வசதி!

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டுக்கும் வெளி இடங்களுக்குமான தொலைபேசி இணைப்பு வசதியை செய்மதி ஊடாக வழங்கும் திட்டம் அனேகமாக அடுத்த ஒக்டோபரில் சாத்தியமாகும்.

ரெலிகொம் நிறுவனப் பிரதிமுகாமையாளர் எஸ்.கனகசூரியர் சஞ்சீவிக்கு இத்தகவலை தெரிவித்தார்.

தற்போது - யாழ்ப்பாணம் - ஆனையிறவு - மடுகந்தை - அநுராதபுரம் - கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோபுரங்கள் ஊடாக நுண்ணலை (Micro wave) மூலம் குடாநாட்டுக்கும் வெளிஇடங்களுக்கும் இடையில் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வசதிக்கு மேலதிகமாக, பாதுக்கை செய்மதி நிலையம் ஊடாக குடாநாட்டுக்கு தொலைத்தொடர்பு வசதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கனகசூரியர் தெரிவித்தார்.

செய்மதி ஊடான சேவைக்கு கூடுதலான செலவு ஏற்படும் என்றும்-

இதன்காரணமாக கட்டணம் அதிகரித்து இருக்கும் என்றும் - அவர் சொன்னார். (உ-3)

## வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

காரைநகரில் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்துக்குச் செல்லும் வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்து வருடகாலமாக புனரமைக்கப்படாது மிக மோசமான நிலையில் உள்ள இந்த வீதியைத் திருத்துவதற்காக ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.ஜெகன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளார்.

இந்த வீதியைப் புனரமைக்கும் பணிகளை வலி.மேற்குப் பிரதேச சபைத்தலைவர் என்.திரிலோகநாதன், வீதி அபிவிருத்திச்சபை பொறியியலாளர் சகிதம் நேற்று முன்தினம் பார்வையிட்டார். (உ-3)

## இந்தியா முன்னணி

மும்பாய்,பெப்.26

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் மும்பாயில் நடைபெற்றுவரும் 'பெப்ஸி' கிண்ணத்துக்கான முதலாவது டெஸ்ட்டில் இரண்டாம் நாளான நேற்று தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

முதல்நாள் ஆட்டத்தில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 225 ஓட்டங்களைப் பெற்றது தெரிந்ததே.

முதல் இன்னிங்ஸில் 49 ஓட்டங்கள் முன்னணியில் நிற்கும் இந்திய அணி நேற்று ஆட்டநேர இறுதியில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த டெஸ்ட்டின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று தொடரும். (உ-4)

## புறக்கோட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறக்கோட்டைப் பகுதியில் உள்ள 800க்கு மேற்பட்ட கடைகளின் உரிமையாளர்கள் கடையடைப்பை மேற்கொண்டனர்.

வியாபாரம் மும்முரமாக நடைபெறும் 4ஆம்,5ஆம் குறுக்குத் தெரு, பிறின்ஸ் வீதி, ஹெய்சர் வீதி ஆகிய பகுதிகள் இதனால் வெறிச்சோடிக் காணப்பட்டன. (உ-3)

## இங்கும் சாரதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்தப் பணி மீள ஆரம்பிக்கப்படுகின்றது என்றும் - அவர் மேலும் தகவல் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு ஜனவரி முதல் 98ஆம் ஆண்டு ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் சாரதி அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு முதலில் பரீட்சை நடத்தப்படவிருக்கின்றது.

பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்கள் முதலில் வீதி ஒழுங்குமுறை பற்றிய எழுத்துப்பரீட்சை ஒன்றுக்குத் தோற்றவேண்டும் என்றும் -

அதன்பின்னர் வாகனம் ஓட்டும் செயல்முறைப்பரீட்சை நடத்தப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு பரீட்சை நடத்தி முடிக்கப்பட்ட பின்பே புதிய விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன என்றும் அவர் சொன்னார். (உ-3)

## 'லங்கா ராணி'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இந்தக் கப்பல் மூலமான பயணிகள் சேவைக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வழித்துணையைப் பெற்றுக் கொள்வதில் தடங்கல் நிலவுவதால் சேவை ஆரம்பமாவது ஒரு சில தினங்கள் தாமதிக்கக் கூடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பல் 25 'நொட்ஸ்' வேகத்தில் செல்லக்கூடியது. இவ்வளவு வேகத்தில் செல்வதால் ஒரு மணி நேரப் பயணத்துக்கு ஒரு தொன் டீசல் செலவாகும் என மதிப்பிடப்படுகின்றது. எனவே ஒரு வழிப் பயணத்துக்குக் குறைந்தது ஐந்து தொன்னுக்குக் குறையாத டீசல் தேவைப்படும் எனக் கணக்கிடப்படுகிறது.

இதனால் பயணிகளிடமிருந்து டிக்கெட் கட்டணமும் அதிகமாக பெற வேண்டியிருக்கும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)


எமது இன்றைய வீடியோ CD வெளியீடு

கமலின் ஹேராம்
(தமிழ்)

பிரதிகள் பி.ப. 3 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/11200)



சிவா திரையில்
சிவன்கோவிலடி - யாழ்.
தினசரி - 10.30, 2.30

கமலின் ஹேராம்
(தமிழ்ப் படம்)
புதிய வெளியீடு
(C/11201)



DCS இன்

புலமைப்பரிசில் திட்டம் 2000/2001

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தில் சித்திபெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள் 04.03.2000 அன்று ஆரம்பமாகவுள்ளதால் 27.02.2000க்கு முன்னர் மாணவர்கள் தங்கள் பதிவினை கீழ்வரும் எமது கிளைகளில் மேற்கொள்ளலாம்.

A/L 2000 மாணவர்கள் குறித்த (27.02.2000) திகதிக்கு முன்னர் பதிவு செய்து A/L 2000 பரீட்சை முடிவடைந்த பின்னர் ஆரம்பமாகும் விசேட பிரிவில் இணைந்து கொள்ளலாம்.

Director
DCS

124/2, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

M.M.V. வீதி,
நெல்லியடி.

(73997)


# தமிழக இடைத்தேர்தல்களில் தி.மு.க. கூட்டணிக்குப் பெருவெற்றி!

தமிழ்நாட்டில் இடைத்தேர்தல்கள் நடைபெற்ற மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் நேற்று வாக்குகள் எண்ணப்பட்ட இரண்டு தொகுதிகளிலுமே - திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றியீட்டி, அ.தி.மு.க. அணிக்கு அதிர்ச்சித் தோல்வியைத் தந்திருக்கின்றது.

நெல்லிக்குப்பம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் வி.ஸி.சண்முகம், அ.தி.மு.க. வேட்பாளர் வேலாயுதத்தை 14ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்.

அறந்தாங்கித் தொகுதியில் தி.மு.கவின் தோழமைக் கட்சியான எம்.ஜி.ஆர்.அ.தி.மு.கவின் வேட்பாளர் அன்பரசன், அ.தி.மு.க. வேட்பாளர் ராஜா பரமசிவத்தை 26ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்.

எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க. தலைவர் திருநாவுக்கரசு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து, தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததால் அறந்தாங்கியில் இடைத்தேர்தல் நடைபெற்றது.

மற்றொரு இடைத்தேர்தல் நடைபெற்ற 'திருச்சி - 2' தேர்தல் தொகுதியில் வாக்கு எண்ணும்பணி நேற்று நடைபெறவில்லை.

இங்கு வாக்களிப்பில் தில்லுமுல்லு நடந்திருப்பதாக அ.தி.மு.க. முறைப்பாடு செய்ததை அடுத்து வாக்கு எண்ணும் பணியை தேர்தல் ஆணையகம் இடைநிறுத்தி வைத்துள்ளது. தேர்தல் ஆணையகத்தின் விசேட பிரதிநிதி ஒருவர் அங்கு நடந்த விடயங்கள் குறித்து விசாரிப்பதற்காக நேற்று அங்கு விஜயம் செய்தார்; விசாரணைகளை நடத்தினார்.

அவரது விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் தேர்தல் ஆணையகம் வாக்கு எண்ணுவது குறித்து முடிவு செய்யும்.

எனினும் 'திருச்சி - 2' தொகுதியிலும் தி.மு.க. கூட்டணியே வெற்றியீட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

தி.மு.க. கூட்டணியின் இந்த வெற்றி, மிக அண்மையில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. பக்கம் சாய்ந்த - மூப்பனார் தலைமையிலான - தமிழ் மாநில காங்கிரஸுக்கும் பலத்த அடி என்று விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர். (உ)

# ஹரியானா, ஒரிஸா மாநிலங்களில் பாரதீய ஜனதாக் கூட்டணி வெற்றி!

## பீஹாரில் லாலுவின் கட்சியுடன் கடும்போட்டி

இந்தியாவில் நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் இரண்டில் பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய ஜனநாயக முன்னணி பெரு வெற்றியீட்டியுள்ளது. பீஹார் மாநிலத்தில் அந்தக் கட்சிக் கூட்டணி முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

சிறிய மாநிலமான மணிப்பூரில் மட்டும் காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியைத்தக்க வைத்திருக்கும் நிலையை எட்டியிருக்கின்றது.

### ஹரியானா

ஹரியானாவில் பாரதீய ஜனதாவின் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியைத் தக்க வைப்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

90 உறுப்பினர்கள் கொண்ட சட்டசபையில் நேற்று முன்னிரவு வரை வெளியான முடிவுகளில் 51 ஆசனங்களை இந்த அணி வென்றுவிட்டதால் இந்த அணியைச் சேர்ந்தவரும் இந்திய லோக் தள் தலைவருமான ஓம் பிரசாத் சௌத்தாலா மீண்டும் முதல்வராகின்றார்.

எனினும் அங்கு அவரது கட்சிக்கு தனித்துக் கிடைத்துவரும் வெற்றி பாரதீய ஜனதாக்கட்சியைக் கைவிட்டுவிட்டு அவர் தனியாக ஆட்சி அமைக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

### ஒரிஸா

ஒரிஸாவிலும் பிஜு ஜனதா தள்ளுடன் கூட்டுச் சேர்ந்து பாரதீய ஜனதா அமோக வெற்றியீட்டியுள்ளது.

பிஜு பட்நாயக்கின் மகனும், பாரதீய ஜனதா தலைமையிலான மத்திய அரசின் அமைச்சருமான நவீன் பட்நாயக் அங்கு முதல்வராகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

147உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் பிஜு ஜனதா தள் - பாரதீய ஜனதா கூட்டணிக்கு நூறுக்கும் அதிக ஆசனங்கள் கிடைக்கும் நிலை உள்ளது.

### பீஹார்

பீஹாரில் லல்லு பிரசாத் யாதவ் தலைமையிலான - ஆளும் ராஷ்டிரிய ஜனதா தள் கட்சிக்கும் பாரதீய ஜனதாக்கட்சிக் கூட்டணிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகின்றது.

இரு கட்சிகளும் தலா 114 தொகுதிகளில் முன்னணியில் இருந்தன.

காங்கிரஸ் - மார்க்ஸிஸ்ட் கட்சிக்கூட்டணி 22 தொகுதிகளிலும், உதிரிக் கட்சிகள் ஐம்பதுக்கும் அதிகதொகுதிகளிலும் முன்னணியில் இருந்தன.

உதிரிக் கட்சிகளின் உதவியுடன் ராஷ்டிரிய ஜனதா தள் அல்லது பாரதீய ஜனதாக் கூட்டணி அங்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்புக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### மணிப்பூர்

அறுபது உறுப்பினர்களைக் கொண்ட மணிப்பூர் சட்டப்பேரவையில் காங்கிரஸ் கூட்டணிக்கு பெரும்பான்மை கிட்டுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. அங்கு காங்கிரஸ் தனது ஆட்சியைத் தக்க வைத்துள்ளது. (உ)

## யுத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பில் உள்ள ஓர் இடத்தில் அவர்கள் ஆரம்பித்த போராட்டம் 16ஆவது நாளை எட்டிய நிலையில் -

அங்கு விஜயம் செய்த அவர்களது உறவினர்களின் வேண்டுகோளுக்கிணங்க நேற்றுக்காலை தமது போராட்டத்தை இடைநிறுத்தினர்.

தம்மை விடுவிக்க அரசு 15 தினங்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் புதிய கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

அவ்வாறு தாம் விடுவிக்கப்படாவிட்டால் நீராகாரமின்றி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

யுத்தக்கைதிகளைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடி சேமநலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் ஏற்பாட்டில் அங்கு அழைத்து வரப்பட்டுள்ள அவர்களின் உறவினர்கள் தொடர்ந்து புதுக்குடியிருப்பிலேயே தங்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து தெற்கே அவர்கள் நேற்றுப் புறப்படுவதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் புறப்படவில்லை.

நாளைமறுதினமே அவர்கள் புறப்படுவர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (உ-3-10)

## புனாணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டனர்.

சுமார் ஐம்பதுக்கு அதிக ஷெல்கள் புனாணை முகாம் மீது விழுந்து வெடித்ததாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

படையினரும் பதிலுக்கு காட்டுப்பகுதி மீது அரைமணி நேரம் விடாது ஷெல் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-7-21)

## சல்லியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) - பட்டதாகவும் - சொல்லப்பட்டது.

இந்த அனர்த்தங்களை அடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நகரில் உள்ள பாடசாலைகளில் தஞ்சம் அடைந்திருப்பதாகவும் - கூறப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்கள் ஈ.பி.டி.பி. அமைப்பினிடமும், அரச அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளதுடன் நிவாரண உதவியும் கோரியுள்ளனர்.

அதேசமயம் அங்கு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது கைது செய்யப்பட்ட ஆறு பேர் குறித்துத் தகவல் ஏதும் இல்லை என்று மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3-150)

## மரண அறிவித்தல்கள்

### பாலசுப்பிரமணியம் தவராசா

(முன்னாள் ஊழியர், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தவராசா (முன்னாள் ஊழியர், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்) நேற்று (25-02-2000) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் முருகையா பாலசுப்பிரமணியம் - காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அருமைப் புதல்வனும் தவமலர், தவராணி (ஆஸ்திரேலியா), தயாழினி (கொழும்பு), ஸ்ரீதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலச்சந்திரன் பூபாலசிங்கம் (ஆஸ்திரேலியா), சிவாகரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கஜந்தினி, நிரோசா, பானுசன், மகிசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா.பாலச்சந்திரன்,
(மைத்துனர்)

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
(C/11198)

### சின்னத்துரை இராசேந்திரம்

(பால்கார அண்ணையா)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசேந்திரம் (பால்கார அண்ணையா) நேற்று (25.02.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26-02-2000) சனிக்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.மயில்வாகனம்
(மைத்துனர்)

(C/11199)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சிகை

மானிடர்க்குத் தனியழகு நடையழகு.
நடையழகிற்குத் தேவை பாதணிகளின் அழகல்லவா?
உங்கள் பாதங்களிற்கு ஏற்றவாறு வண்ண வண்ண நிறங்களில் விரும்பிய டிசைன்களில் உங்கள் பாதங்களை மெருகூட்ட இன்று முதல் நீங்கள் நாடவேண்டிய இடம் -



கணபதி சூ சென்ரர்
இல. 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(586172)



# ரீ.விக்கள் திருடும் குழந்தைப் பருவம்!

## கருத்துக் கலசம் — மயூரா

### மனச்சாட்சி நீதி

**ஒரு செய்முறை சரியானதா அல்லது தவறானதா என்று நமக்குச் சொல்வதே மனச்சாட்சி ஆகும்.**

**- அறநெறி.**

நீங்கள் இவ்வாறு செய்து விட்டீர்களே, உங்களுக்கு மனச்சாட்சி இருக்கிறதா? - என்று தவறு செய்தவரிடம் கேட்கிறோம். நல்லதையும் கெட்டதையும், தவறானதையும் சரியானதையும் வகுப்பதும் சீர்செய்து பார்ப்பதும் மனச்சாட்சி ஆகும்.

குற்றம் செய்தவனாகச் சந்தேகிக்கப்படும் ஒருவன் மீது வழக்குத் தொடரப்படுகிறது. குற்றச்சாட்டுக்களை அவ்வாறே உள்வாங்கிக் கொண்டு நீதிபதி தீர்ப்பு வழங்குவதில்லை. சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களைச் சட்டத்தின் அடிப்படையில் ஆராய்ந்து, சரி பிழையை அதற்கேற்றவாறு தீர்மானித்துத் தமது தீர்ப்பை வழங்குகிறார். அவரது தீர்ப்பு ஏற்கனவே வகுக்கப்பட்ட சட்டத்தின் வரம்புக்குள் அடங்கியதாகவே அமையும்.

நீதிமன்றம் ஓர் அமைப்பு அல்லது நிறுவனம். அந்த நிறுவனம் சட்டங்களின் வழி நின்று பிழை எது, சரி எது என்று தீர்மானிக்கிறது. ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு நீதிமன்றம் எனலாம். தனிமனிதனின் நீதி அவனது மனச்சாட்சியின் வழி நின்று பிறக்கிறது.

சட்டம் பல மனிதர்கள் கூடி, சேர்ந்து ஆராய்ந்து தீர்மானித்து இயற்றுவது. மனச்சாட்சி அவ்வாறன்று. ஒவ்வொரு மனிதனும் தனக்கென வகுத்துக் கொள்வது. சட்டம் பொதுவானது. மனச்சாட்சி தனிப்பட்டது.

சட்டங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுவது வழமை எனினும் அடிப்படை நீதிகள் பொதுவானவையாக இருப்பதை அவதானிக்கலாம். அதே போன்று மனச்சாட்சி மனிதனுக்கு மனிதன் வேறுபடுவது உண்டு. ஒவ்வொருவரும் தத்தமது நிலையில் நின்றே - தமது தன்மைக்கு உடன்பாடான வகையிலேயே - தமது மனச்சாட்சியை வகுத்துக் கொள்கிறார்கள்.

எனக்கு உண்பதற்கு உணவில்லை; பசி வந்த போது அடுத்தவனின் உணவைத் திருடிச்சாப்பிட்டேன். அவ்வாறு செய்ததில் தவறு எதுவுமில்லையே என்கிறது சம்பந்தப்பட்டவரின் மனச்சாட்சி.

ஆனால் பொதுவான நீதி என்ன சொல்கிறது? உடையவனின் - உரிமையாளனின் - அனுமதி இன்றி அவனது உணவைத் திருடுவது குற்றம் என்பதே சட்டத்தின் நீதி.

கஞ்சத்தனமுள்ளவனின் மனச்சாட்சி ஒரு கொடைவள்ளலின் மனச்சாட்சியை விட முழுக்க முழுக்க முரணானது. ஆனால் அவர்கள் இருவரின் மனச்சாட்சிகளில் எது உண்மையான நீதி என்பதனைப் பொது நீதியின் அடிப்படையிலேயே தீர்மானிக்க வேண்டும்.

தனது செய்கைகளைச் சரிப்படுத்தும் சார்புடை மனச்சாட்சி நீதியான மனச்சாட்சி ஆகாது. பொதுவான அறநெறிகளின் பாற்பட்டு நிற்பதே நீதியான மனச்சாட்சி.

எங்கள் எல்லோரது மனச்சாட்சியும் அறநெறிகளின் அடியொற்றி நடுவுநிலைமைபேணுவதாக அமைய வேண்டும்.

*"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கணி"* என்ற வள்ளுவன் போதனைக்கு ஏற்ப எமது மனச்சாட்சியை வளர்த்துக்கொள்வோமாக!

---

**நமது குழந்தைகளை தொலைக் காட்சிகள் எப்படி கெடுக்கப் போகின்றன என்பது பற்றிய ஓர் அலசல் இது. இந்தியாவை மையமாக வைத்து வரையப்பட்ட கட்டுரை எனினும் - இந்தியா மற்றும் தென்னிலங்கை அளவுக்கு ரீ.விக்களின் ஆக்கிரமிப்பு நமது சமூக வாழ்க்கையைப் பாதித்து விடாவிட்டாலும்-இங்கும் தனது ஆக்கிரமிப்புக் கரத்தை அகலப் பதித்து வரும் ரீ.விக்கள் குறித்துப் பெற்றோர்கள், சமூக நலன் விரும்பிகள் முன்னெச்சரிக்கையாக இருப்பதற்கு இக்கட்டுரை உதவக் கூடும். (ஆ-ர்)**

பங்கி என்பது ஐரோப்பிய நாடுகளில் அண்மைக் காலங்களில் பிரபலமடைந்து வரும் ஒரு வகை விளையாட்டு. கால்களில் ரப்பர் கயிற்றைக் கட்டிக் கொண்டு உயரமான இடங்களிலிருந்து குதிப்பது. ரப்பர் கயிற்றின் நீளம் வரை உடல் கீழே வந்து மேலே எழும்பும். பார்ப்பதற்கு சுவையான சாகசம் போலத் தோன்றும். இதைச் செய்ய ஏகப்பட்ட பயிற்சி வேண்டும்



என்பது மட்டுமல்ல, ஒவ்வொருமுறை இப்படிக் குதிக்கும் போதும் பாதுகாப்பு ஆள்களும் உதவிக்குப் பயிற்சியாளர்களும் தேவை. இந்தச் சாகசத்தைத் தனது விளம்பரத்தில் உபயோகித்தது ஒரு குளிர்பான நிறுவனம். ஓர் இளைஞன் இட்பானம் வேண்டி மலையிலிருந்து பங்கி முறையில் குதித்துக் கீழே லாரியில் போய்க் கொண்டிருக்கும் அப்பானத்தை எடுத்து அருந்துவது போல ஒரு காட்சி.

இதைத் தொலைக்காட்சியில் பார்த்த சிறுவனொருவன் தானும் இரண்டாவது மாடியிலிருந்து அப்படிக் குதிக்க முயல தலை மோதி இறந்து போனான். விஷயம் பரபரப்பாகி அரசு அந்த விளம்பரத்தையே தொலைக் காட்சியில் தடை செய்தது. இது நடந்தது வேறெங்கோ அல்ல இந்தியாவில்தான். சம்பந்தப்பட்ட அந்தக் குளிர்பான கம்பெனி எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி மறுபடியும் அவ்விளம்பரத்தைத் தொலைக் காட்சியில் இடம்பெறச் செய்து விட்டது. இப்போது அவ்விளம்பரத்துடன் வினாடிகளில் ஓடி மறையும் ஓர் ஆங்கில எச்சரிக்கை வாசகம் காணப்படுகிறது. இந்தச் சாகசத்தைச் செய்பவர் பயிற்சி பெற்ற சாதனையாளர் என்பதுதான் அந்த எச்சரிக்கை!

எல்லாக் குழந்தைகளும் இப்படி மேலிருந்து குதித்து விடவில்லை எனலாம். உண்மைதான். மேலே சுட்டிக் காட்டியிருப்பது ஒரு அதீத உதாரணம்தான். ஆனால் தொலைக்காட்சியானது குழந்தைகளை வெகுவாகப் பாதிக்கிறது; அதுவும் வெவ்வேறு விதங்களில் பாதிக்கின்றது என்பது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய யதார்த்தமாக உள்ளது.

தொலைக் காட்சியானது குழந்தைகளின் நேரத்தை வெகுவாகப் பறித்துக் கொள்கிறது. இன்றைய குழந்தைகளின் வெகு முக்கியமான பொழுது போக்காகத் தொலைக்காட்சியே இருந்து வருகின்றது. குறிப்பாக தனியார் அலைவரிசைகளின் வரவுக்குப் பின் தொலைக் காட்சி நேயர்களின் எண்ணிக்கையும் அவர்கள் தொலைக்காட்சியைப் பார்க்கும் நேரமும் அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதற்கு முக்கிய காரணம் இன்று குடும்பங்களின் பொழுதுபோக்காகவும் தொலைக்காட்சி மாறியிருப்பதுதான். இதன் விளைவாக அவ்வீட்டுக் குழந்தைகளும் தொலைக் காட்சியைத் தங்கள் முக்கியப் பொழுதுபோக்கு அம்சமாக ஏற்றுக் கொள்ளவேண்டி வருகிறது.

ஒரு குழந்தை ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு வாரத்தில் எவ்வளவு நேரம் செலவிடுகின்றது என்பதைப் பட்டியல் போட்டுப் பார்த்தால் அதில் தொலைக்காட்சிக்குக் கணிசமான பங்கிருப்பதை உணரமுடியும்.

இதன் விளைவுகள் பலதரப்பட்டவை. ஓடியாடி, விளையாட வேண்டிய, கருத்தூன்றிப் படிக்க வேண்டிய பிள்ளைகளின் நேரத்தையெல்லாம் தொலைக்காட்சி ஆக்கிரமித்துக் கொள்கிறது. அதுமட்டுமல்ல, பெற்றோர் குழந்தைகளிடையே நடைபெறும் உரையாடல் மிகவும் குறைந்து விடுகின்றது. மேலும் இந்த நேர அபகரிப்பு என்பது நிகழ்ச்சிகளைப் பார்க்கும் நேரத்தோடு மட்டும் முடிவதில்லை. மாறாக நிகழ்ச்சி தொடங்குமுன் அதுபற்றி எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம், நிகழ்ச்சி முடிந்ததும் அது பற்றி விவாதித்து கருத்துப் பரிமாறிக் கொண்ட நேரம், நிகழ்ச்சியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த நேரம் போன்ற எல்லாவற்றையும் சேர்த்துத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

குழந்தைகளைப் பொறுத்த அளவில் தொலைக்காட்சி என்பது அவர்களின் ஓர் உலகமாகவே மாறிவிடுகின்றது. அது இல்லாத ஒரு வாழ்க்கையை அவர்களால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாமல் போய்விடுகிறது. அவர்களது மனதில் பெரிய முக்கியத்துவம் தொலைக்காட்சிக்குக் கொடுக்கப்படுவதால் அதிலிருந்து பெறப்படும் செய்திகளும் மதிப்பீடுகளும் மிக எளிதில் அவர்களின் மன ஆழத்தில் இறங்கி விடுகின்றன.

இந்தியாவைப் பொறுத்த அளவில் தொலைக் காட்சி சினிமாவின் வாலாக - சினிமாவின் நீட்சியாக - சினிமாவுக்கான விளம்பரப் படமாகத்தான் உள்ளது. இந்திய சினிமாவைக் குறித்து என்னென்ன விமாசனங்களை வைக்கிறோமோ அவை அனைத்தையும் இந்தியத் தொலைக் காட்சிக்கும் சொல்லலாம். ஆனால் திரையரங்கு சினிமாவை விட தொலைக்காட்சி சினிமா அதிக ஆழமான விளைவுகளை ஏற்புடுத்தக் கூடியது. இதற்குக் காரணம் முதலாவதில் திரையரங்கு எனும் செயற்கையான சூழலில் திரைப்படத்தைப் பார்க்கிறோம். ஆனால் தொலைக்காட்சிப் பெட்டியோ நமது வீட்டிற்குள்ளேயே இருக்கிறது. அதில் வரும் விஷயங்களுடன் நமது நட்பு கலந்த பரிச்சயம் உண்டு. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒரு நிகழ்வாக ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக நம் வாழ்க்கை யதார்த்தத்தின் ஒரு பகுதியாக ஏற்கிறோம். விளைவாக தொலைக்காட்சிச் சமாச்சாரங்கள் வெகு இயல்பான விஷயங்களுள் ஒன்றாகவே நமக்குத் தெரிகின்றன.

யதார்த்தம், யதார்த்தம் போன்ற உருவாக்கம் - இவ்விரண்டையும் வித்தியாசம் பிரித்துப்பார்க்கத் தெரியாத குழந்தைகளின் மனதில் இது ஏற்படுத்தும் குளறுபடிகள் அனேகம். மேலும் ஒரே விஷயம் பல்வேறு விதங்களில் - கோணங்களில் - திரும்பத் திரும்பக் காட்டப்படுவதால் ஏற்கக்கூடிய இயல்பான ஒன்றாக அதைக் குழந்தை புரிந்து கொள்கிறது.

உதாரணமாக தொலைக் காட்சியைப் பொறுத்த அளவில் சினிமா என்பது சினிமாக் காட்சிகளின் தொகுப்பாகத்தான் உள்ளது. பல்வேறு படங்களிலிருந்து சண்டைக் காட்சிகளைத் தொடர்ந்து பார்க்கும் ஒருகுழந்தை சண்டையை வாழ்க்கையின் இயல்பான ஒரு விஷயமாக அங்கீகரித்துக் கொள்கிறது. தானே போய் அடிதடியில் இறங்காவிட்டாலும் கூட அடிதடி என்பது வேடிக்கையான பொருளாக, சுவாரஸ்யமான ஒரு விஷயமாக மாறி விடுகிறது. நிஜமான அடிதடியைப் பார்க்கும் போது கூட அதில் ஹீரோவையும் வில்லனையும் கற்பனை செய்து கொண்டு ஹீரோ வெல்லவேண்டும் எனும் மனோபாவம் தோன்றுவது இதனால்தான்.

அமெரிக்கக் குழந்தைகளை எடுத்துக்கொண்டால் வருடத்திற்கு 10,000 கொலைகள், 17,000 கொள்ளைகள், 10,000 பாலியல் பலாத்காரங்கள், 17,000 விவாகரத்துகள் போன்றவற்றை டி.வி. நிகழ்ச்சிகள் மூலம் பார்ப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.



இந்தியாவில் இப்படி ஒரு கணக்கெடுத்தால் சண்டை, பழிதீர்த்தல், கவர்ச்சி நடனங்கள், காதல் காட்சிகள், நகைச்சுவை வக்கிரங்கள் எனும் பிரிவுகளில் பார்க்க வேண்டியிருக்கும்.

இதனால் அமெரிக்கக் குழந்தைகளின் மனோபாவத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆய்வு செய்திருக்கிறார்கள். குழந்தைகள் மனதில் இவ் விஷயங்கள் குறித்து மரத்துப்போன உணர்வு தோன்றியிருப்பதாகக் கூறுகின்றனர். கொலையா? விவாகரத்தா? இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கின்றது என இக்குழந்தைகள் கேட்கின்றன. அதுமட்டுமல்ல. இவை இப்படித்தான் இருக்கும் எனும் ஒருவித நம்பிக்கையின்மையும் அவர்களிடம் தென்படுகிறதாம். நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் ஒதுங்கிப்போகும் அல்லது அப்படியே அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் உருவாவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வன்முறையை, ஆபாசத்தைக்கண்டு முகம் சுளிக்கும் மனோநிலைபோய் அவற்றை வேடிக்கைபார்க்கும் மனோநிலையைத் தொலைக்காட்சியின் தொடர்ந்த பிம்பங்கள் ஏற்படுத்துகின்றன.

குழந்தைகளுக்குப் பிடித்த ஒரு விஷயம் விளையாட்டு. தொலைக் காட்சியில் விளையாட்டுக்கள் காண்பிக்கப்படுகின்றனவென்றாலும் எல்லா விளையாட்டுக்களும் அல்ல. ஒரு சில விளையாட்டுக்களுக்கே அதிக முக்கியத்துவமும் நேரமும் கொடுக்கப்படுகின்றன. குழந்தைகளைப் பொறுத்த அளவில் டெலிவிஷன் அங்கீகரித்த விளையாட்டுக்களுக்குத்தான் அவர்கள் மனதில் முதலிடம்கொடுக்கிறார்கள். இதனால் கபடி பற்றித் தெரியாத குழந்தைகள்கூட கிரிக்கெட் பற்றித் தெரிந்து வைத்திருக்கின்றது.

இவ்விளையாட்டுக்களை நேரடியாக, விளையாடாமல் அல்லது விளையாட்டு அரங்கங்களுக்குச் சென்று நேரடியாக இவைகளைப் பார்க்காமல் தொலைக்காட்சி மூலம் இவற்றை ரசிப்பதால் வேறொரு சிக்கலும் ஏற்படுகின்றது. தொலைக்காட்சி என்பது விளையாட்டின் தன்மையையே மாற்றிவிடுகின்றது. ஆட்டம் என்கிற மனோநிலை மறந்து போய், வெற்றி - தோல்வி அல்லது போட்டி என்கிற உணர்வையே அது பார்ப்போர் மனதில் ஏற்படுத்துகின்றது. ஆட்டத்தை ஆடுவதில் இருக்கும் மகிழ்ச்சியை விட வெற்றி பெறுவதில் இருக்கும் மகிழ்ச்சியே பிரதானமாகக் காட்டப்படுகின்றது. இதன் விளைவாக, விளையாட்டின் சுமுகத்தன்மை என்பது பெருமளவுக்குக் குலைக்கப்படுகின்றது.

**சுரேஷ்**

பார்வையாளரைப் பொறுத்த அளவிலும் அவர் பார்ப்பதற்காகவேதான் அவ்விளையாட்டு வீரர்கள் ஆடுகின்றார்கள் என்பது போன்ற பாவனை ஏற்படுத்தப்படுகின்றது. விளையாட்டுக்களைத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பெரும்பாலான குழந்தைக


(XV ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளெழுத்து நோய் - 'கட்ரக்ட்'

## வெள்ளெழுத்து நோய் என்றால் என்ன?

இது உங்களில் பலருக்கு நன்கு தெரிந்த நோயாகும். இதை ஆங்கிலத்தில் Cataract (கட்ரக்ட்) என்று அழைப்பார்கள். எமது சமுதாயத்தில் பலர், குறிப்பாக வயோதிபர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோயினைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முதலில் மனிதக் கண்ணின் அமைப்பு, அதன் தொழிற்பாடுகளைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். (படம்1) மனிதக் கண்ணினை ஒரு புகைப் படக்கருவிக்கு (Camera) ஒப்பிடலாம். புகைப்படக்கருவியில் பொருள்களில் பட்டுத் தெறிக்கும் ஒளிக்கதிரானது, வில்லையினால் (Lens) குவிக்கப்பட்டு புகைப்படச்சுருளில் (Film) தலைகீழான விம்பத்தை உருவாக்குகின்றது. இதேபோல் மனிதக் கண்ணிலும் பொருளில் பட்டுத் தெறிக்கும் ஒளிக்கதிர் வில்லையினால் குவிக்கப்பட்டு தலைகீழான விம்பத்தை விழித்திரையில் உருவாக்குகின்றது. இது பார்வை நரம்பினால் எடுத்துச் செல்லப்பட்டு மூளையில் உணரப்படுகின்றது.

ஒரு புகைப்படக்கருவியில் பொருளின் விம்பத்தை உருவாக்குவதற்கு வில்லை எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் மனிதக் கண்ணிலும், கண்வில்லை முக்கியமான தொன்றாகும். ஒரு சாதாரண மனிதனின் கண்வில்லையானது நிறமற்றதும் நன்கு ஒளிபுக விடக்கூடியதுமாகும். வெள்ளெழுத்து நோயில் கண்வில்லையின் ஒளிபுக விடும் தன்மை பாதிப்படைகின்றது. இதனால் பார்வை குறைகின்றது.



படம் 1

## நோய்க்கான அறிகுறிகள்


* பார்வை படிப்படியாகக் குறைவடைதல். அதிகாலையில் உருவாகும் பனிப்படலத்தின் ஊடாகப் பொருள்களைப் பார்க்கும் போது எவ்வாறு தோற்றமளிக்குமோ அவ்வாறு இந்நோயாளிக்கு பொருள்கள் தோன்றும். இதனாலேயே இந்நோய் 'வெள்ளெழுத்து' எனப் பெயர் பெற்றது.

*இந்நோயினால் பாதிக்கப்பட்ட சிலருக்கு தூரப்பார்வை நன்றாகவும், கிட்டப் பார்வை மங்கலாகவும் இருக்கும். சிலருக்கு கிட்டப்பார்வை நன்றாகவும் தூரப்பார்வை குறைவாகவும் இருக்கும்.

* சிலருக்கு கண்பார்வை குறைந்த ஒளியில் நன்றாகவும், சிலருக்கு கண் பார்வை பிரகாசமான ஒளியில் நன்றாகவும் இருக்கும்.

*சிலவேளைகளில் பொருள்கள் மங்கலான இரட்டைத் தோற்றமாகவும் தெரியலாம்.

*மின் ஒளிவிளக்கில் ஒரு வெள்ளெழுத்து நோயாளியின் கண்ணை அவதானித்தால், கண்மணியானது (உண்மையில் கண்மணிக்குப் பின்னால் உள்ள வில்லை) வெள்ளை நிறமாகத் தோற்றமளிக்கும்.



படம் 2:- b + c - வில்லை உறையின் ஒருபகுதி தவிர மிகுதிப்பகுதி முற்றாக அகற்றப்படுகின்றது.

## வெள்ளெழுத்துநோய்க்கு சாத்தியமான காரணங்கள்

**வயோதிபம் காரணமாக உருவாகும் வெள்ளெழுத்து நோய்** (Age Related Cataract):- இது அதிகமாக 55 வயதிற்கு மேற்பட்டவர்களில் உருவாகின்றது. இதற்குக் காரணம் கண்வில்லையின் ஒளிபுகவிடும் தன்மையில் வயோதிபம் ஏற்படுத்தும் மாற்றம்.

**கண்ணில் ஏற்படும் விபத்து அல்லது காயங்களினால் ஏற்படும் வெள்ளெழுத்து நோய்:-**

(அ) கண்வில்லையில் ஏற்படும் நேரடிக் குத்துக்காயம்.

(ஆ) தொழிற்சாலை அல்லது ஆய்வுகூட ஊழியர்களில் நேரடியாகக் கண்ணில் ஏற்படும் கதிர்வீச்சு. உ-ம்: புற ஊதாக் கதிர்வீச்சு (Ultra violet light), நுண் அலைக் கதிர்வீச்சு (Micro wave radiation).

**உடல் அனுசேபத் தொழிற்பாட்டில் ஏற்படும் பாதிப்பினால் ஏற்படும் வெள்ளெழுத்து:-**

(அ) நீரிழிவு நோய் (Diabetes mellitus)

(ஆ) கலக்ரோஸிமியா (Galacto saemia)

**சிறுபிள்ளைகளில் பிறப்பின் போது உருவாகும் வெள்ளெழுத்து:-**

(அ) குழந்தை தாயின் கருப்பையில் வளரும்போது தாய்க்கு ஏற்படும் சில தொற்று நோய்கள். உ-ம்: ஜேர்மன் சின்னமுத்து (Rubella), ரொக்ஸசோ பிளாஸ் மோஸிஸ் (Totoplasmosis).

(ஆ) சில பிறவிக் குறைபாட்டுடன் தொடர்புடைய வெள்ளெழுத்து. உ-ம். Down's Syndrome (மொங்கோலிய தோற்றம்), Wrener's Syndrome.

**சில தொடர்ச்சியான, அளவுக்கதிகமான மருந்துப் பாவனையினால் உருவாகும் வெள்ளெழுத்து:-**

உ-ம்: Prednisone (சில அஸ்துமா நோயாளிகள் பாவிக்கும் மருந்து)

Chlorpromazine (சில மன நோயாளிகள் பாவிக்கும் மருந்து)

## நோயின் பரம்பலும் புள்ளிவிவரங்களும்

உலகளாவிய புள்ளிவிவரங்களின்படி, இது பெரும்பாலும் ஆண்களைவிட (19%) பெண்களையே (32%) கூடுதலாகப் பாதிக்கின்றது. அதிலும் குளிர்வலய காலநிலையில் வாழ்பவர்களிலும் பார்க்க வெப்ப வலயத்தில் வாழ்பவர்களை அதிகமாகப் பாதிக்கின்றது. உலக ஆய்வின்படி வயதின் அடிப்படையில் வெள்ளெழுத்து நோயினால் பாதிக்கப்பட்டோரின் விவரங்கள் வருமாறு: 52-64 வயதிற்கிடைப்பட்டோரில் 20%; 65-74 வயதிற்கு இடைப்பட்டோரில் 47.9%; 75-85 வயதிற்கு இடைப்பட்டோரில் 77%.

1970ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உலக ஆய்வின்படி, ஒவ்வொரு வருடமும் முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் வரையிலான வெள்ளெழுத்து நோயாளர்கள் புதிதாக உருவாக்கப்படுகின்றனர். இது வருடாவருடம் அதிகரித்துச் செல்கின்றது. 1990இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அண்ணளவாக 22 லட்சம் வெள்ளெழுத்து நோயாளர்களில் 19 லட்சம் நோயாளர்கள் செயற்கை வில்லை மாற்றீடு சத்திர சிகிச்சை செய்துகொண்டனர். இதிலிருந்து உங்களுக்கு எவ்வளவு வேகமாக இந்நோய் அதிகரித்து வருகின்றது என்பது புரிந்திருக்கும்.

## வெள்ளெழுத்து நோயிற்கான சிகிச்சை

வெள்ளெழுத்து நோய் கண்டு பிடிக்கப்பட்டதில் இருந்து நோயாளர் கண் சிகிச்சை நிலையத்திற்கு சமுகமளித்து, தமது கண்ணினை பரிசோதித்து அதற்குரிய வைத்திய ஆலோசனைகளைப் பெறுதல் வேண்டும்.

வெள்ளெழுத்து நோயின் ஆரம்ப நிலையில் சத்திரசிகிச்சை செய்வது கடினமாகும். எனவே இந்நோயாளர் கண் வைத்தியரின் ஆலோசனைப்படி மூக்குக் கண்ணாடி அணிந்து பார்வைக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யலாம்.


- வை.செல்வவேல் -
யாழ். மருத்துவபீட
மாணவன்

சில மருந்துகளை வைத்தியரின் ஆலோசனைப்படி பாவிக்கலாம். ஆனால் இவற்றின் பயன் மிகக் குறைவு.

பார்வை மிக மங்கலடையும் போது (கண்ணின் வலு 6/12 கீழ் குறைவடையும் போது) கண் சத்திர சிகிச்சை செய்து கொள்ளலாம்.

(அ) பாதிக்கப்பட்ட வில்லையை அகற்றிய பின் மூக்குக்கண்ணாடி அணிந்து பார்வையை நிவர்த்தி செய்தல்.

(ஆ) செயற்கை வில்லை மாற்றீடு சத்திர சிகிச்சை:- இதில் பாதிக்கப்பட்ட வில்லையின் வில்லை உறையின் ஒரு பகுதி தவிர்ந்த மிகுதி பகுதி அகற்றப்பட்ட பின் செயற்கை வில்லை பொருத்தப்படுகின்றது.



படம் 3:- b + c + d - எஞ்சியுள்ள வில்லை உறையின் ஒருபகுதியுடன் செயற்கை வில்லை பொருத்தப்படுகின்றது.

---

# நல்ல நீதிபதி

ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹம்மாஸ்.

அவர் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்; மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். தான் பார்க்கும் பதவிக்காக அவர் அரசாங்கத்திடமிருந்து ஊதியம் வாங்கிக்கொள்ளவில்லை!

"எனக்கு ஊதியம் வேண்டாம்" என்று அவர் கூறிவிட்டார்.

சரி.. அப்படியானால் அவர் தன் குடும்பச் செலவுக்கு என்ன செய்தார்?

இரவு நேரங்களில் புத்தகங்கள் எழுதுவார். அதை விற்று, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தினார். வீட்டு வேலைக்கும் அவர் ஆள் யாரையும் வைத்துக்கொள்ளவில்லை. அவர் வீட்டில் இருப்பவர்களே ஆளுக்கு ஒரு வேலையைச் செய்துவிடுவார்கள்.

ஆற்றுக்குப் போய் தினமும் குடத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வரவேண்டியது அவருடைய வேலை.

அவர் மக்கள் எந்த நேரத்தில் வந்தாலும் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார்; நடுராத்திரியில் வந்து கதவைத் தட்டினாலும் அலுத்துக் கொள்ளமாட்டார். மக்களுக்கு அவர் மீது மிகவும் மரியாதை.

அவருக்கு அந்த மாநிலத்தின் முதலமைச்சர் ஒரு பணமுடிப்பைப் பரிசாகக் கொடுக்க முன் வந்தார். ஆனால் அவர் அதை வாங்க மறுத்துவிட்டார்.

"சரிங்க... உங்களுக்கு ஒரு உதவியாளரையாவது அரசு சார்பாக ஏற்பாடு செய்கிறேன்!" என்றார் முதலமைச்சர்.

"அதுவும் வேண்டாம்!" என்று நீதிபதி கூறினார்.

"சரி.. ஒரு வேலையாளையாவது அனுப்புகிறேன்!" என்றார் முதல்வர்.

நீதிபதி "தேவையில்லை!" என்று சொல்லிவிட்டார்.

"நீங்கள் வெளியில் சென்று வருவதற்கு ஒரு வாகனம் ஏற்பாடு செய்யட்டுமா?" என்று முதல்வர் வினவினார்.

"அதுவும் 'வேண்டாம்" என்றார் நீதிபதி.

"நீதித்துறையில் நீங்கள் பல முக்கியமான பொறுப்புகளை வகிக்கிறீர்கள்... அதனால் அவை இரவு நேரத்தில் நீங்கள் நூல்கள் எழுதுவதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே அரசாங்க நிதியிலிருந்து ஒரு சிறு தொகையையாவது சம்பளமாக வாங்கிக் கொள்ளுங்களேன்!" என்றும் முதல்வர் சொல்லிப் பார்த்தார்.



ஆனால் அதற்கும் நீதிபதி மசியாமல், "நான் மக்களுக்குப் பணியாற்றுபவன். மக்கள் தொண்டுக்கு ஊதியமாக நான் எதையும் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை!" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

முதலமைச்சர் பார்த்தார்; 'சரி இதற்கும் மேலே இவரை வற்புறுத்தினால், இவர் இந்தப் பதவியிலேயிருந்து விலகினாலும் விலகிக் கொள்வார். ஒரு நல்ல நீதிபதியை நாம் இழந்து விடக்கூடாது!' என்று நினைத்து பேசாமல் இருந்துவிட்டார்.

அந்த ஊரில் ஒருவர் ஆடு, மாடுகள் வைத்திருந்தார். அவைகளை அவர் ஓட்டிக் கொண்டு போய் புல்வெளியில் மேயவிடுவார். இவர் உட்கார்ந்து அவைகளைக் கவனிப்பதற்கு ஒரு நிழலான இடம் தேவைப்பட்டது.

அந்தப் புல்வெளிக்குப் பக்கத்தில் இருந்த ஒரு நடைபாதை ஓரமாக - தன்னுடைய நண்பன் ஒருவனுடைய வீட்டை ஒட்டி - ஒரு குடிசை போட்டுக்கொள்ளலாம் என்று இவர் ஏற்பாடு செய்தார்.

ஆனால் அதற்கு நண்பன் ஒப்புக் கொள்ளவில்லை. "இது நடைபாதை... இதில் குடிசை போடக் கூடாது!" என்று அவன் தடுத்தான்.

அதனால் இரண்டு பேருக்கும் தகராறு வந்துவிட்டது.

"சரி.. இதற்கும் மேலே நமக்குள் வம்பு வேண்டாம். பேசாமல் நீதிபதியிடம் சென்று முறையிடுவோம்!" என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

இரண்டு பேரும் நீதிபதியைத் தேடிச் சென்றார்கள். நீதிபதி யார் என்று அவர்களுக்குத் தெரியாது. நீதிமன்றத்தை நோக்கி அவர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

எதிரில் ஒருவர் தண்ணீர் குடத்தைச் சுமந்தபடி வந்து கொண்டிருந்தார்.

அவரிடம் இவர்கள் இருவரும், "இந்த ஊர் நீதிபதியைப் பார்க்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருப்பார்?" என்று வினவினார்கள்.

"நான்தான் நீதிபதி... உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்!" என்றார் அவர்.

"ஐயா, வணக்கம். எங்கள் பிரச்சினையைச் சொல்கிறோம். ஆனால்.

(XV ஆம் பக்கம் பார்க்க)

# ஈரானிய நாடாளுமன்றத் தேர்தலில்

# சீர்திருத்தவாதிகள் பெரும் வெற்றி!

ஈரானில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி கதாமிக்கு ஆதரவான சீர்திருத்தவாதிகள் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றி உள்ளனர். 1979 ஈரானிய புரட்சியின் பின்னர் முதல் தடவையாக ஈரானிய நாடாளுமன்ற ஆட்சி பழமைவாதிகளான கடும் போக்காளர்களிடமிருந்து சீர்திருத்தவாதிகள் கைக்கு மாறப் போகிறது.

இந்த மாற்றங்கள் ஈரானில் சமூக சீர்திருத்தங்களுக்கும் அமெரிக்காவுடனான நல்லுறவுக்கும் வழிவகுக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். மத்திய கிழக்கு அமைதிக்கு அமெரிக்க - ஈரானிய நல்லுறவு அவசியம் ஆகும்.

ஈரானிய தேர்தல் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. ஆனால் இறுதி முடிவு ஏப்ரல் முற்பகுதியிலேயே வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பெரும்பாலான தேர்தல் முடிவுகள் வெளிவந்து விட்டன.

தலைநகர் தெஹ்ரானுக்கு வெளியே உள்ள தொகுதிகளில் சீர்திருத்தவாதிகள் 75 சதவீதமான தொகுதிகளைக் கைப்பற்றி உள்ளனர். தலைநகர் தெஹ்ரானில் வாக்குகள் எண்ணும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்படமாட்டாது. தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளிவருவதில் தாமதம் ஏற்படுவதற்கு இதுதான் காரணம். தாமதத்துக்கு மற்றொரு காரணம் வாக்குச்சீட்டுக்கள்

## பழமைவாதிகளின் ஆதிக்கத்துக்கு முடிவு

கையினால் எண்ணப்படுவதே.

### பெரிய நகரங்கள் சீர்திருத்தவாதிகளிடம்

இதுவரைவெளியான தேர்தல்




ஈரானில் சீர்திருத்தங்களை வலியுறுத்திவரும் பத்திரிகையாளரான அப்துல்லா நூரி (வலது புறம்) சிறைச்சாலையில் இருந்து விடுமுறையில் விடு வந்த போது அரச அதிகாரி ஒருவர் அவரை வரவேற்கிறார்.

முடிவுகளின்படி ஈரானின் பெரிய நகரங்களில் எல்லாம் சீர்திருத்தவாதிகள் அமோக வெற்றியீட்டி உள்ளனர். ஈரானின் மூன்றாவது பெரிய நகரான இஸ்பாஹானில் உள்ள ஐந்து தொகுதிகளிலும் தெற்குகடற்கரை நகரான பண்டர் அப்பாஸ் நகரின் மூன்று தொகுதிகளிலும் சீர்திருத்தவாதிகள் அமோக வெற்றியீட்டி உள்ளனர்.

ஈரானிய நாடாளுமன்றம் 290 உறுப்பினர்களைக் கொண்டது. இதனை எழுதும்வரை வெளியான 167 தேர்தல் முடிவுகளில் சீர்திருத்தவாதிகள் 126 தொகுதிகளிலும் பழமை வாதிகளான கடும்போக்காளர்கள் 34 தொகுதிகளிலும் சுயேச்சை வேட்பாளர்கள் 7 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஈரானிய நாடாளுமன்றம் கடந்த காலங்களில் கடும் போக்காளர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் ஜனாதிபதி கதாமி தனது சீர்திருத்தக் கொள்கைகளை அமுல் செய்ய முடியாதநிலைமை இருந்து வந்தது. நாடாளுமன்றத்தில் சீர்திருத்தத் திட்டங்கள் கொண்டு வரப்படும் போதெல்லாம் கடும்போக்காளர்கள் தமது பெரும்பான்மை வாக்குகளைப் பயன்படுத்தி அவற்றைத் தடுத்து வந்தனர். தமக்கு ஆதரவான சீர்திருத்தவாதிகளின் கட்சி (The Islamic Iran Participation Front) வெற்றி பெற்றால் ஈரானில் கூடுதல் அரசியல் சுதந்திரங்களை வழங்கப் போவதாகவும் தற்பொழுது இருந்து வரும் கட்டுப்பாடுகளைநீக்கப் போவதாகவும்கதாமி வாக்குறுதி அளித்திருந்தார்.



ஜனாதிபதி கதாமி

### 1979 புரட்சிக்குப்பின் முக்கிய நிகழ்வு

1979 ஈரானிய புரட்சியின் பின்னர் இடம்பெற்ற முக்கிய நிகழ்வாக இந்த தேர்தல் முடிவுகளை அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். கடும் போக்காளர்கள் தோற்கடிக்கப்பட்டது "இரண்டாவது மக்கள்புரட்சி" என்று வர்ணிக்கப்படுகிறது.

தேர்தல முடிவுகளை அமெரிக்கா பெரிதும் வரவேற்றுள்ளது. 1979 புரட்சியின் பின்னர் முழு அளவில் பாதிக்கப்பட்டு - கீழ்மட்ட நிலையை அடைந்து - கதாமி ஜனாதிபதியான பின்னர் ஓரளவு சீரடைந்த அமெரிக்க - ஈரானிய உறவு மேலும் அபிவிருத்தி அடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உறவு மேம்படுமானால் ஈரானுக்கு கூடுதலான அமெரிக்க உதவி கிடைக்கலாம்.

ஈரானைப் பலப்படுத்துவது மூலம் ஈராக்கின் கொட்டத்தை அடக்க முடியும் என்று அமெரிக்கா கருதுகிறது. 1980 களில் ஈரானும் ஈராக்கும் எட்டு வருடகாலம் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. யுத்தத்தில் ஈராக்கின்கை ஓங்க ஆரம்பித்த சமயம் ஈரான் யுத்த நிறுத்தம் செய்ய இணங்கியது. சுனி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக்கும் சியா முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஈரானும் இன்னும் பகை நாடுகளாகவே இருந்து வருகின்றன.

### 444 நாள்கள் நீடித்த பணயக்கைதிகள் நாடகம்

மன்னர் ஷாவின் ஆட்சிக்காலத்தில் ஈரான் அமெரிக்காவின் ஒரு நெருங்கிய நட்பு நாடாக இருந்து வந்தது.

கடும் போக்காளரும் அமெரிக்க எதிர்ப்பாளருமான ஈரானிய ஆத்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமேனி 1979 இல் ஆட்சியைக் கைப்பற்றியதும் -

தலைநகர் தெஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அப்பொழுது கொமேனி ஆதரவாளர்களினால் கைப்பற்றப்பட்டு தூதரக அதிகாரிகள் பணயமாக வைக்கப்பட்டதும் ஈரானைப் பொறுத்தவரை அமெரிக்கா எதிர்பாராதநிகழ்வுகள் ஆகும்.

அமெரிக்கத் தூதரக முற்றுகை உலக வரலாற்றிலேயே நீண்டது ஆகும். தூதரக அதிகாரிகள் மொத்தம் 444 நாள்கள் பணயமாக வைக்கப்பட்டிருந்தனர். அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த ஜிம்மி கார்ட்டர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்ததற்கும் இந்த பணயக்கைதிகள் விவகாரமும் ஒரு காரணமாக இருந்தது.

தற்பொழுது வாழ்ந்து வரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளில் மிகவும் புகழ் பெற்றவராகக் கருதப்பட்டு வருபவர் ஜிம்மி கார்ட்டர். 1978 இல் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான காம்ப்டேவிட் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதும் ஜிம்மி கார்ட்டரின் ஆட்சியில்தான்.

தேர்தல் முடிவுகள் ஈரானில ஜனநாயகம் பலமடைந்துவருவதை எடுத்துக்காட்டுவதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மடேலின் ஆல்பிரைட் தெரிவிக்கிறார். ஈரானிய தேர்தல் முடிவுகள் அமெரிக்காவைத் தவிர வேறு எந்த நாட்டுக்கும் கூடுதல் மகிழ்ச்சியை - அளிக்க முடியாது. அரபு உலக அமைதிக்கு ஈரானில் ஒரு பலமான ஜனநாயக அரசு இருப்பது அவசியம் என்று அமெரிக்கா கருதுகிறது.

### இளம் சந்ததியினர் அளித்த ஆதரவு

தேர்தலில் சீர்திருத்தவாதிகளின் வெற்றிக்கு இளம் சந்ததியினரின் ஆதரவே பிரதான காரணம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஈரானில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 3கோடியே 87லட்சம். இவர்களில் 3கோடி 20லட்சம் பேர் அதாவது சுமார் 83சதவீதமானோர் தற்போது நடைபெற்ற தேர்தலில் வாக்களித்துள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் வந்ததால் வாக்களிப்பு நேரம் இரண்டு மணித்தியாலங்களினால் அதிகரிக்கப்பட்டது. ஈரானிய சட்ட திட்டங்களில் இதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இளைஞர்கள் பெருமளவில் வாக்களித்ததே தேர்தலில் சீர்திருத்தவாதிகளுக்குச் சாதகமாகியது. வாக்காளர்களில் சுமார் 2கோடி பேர் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்கள். கடுமையான இஸ்லாமியச் சட்டங்களினால் இவர்கள் விரக்தி அடைந்திருந்தனர். அத்துடன் ஈரானிய சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்கள். அது மட்டுமல்ல ஈரானில் வேலையில்லாத் திண்டாட்டம் 17சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக உயர்ந்ததும் கடும் போக்காளர்களின் ஆட்சியில் மக்கள் அதிருப்தி அடையக் காரணமாக இருந்தது.

### சிறையிலிருந்து விடுவிப்பு

இதற்கிடையில் ஈரானிய சீர்திருத்தவாதியும் பத்திரிகையாளருமான அப்துல்லா நூரி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். ஈரானில் இஸ்லாமிய மதத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்ததாக இஸ்லாமிய நீதிமன்றம் ஒன்று கடந்த ஒக்ரோபர் மாதம் இவருக்கு 5ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தது. இவரினால் நடத்தப்பட்டுவந்த பத்திரிகையும் தடை செய்யப்பட்டது. தற்பொழுது நடைபெற்றுள்ள தேர்தலிலும் இவர் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டது. ஈரானிய சட்டத்தின் படி சிறைக்கைதிகள் ஒழுக்கமுடையவர்களாகக் காணப்பட்டால் அவர்கள் வீடு சென்று வருவதற்கு ஒருவார கால விடுமுறை வழங்கப்படுகிறது.

### அதிகாரம் உள்ள நாடாளுமன்றம்

அமெரிக்க நாடாளுமன்றம் போன்று ஈரானிய நாடாளுமன்றமும் பெரும் அதிகாரங்களைக் கொண்டது. சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றும் அதிகாரம், அமைச்சர்கள் மீதோ அல்லது ஜனாதிபதி மீதோ குற்றப் பிரேரணை கொண்டு வரும் அதிகாரம் ஆகியவற்றை இது கொண்டுள்ளது.

கடந்த நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 270 ஆகும். வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து இம்முறை 290 ஆக உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நான்கு வருடங்கள் ஆகும்.

ஒரு வேட்பாளர் வெற்றிபெறுவதற்குத் தமது மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் குறைந்தது 25 சதவீதமான வாக்குகளையாவது பெறவேண்டும். எந்தவொரு வேட்பாளரும் இதனைப் பெறத் தவறும்பட்சத்தில் கூடுதல் வாக்குகள் பெற்ற வேட்பாளர் இரண்டாவது சுற்றின்போது தெரிவு செய்யப்படுவார்.

தற்போது நடந்து முடிந்த தேர்தலில் மொத்தம் 5ஆயிரத்து 700வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 400பேர் பெண்கள். மொத்தத் தொகுதிகள் 207. சில தொகுதிகள் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவை.

ஈரானிய இஸ்லாமிய நடைமுறைகளுக்கு அமைய சிவில் சமுதாயம் ஒன்றை (Civil Society) உருவாக்கும் ஜனாதிபதி கதாமியின் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து சீர்திருத்தவாதிகள் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர்.

நாட்டின் பணவீக்கம், பொருளாதாரம் ஆகியவற்றைச் சீர்செய்யப் போவதாகப் பழமைவாதிகளான கடும் போக்காளர்கள் தேர்தல் பிரசாரங்களின்போது தெரிவித்து வந்தனர்.

சீர்திருத்தங்கள் மெதுவாகவே இடம் பெறவேண்டும் என்று பழமைவாதிகள் தெரிவிக்கின்றனர். சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதில் அவசரம் காட்டினால் ஈரானியப் புரட்சியின் நோக்கங்களே வீணாகிப் போய்விடும் என்று இவர்களினால் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

### வன்முறை

தேர்தல் வாக்களிப்பை அடுத்து ஈரானில், பெருமளவில் வன்முறைகள் இடம்பெற்றுவருகின்றன. எட்டு வயதுச் சிறுவன் உட்பட இதுவரை



ஈரானிய பெண் ஒருவர் வாக்களிக்கிறார்

எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளனர். அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், அரச வங்கிகள் பல தீயிடப்பட்டுள்ளன.

தற்பொழுது நடந்து முடிந்த தேர்தலில் கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த செல்வாக்கு மிக்க கடும் போக்காளர்கள் பலர் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். எனினும் ஈரானியப் படையினர் மத்தியில் இன்னும் கடும் போக்காளர்களே செல்வாக்குப் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் ஜனாதிபதி கதாமி எதிர்நோக்கப் போகும் சவால்களில் இதுவும் ஒன்றாக இருக்கும்.

---

**பிரெஞ்சுப் புரட்சி 1789 ஆம் ஆண்டிலும், ரஷ்யப் புரட்சி 1917 ஆம் ஆண்டிலும் சீனப்புரட்சி 1949 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றன. இந்த மூன்று புரட்சிகளுக்கும் பொருளாதார வங்குரோந்து நிலைமை, ஏழ்மை, மூலவளங்களைப் பங்கீடு செய்வதில் இடம்பெற்ற பாகுபாடுகள் காரணமாக இருந்தன. அத்துடன் இந்தப் புரட்சிகளுக்கு ஏதோ ஒருவெளிநாட்டின் ஆதரவும் இருந்து வந்தது.**

**ஆனால் 1979 ஈரானிய புரட்சி முற்றிலும் எதிர்மாறானது. இந்தப் புரட்சிக்கு நாட்டின் பொருளாதார நிலைமையோ அல்லது வேறு அடக்கு முறைகளோ காரணமாக இருக்கவில்லை. 'சுதந்திரம்', 'விடுதலை', இஸ்லாமியக்குடியரசு' என்ற கோஷங்கள் மட்டுமே அப்பொழுது முன் வைக்கப்பட்டன. ஈரானிய புரட்சியின் மற்றொரு அம்சம் எந்த ஒரு வெளிநாடாவது அந்தப் புரட்சியை அப்பொழுது ஆதரிக்காதது தான்.**

**ஜனாதிபதி கதாமியின் தலைமையில் இடம்பெறும் சீர்திருத்தங்கள் ஈரானை மீண்டும் ஷா ஆட்சிக் காலத்துக்கு இட்டுச் செல்லலாம் என்று பழமைவாதிகளான கடும்போக்காளர்கள் அஞ்சுகின்றனர்.**

# நகங்கள்

நகங்கள் அழகானவை. மென் சிவப்பு அல்லது சற்றே வெண்மைக்குக் கிட்டவான நிறத்தில் காணப்படுபவை. நீள்வளையமாக அல்லது நீள்சதுரமாகத், தசைப்பரப்போடு அசைவின்றிப் படிந்திருப்பவை. அவற்றை அடிக்கடி கவனித்தாக வேண்டும். வெட்டிச் சீர்ப்படுத்திக் கொள்ளவேண்டும். அல்லது அவை குறிப்பிட்டவரின் சுய அலட்சியத் தன்மையை எடுத்துக்காட்டும் அல்லது சுத்தமற்ற தன்மையை ஆதாரப்படுத்தும். ஆரோக்கியம் காட்டும் கண்ணாடிகளாக வைத்தியர்களுக்கு இவை. ஆனாலும்... அந்த ஷீலாவின் நகங்கள்... ஆடம்பரமும், அழகும், நளினமும் கலந்த ஒரு நாகரிகத்தனமானவை. செல்வனின் மனம் சிந்தனைக்குள் தோய்ந்திருந்தது. அவன் 'ஷேவ்' பண்ணிக் கொண்டிருந்தான்.

நேற்றும்கூடத் தற்செயலாகத்தான் அவளது நகங்களை அவதானித்திருந்தான் அவன். அலுவலகம். "சேர்" குரலில் குயில் கூவிற்று. நிமிர்ந்தான். பிரகாசமான பளீரிடும் அழகோடு அவள். வயது சொல்லாத அழகு. இவனது அலுவலகத்தில் நியமிக்கப்பட்டபின் ஒரு மாதம் கடந்



திருந்தாலும் தினம் ஓர் அழகாய்... பார்க்கச் சலிப்பில்லாத அழகாய்... இவனது பார்வையில் தொக்கியிருந்த கேள்விக்குப் பதில் சொன்னாள். அழகிய, தமிழ் குறைந்த ஆங்கிலம். சொற்கள் நுனி உதட்டின்வழி நளினமாய் இறங்கின. சிவந்த உதடுகள். கட்புலனும், செவிப்புலனும் முழுவிழிப்பிலிருக்க, மனம் தன்பாட்டில் அவள் அழகு வியக்க, அவள் தந்த தாள்களை வாங்கியபோதுதான் அந்த நகங்களை அவதானித்தான் அவன். நீள நீளமாய் வளர்த்து அழகிய வர்ணம் பூசி... அவள் வெளியேறிய பின்னும் அவளது நினைவுகள் மனதில் தங்கின. அவள் கடந்த பின்னும் கடக்காதிருக்கின்ற ஏதோ ஒரு வகைச் சுகந்தம் போல.

நகங்கள் மட்டுமென்ன பெயர் கூட அழகுதான். ஷைலஜா... இடைவேளை ரீயின்போது நண்பன் சொன்னான். ஷைலா தன்னைப்பற்றிச் சொன்னாளாம். ஷைலா என்பதே தனக்குப் பிடிக்கும் என்றும் 'அவர்' மட்டும் தன்னை ஷைலு என்று கூப்பிடுவதாகவும், பிள்ளைகள் இரண்டும் இங்கிலிஷ் கொன்வொன்றில் படிப்பதாகவும்...

'செங்கமலம்...' தனக்குள் சொல்லிப் பார்த்தான். இளம் மனைவியின் பெயரில் சினம் பரவிற்று. அதென்ன செங்கமலம், வெங்கமலம், கருங்கமலம் என்று பெண் பேசி வந்தபோதே இவனுக்குப் பெயர் பிடிக்கவில்லைதான். என்ன செய்வது? அம்மாவும், அப்பாவும் 'இவளே உன் வாழ்க்கைத்துணை' எனச் சுட்டுவிரல் நீட்டினார்கள்; பேசிக்கொண்டார்கள்; நிலபுலன்களும், நகைகளும், பெண்ணும், தாலியும் பரிமாறிக்கொண்டார்கள்; இவள் மனைவியாகிப் போனாள். இவன் கூடத் திருமணமான புதிதில் 'கமல்' என்றுதான் செல்லமாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். அங்கிருந்து ஒரு விழி விரிப்போ, நளினமான ஆமோதிப்போ இல்லை. ஆக கமலம், கமலா ஆனதோடு திருப்திப்படவேண்டியிருந்தது. நேற்று அலுவலகத்தில் இருந்து வந்ததும் மனைவியின் நகங்கள்தான் முதலில் கண்ணில்பட்டன. சற்றே சிறிய, தட்டையான, தேய்ந்த நகங்கள். வெண்மை ஆரோக்கியக் குறைவு சொல்லிற்று. ஏன்? ஏன் இவளுக்கு ஷைலா போலிருக்க முடியாதிருக்கிறது? அழகு சாதனங்கள் அத்தனையும் குவிக்கத்தக்க ஆற்றல் இவனிடம் உண்டு; பணம் உண்டு; பதவி, பெயர் புகழோடான கணவன் உண்டு இவளுக்கு. ஆனால் ஏன் இவள் ஆடம்பரங்களில் அல்லது அழகு படுத்தல்களில் அதிகம் நாட்டமில்லாதிருக்கிறாள்? எப்போது பார்த்தாலும் குழந்தை, மாமா, மாமி என்று கொண்டாடியபடியான இவள் இவனுக்குச் சலிப்பாக இருந்தது.

'ஷேவிங்' முடித்துத் திரும்ப மனைவியின் குரல் கேட்டது. "இஞ்சாருங்கோப்பா!"

'என்ரை கணேஷ் சொல்லுவார்....' என்று தொடரும் ஷைலாவின் குரல் மனமேறிற்று. இது தவறா? ஒப்பிடும் பொழுதிற்கு என் மனச்சலனமா காரணம்? வலிந்து முகத்தை சாதாரண நிலைக்கு ஆக்கினேன்.

"என்ன?"

"பின்னேரம் அலுவலில்லாட்டிக்கு யதுவை சலூனுக்கு கொண்டு போக வேணும்"

"ம்...."

"தலைவேர்த்தா தடிமன் வந்திடும் சொல்லி... கொஞ்சம் கூடவா வெட்டச் சொல்லுங்கோ"

"ஓமெண்டுதானே சொல்லுறன்" சினத்தான்.

மனைவி விலகிய பிறகு பாவமாயிருந்தது. ஆயத்தமாகி அன்றைக்கென இவனுக்காகஎடுத்து வைக்கப்பட்டிருந்த ரை தொட்டு சகலதும் அணிந்து மோட்டர் பைக் எடுக்க வாசல் வரை வந்து வழியனுப்புகிற மனைவியில் ஒரு மகாலஷ்மித்தனம் இருக்கிறதுதான். ஆனாலும்... "ஷைலா வீட்டை போக வேண்டியிருக்கு.போயிட்டு... போகலாம். வரட்டா" விடைபெற்றான்.

இவன் வீட்டு முற்றத்தில் பவளமல்லிகை பூக்கள் சொரிந்திருந்தன. வெறுங்கரும்பச்சை இலைகளோடு அந்த மரம், பூக்களும் விஷேச அழகோடில்லை. வெண்பூவுக்கு செந்நிறத்தண்டு படைத்தவன் யார்? ஒரு தோற்றப் பொருத்தம் வேண்டாமா? வெண்ணிறப் பூக்களுக்கு வெள்ளை அல்லது மென்மஞ்சள் தண்டுகளே பொருத்தமானவை. வாழ்வு கூட இப்படித்தான் போய்விடுகிறது சிலருக்கு. இவன் சிவந்த தண்டாகவும் கமலா வெண்ணிறப் பூவாகவும் தோன்றினார்கள்.

ஆனால் பவளமல்லிகை மரம் மௌன அழகுடையது; மிருதுவானது. அதன் பூக்கள் சூரிய கரங்களால் ஸ்பரிசிக்கப்பட்டு மற்றவர்களின் பார்வையில் விமர்சிக்கப்படும் ரகத்தன அல்ல. கறுப்பு இருட்டினுள் அவை மெல்லக் கண்விழிக்கும். மனந்தொடும் சுகந்தத்தை வீடு முழுதும் விசிறும் வாசனையுணர்ந்து ஜன்னல் வழி பார்த்தால் நிலவொளிப் பொழுதுகளில் 'சிவனே' என்று கிடக்கிற சின்ன நட்சத்திரங்கள் போல மினுங்கும். ஆனால் அது பகல் வெளிக்க வீடு வரும் விருந்தினரைக்கவனந்திருப்புவது குறைவு. பகலில் வாசம் கரைந்து போயிருக்க கரும்பச்சை இலைகளோடு உதிர்த்தும் உதிராததுமாக பூக்கள் கொண்டு நிற்கும். பெரும்பாலும் எவரும் அதைப் பார்க்கமாட்டார்கள். சிலர் மட்டும் கண் திருப்புவார்கள். "அட பவளமல்லிகை" வியப்பார்கள்; "எல்லா இடத்திலையும் கண்டபடி வராது" விமர்சிப்பார்கள்; விலகுவார்கள். தெய்வத்துக்கிடவும் உகந்த மிருதுவான மலர்கள் இவை. இவனது மன விருப்பப்படி மதிலோரம் வேலியாய்ப் படர்ந்திருக்கிற போகன்விலாக்கள், பவளமல்லிகைக்கு முரண்பாடானவை. அவை பளீரிடும் ரத்தச் சிவப்பில் அடர்த்தியாய்ப் பூக்கும்; கண்பறிக்கும்; மதில் மீது எட்டி வீதி வழி போகிறவர்களுக்கு 'ஹலோ' சொல்லும்; ஒருகணம் பொறாமைப்பட வைக்கும். தாக்கப்படினும் உதிராது. நாட்கணக்கில் வாடாது சிரிக்கும். முள் உண்டு. தன்னை வருடுவது குழந்தையெனினும் முள் கைகிழிக்கும். முள் உதிர்ப்பதும் உண்டு. எனவே நடுமுற்றத்தில் வைப்பது சாத்தியமில்லை.

**ச.சாரங்கா**

ஷைலா வீட்டின் முன் மோட்டர் பைக் நிறுத்திய பொழுது காலை 7.42 என்றது கடிகாரம். மோட்டர் பைக் வெளியே நிறுத்தி உள்வந்தான். சுத்தமான அழகிய சிறிய வீடு எப்படி சகலதிலும் அழகு பேண இந்தப் பெண்ணுக்கு முடிகிறது? பவளமல்லிகைப் பூக்களின் மிருதுத்தனமும் சுகந்தமும் மாறாதிருக்க போகன்விலா வர்ணமும் அதனுடன் சேர்ந்து ஏன் கலவையாகக் கூடாது? கமலா எப்போது ஷைலா போல் ஆகப் போகிறாள்? மனதுள் கேள்வி குமிழ்த்தது. வெளியே எவருமில்லை. கூப்பிடலாமா? தயங்கினான்.

"மைண்ட் யுவர் ஓண் பிஸ்னெஸ் கணேஷ்" ஷைலாவின் குரல் சற்றே கீச்சிட்டதாய்க் கேட்டது.

"சாப்பிட ஏலுது. பக்கத்து வீட்டோடை வம்படிக்க ஏலுது. வீடு வாசல் 'நீற்'றாய் வைச்சிருக்கக் கஷ்டமாயிருக்கா? சிலதுகளை பேசித்தான் திருத்தவேணும்" வசனங்கள் தெளிவாய் இவனுள் இறங்கின. அந்த நளினமும் மென்மையுமான குரல் எங்கே? எதற்கும் பதற்றப்படுகிற - தவறுக்கு நகங்கடிக்கிற - ஷைலாதானே இது? அதிர்ந்தான். குளிப்பதற்கு அடம்பிடிக்கிற குழந்தைக்குரலும் கேட்டது. வாசல் மணி அழுத்தினான். இரு குழந்தைகள் உள்ளிருந்து எட்டின. 'மங்கி'யும் 'டயானா'வுமாக, நின்றிருந்தன. செய்தி காவி ஓடின. அந்த ஒற்றை நிமிஷத்தில் முற்றுமாய் மனைவியைப் புரிந்தது. அறியாதே கைவந்த வரம் அவள் என்பது புரிந்தது.

சாதாரணமாய் வெளிவந்த 'ஷைலா'விடம் விவரம் சொல்லி குறித்த பத்திரங்களைக் கொண்டு வரும்படி கூறி சடுதியாய் திரும்பினான். முழுதும் குழப்பிய அந்த நகங்களை இப்போது கவனிக்காதிருந்தது நினைப்பில் வந்தது. பயணத்தின் போது பவளமல்லிகை மனதில் வந்தது. மரம் மனதில். நினைப்பில் போகன்விலாவும் தெரிந்தது. போகன்விலா கண்பறிக்கும். ஆயினும் அவை தூரஇருந்து ரசிப்பதற்கு மட்டுமே ஏற்றவை. பவளமல்லிகை அருமை புரிந்தது. "செங்கமலம் ...." மிருதுவாய் மனைவியை கூப்பிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு. பவளமல்லிகைகள் எல்லா இடத்திலையும் கண்டபடி வராது. மனதில் திருப்தி முட்டிற்று.

**சிந்தனைக்கரு:** *வாழ்க்கைத்துணை ஒப்பீடுகள் பற்றி ஒரு கண்ணோட்டம்.*

# சிலம்பு கழி நோன்பும் சீர்பெறு வதுவையும்

தலைப்பினைக் கண்ணுற்றதும், ஆச்சரியம் அடைவீர்கள். அப்படி ஒன்றும் இல்லை; மணிவாசகப் பெருமான், அரச வண்டைப் பார்த்து ஒன்று கூறுகிறார். ஆம், 'தொன்மைக்கோலமே, நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி' என்பது அது. நாமும் பழந்தமிழர்களால், அடிநாள் முதல்கைக் கொண்டு ஒழுகப்பட்டு மறைந்து போய்விட்ட, சிலம்புகழி நோன்பையும் சீர்பெறு வதுவையையும் குறித்துச் சிறிது தெரிந்து கொள்ளுவோம்.

சிலம்புகழிநோன்பு என்பது, திருமணம் ஆகாத மகளிர், திருமணத்தின் முன் இயற்றும் விசேட சடங்கு - விழாவாகும். பழந்தமிழ் மகளிர் திருமணம் காணும் வரை காலில் சிலம்பணிந்து இருந்தனர். சிலம்புக்கு, நெகிழம், பரிபுரம், நூபுரம் என்றெல்லாம் பல்வேறு பெயர்கள் உண்டு. திருமணம் நிகழ்தற்கு உறுதி செய்யப்பட்டதும் சிலநாள்களுக்கு முன்னரே, தாயார் வீட்டில் சிலம்பு கழி நோன்பு இயற்றப்படும். அதன்பின்னர் அவள் சிலம்பணியும் வழக்காறு இல்லை. இவர் திருமணமானவரா? அல்லது திருமணம் செய்யாதவரா? என்பதைத் துணிந்து கொள்வதற்கு ஏதுவாக இருந்தது இது.

பெரும்பதுமனார் சங்ககாலப் புலவர். அவர் சிலம்புகழி நோன்புடன் தொடர்புபட்ட இனிய காட்சி ஒன்றினை தருகிறார்; காண்போம்.

'கொடிய பாலைநிலத்து வழி. அங்கு வாகை மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. காற்று அடிக்கின்றது. வாகை நெத்துகள் ஒலியெழுப்புகின்றன. அயலில் மூங்கில் மரங்களும் கூட நிற்கின்றன. அவ்வழியே நம்பி ஒருவனும் நங்கை ஒருத்தியும் வந்து கொண்டு இருக்கின்றனர். நம்பியின் காலைக் கழல் அழகு செய்கின்றது. கையில் விழிப்புடன் வில்லேந்தி நிற்கின்றான். நங்கையின் கையில் வளையல்கள் தெரிகின்றன. காலிலே சிலம்புகள் ஒலிக்கின்றன. பார்வைக்கு அவ்விருவரும் நற்குடியில் பிறந்தவர்கள் போலக் காட்சி அளிக்கின்றனர். எவ்வூரினர் என்பது தெரியவில்லை: யாவரது மக்களோ? என்று அறிய முடியவில்லை. நல்லாள் திருமணமாகாதவள் என்பதை அவள் அணிந்திருக்கும் சிலம்புகள் அறைகின்றன. நிச்சயமாக இரக்கப்படவேண்டியவர்கள். இன்னும் மணவினை நிறையவில்லை. இல்லவர் அறியாது இருவரும் காதல் வயப்பட்டு உடன்போக்கு நிகழ்த்துகின்றார்கள் போலும்' என்பது அது. (குறுந்தொகை)

**சிந்திப்போம் செயற்படுவோம்**

முந்தையோர், தம்மகளிர்க்கு இளமைப் பருவத்தே சிலம்பு அணிவித்து மகிழ்வர். பின்னர் மணவினை வந்து அடுத்ததும் அதனை நீக்குவர்; கழற்றுவர். அது பெருவிழாவாக நடைபெறும். மைத்துனி ஒருத்தியே சிலம்புகழிக்கும் பணியை இயற்றுவாளாம். சிலம்பு அகற்றும் சடங்கின் போது உண்ணாநோன்பிருத்தலும் உண்டாம். பண்டையோர் இவ்வாறு ஒழுகினர்.

வதுவை என்பதை நோக்குவோம். நன்மணம் இயற்றுதலை வதுவை என வழங்குவர். திருமணவிழாவயர்தற்கு நிரைகால் பல நாட்டி, தண் பெரும் பந்தர் அமைப்பர்! பந்தருள்ளே பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புவர்; விளக்கேற்றுவர். பொழுது விடிந்ததும், சுபமுகூர்த்தத்திலே முதிய மகளிர் நீரெடுத்துவருவர்; புதல்வரை ஈன்ற மங்கைநல்லார் நால்வர் மணமகளை நீராட்டுவர்; நீரொடு மலர் சொரிந்து வாழ்த்துவர்; பேரிற்கிழத்தியாகென ஆசி உரைப்பர்.

உழுந்துஇட்ட குழைதலை உடைய கும்மாயத்துடன் கூடிய பெருஞ் சோற்று அமலை யாவர்க்கும் வழங்கப்படும். இருமுது குரவர்களும் நீர்வார்த்துத் தம் மகளை தலைமகன் கையில் ஓம்படைப்பர். ஓம்படை, கையடை என்றும் வழங்கப்படும். அதாவது நீ, இவனை இன்னவாறு கொண்டொழுகுதி என்று புத்திமதி கூறிக் கையளித்தலாம். சிலப் பதிகார காலத் தில்

**தேன்கூடு**

இம்முறை சற்று மாறி 'மாமுது பார்ப்பான் மறை வழி காட்டத் தீவலஞ் செய்து' இயற்றும் மண முறை கால்கொள்ளத் தொடங்கிற்று என்பதும் நாம் உணரவேண்டும். சங்க இலக்கி யங்களில் 'புலிப்பற்கோத்த புலம்பு மணித் தாலி' என்ற பிரயோகம் இருத்தலையும் காண்கின்றோம். இந்நாளில் தாலிபெண்ணுக்கு வேலி என்கிறார்கள். இனி ஐங்குறுநூற்றில் இருந்து ஒருபாடலை நோக்குவோம்.

'தலைவியைத் தலைவன் மருட்டித் தன்னோடு அழைத்துப்போயினன் என்ற செய்தியை ஈன்றவள் அறிந்தாள்; பெரிதும் வருந்தினாள். தலைவன் ஊரின்கண் இருந்து வந்தோர் சிலர், அவளிடம் சென்று, 'அன்னையே தலைவனுடைய தாய், நின்மகளைத் தன்மகனோடு பெரிதும் விரும்பி வரவேற்று, அவளுக்கு சிலம்பு கழீஇ நோன்பு நிகழ்வித்து மகிழ்ந்தனள். யாம் அச்சடங்கு கண்டு வருகின்றோம்.' என்று உணர்த்தினர். அது கேட்ட ஈன்ற தாய் 'நீயிர் அங்குச் சென்று சிலம்பு கழிக்கும் விழாவை செய்தாளாயினும் ஆகுக! அடுத்து நின்ற வதுவைமணத்தையேனும் எம்மனைக்கண் செய்யத் தலைவன் தாயிடம் உடம்பாடுபெற்று வம்மின்' என வேண்டிக் கொள்கின்றாள்.

இனிப்பாடலைப் படிப்போம்

நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகென
சொல்லின் எவனோ? மற்றே வென்வேல்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே

ஐங்–366

(கழீஇ–கழித்து; அயர்தல்–விழாவெடுத்தல்; மையறவிளங்கிய – குற்றந்தீர்ந்து விளங்கிய; மறக்கழல் – வீரக்கழல்)

இங்கு பேரன்புடைய தாய், தன் அருமைத்திருக்குமரிக்கு, சிலம்பு கழிக்கும் நோன்பையும், மணவினையையும் தன் இல்லத்தில் வைத்து நிகழ்த்த விரும்பியிருந்தாள். சூழ்நிலை காரணமாகத் தம்மை அவர்கள் வஞ்சித்துச் சென்றுவிட்டனர் என எண்ணுகின்றாள். மருகன் மகளை மருட்டி அழைத்துச்சென்றமையை எண்ணிப் 'பொய்வல்காளை' என்கின்றாள். அதுமட்டுல்ல 'அவன் வீரத்தை வெல்வேற்காளை என்றும், கழலடிக்காளை' என்றும் மறுபுறம் புகழவும் செய்கின்றாள்.

தொடரும்

*- சிகண்டியார்.*

# இந்த வார இராசி பலன்

## 26-02-2000 இலிருந்து 03-03-2000 வரை

| | | | |
|---|---|---|---|
| செவ் | வியா. சனி | | |
| சூ புத | இராசிச்சக்கரம் | | ராகு |
| வெ கே | | | |
| | | சந் | |

*மாற்றம்: விசாகம் 3ஆம் பாதம், துலாம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*அரசியல்வாதிகள் அவதிப்படலாம். மக்கள் எதிர்ப்புக்கள் இருக்கும். அவர்களின் துன்பங்களால் வேதனை, இடப்பெயர்வு ஏற்படலாம். சமாதானம் ஏற்படக் குரல் கொடுக்க இடமுண்டு. தொழிலாளர்கள், மாணவர்கள், மக்கள் பல கோணங்களிலிருந்து பல கோரிக்கைகளை வைத்துக் குரல் எழுப்ப இடமுண்டு. வெளிநாட்டார் பேச்சுக்கள் தொடர இடம்உண்டு. இந்தியாவில் அரசியல்வாதிகள் பழிதீர்க்கப்படலாம். பொருளாதார, விஞ்ஞான, அணு ஆயுதப் பெருக்கம், வடக்கு முனையில் தாக்கச் சூழ்நிலை உருவாகும். மேற்கு உலகு புதிய நடைமுறைகளை உலகில் விளம்பரப்படுத்தும். கிழக்கு நாடுகளில் அணு ஆயுத வலு அதிகரிக்கப்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## சோதிட சஞ்சீவி

### மேடம்

வீடு ஒரு கூடு. வீட்டிற்கு மாலையில் சென்று காலையில் வெளியில் வரும் பறவைகள் போன்று சில மனிதர்கள் கூட்டில் அடைக்கப்படாமல் சுதந்திரப்பறவைகளாகப் பறந்து திரிகின்றார்கள். அதுபோல சுதந்திரப் பறவையான நீங்கள் எதற்கும் கட்டுப்படாமல் தொழில் ஸ்தானத்தில் தொழில் புரிந்து இலாபங்களை அடைவீர்கள். எதிலும் நுட்பமாகக் கருமமாற்றி வெற்றி கொள்ளுவீர்கள். சகோதரர், புத்திரர்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதிர்ப்பாளருடன் கருத்து வேற்றுமைப்படாது பார்த்துக் கொள்ளுங்கள். வயிற்று நோ, வாய்வுத்தொல்லை, நெஞ்சமுத்தம் இருக்கும். சாப்பாட்டை மிதப்படுத்திக் கொள்ளுங்கள். வாகனச் செலவுகள் அதிகரிக்கலாம். பிரயாணத்துறை, கடற்துறை, புடைவைக்கடை, விவசாயம், பத்திரிகைத் துறை, போன்ற துறைகளில் தொடர்பானவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### இடபம்

கடன்பட்ட நெஞ்சம் எப்படிக் கலங்கும். அதுபோல நீங்கள் கலங்குவீர்கள். தொழில் ஸ்தானத்தில் பதற்றம் அதிகரிக்க இடமுண்டு. புதிய முதலீடு செய்வதில் நிதானமாக இருக்கவும். வாகன ஓட்டம், பிரயாணத்தில் கவனமாக இருக்கவும். இழப்புக்கள் வரலாம். தொழிலில் வருமானம் அதிகரிக்கும். தந்தை வழிச் சகோதரங்களுக்கு நல்லதல்ல. பொருள் இழப்பும், அவமானமும் தேடிவரலாம். சலத்தில் பிழை, வாய்வுத்தொல்லை, சளித்தொல்லை என வருந்த இடமுண்டு. விருந்து எனப்போய் மருந்து தேட வேண்டி வரலாம். இடமாற்றம், பிரயாணங்களைத் தவிர்த்து நடவுங்கள். பொருள்கள் களவு போகலாம். தோட்டம், பண்ணை, குருத்தொழில், ரீவி, செய்தித்துறை போன்றவர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

பழகியவர்கள், தெரிந்தவர்களை, தொழில் ஸ்தானத்திலோ, வீட்டிலோ சம்பளம் அல்லது வாடகைக்கு வைப்பதனால் பலவித துன்பங்கள் ஏற்படும். மிகவும் வேகமாக தொழில் ஸ்தானத்தில் செயற்பட்டுவரும் உங்களுக்கு அடிக்கடி கோபம் வந்தபடி இருக்கும். தூரதேசச் செய்தி மகிழ்ச்சி தரும். பழைய காசு சிலருக்கு வந்து மனநிறைவு கொடுக்க இடமுண்டு. இடமாற்றங்கள் நன்மை தரும். சளித்தொல்லை, வாய்வு வாதம், கைகால் தூக்கம், நரம்புப் பலவீனம் என்பனவற்றால் வருந்துவீர்கள். கண்பார்வை சிலரை வருத்தும். கோவில்துறை, அச்சுத் தொழில், குருத்துறை, மருந்துத் துறை, பத்திரிகைத்துறை, செய்தி ரீ.வி, சினிமாத்துறையினர், வியாபாரிகள் போன்றவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### கடகம்

பழக்கதோஷம் மனிதனை இலகுவில் விட்டுப்போகாது. இனஜனம், சகோதரங்களுடன் மனக்கருத்து வேதனை தரும். விதி, சதிசெய்தால் நாம் என்ன செய்யமுடியும்? இறைபக்தி கொண்டு மாற்ற முயலுங்கள். தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்களுடன் வாக்குவாதப்படுவீர்கள். நெஞ்சமுத்தம், வாய்வு, முட்டு வரலாம். சாப்பாட்டை நிதானப்படுத்தவும். கீரைவகை சாப்பிடவும். சலவருத்தம், தோல்புண், காயங்களில் நிதானமாக இருக்கவும். தானதர்மச் செலவு, ஆலயவழிபாடு ஓரளவு மனஆறுதலைத் தரும். சட்டத்துறை, நிர்வாகத்துறை, அரசியல் துறை, வியாபாரத்துறை, ஆலய வேலை தொடர்பானவர்களுக்கு பலவித மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும். தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும். பிரயாணங்களால் இழப்புவரும். தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

கூடி இருந்தவர்கள், குறை சொல்லித் திரிந்தால் எவ்வளவு வேதனை வரும். தொழில் ஸ்தானத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்காத சிலர் தூற்றித்திரிவர். அதற்காகப் பயப்படாதீர்கள். சிங்கத்தை எதிர்த்தோ, குறை சொல்லியோ எவரும் வென்று விடமுடியாது. சந்தேகம் அடிக்கடி வரும். எதையும் ஆராய்ந்தபடி இருப்பீர்கள். உடல் களைப்பு அடிக்கடி வரும். வயிற்று ரோகம், கைகால் பிடிப்பு, வாய்வுத் தொல்லை என்பன வரலாம். அடிக்கடி ஓடியாடித்திரிந்து விழலாம். தூரதேசப் பிரயாணம் தாமதப்படும். செய்திகள் மனத்திருப்தி தரும். போக்குவரத்துத்துறை, விவசாயத் துறை, குருத்தொழில், கடல்வேலைகள் தொழில்நுட்பத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மாற்றங்களும் நன்மைகளும் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

### கன்னி

எந்த மனிதரிடமும் ஒருசில குறை குற்றங்கள் இருக்கத்தான் செய்யும். தொழில் ஸ்தானத்தில் ஏற்படும் குறை குற்றத்தாக்கங்களை மிக அவதானமாகக் கடந்து விட முயற்சி எடுங்கள். தொழில் ஸ்தானத்தில் குறைகுற்றம் பார்ப்பார்கள். ஆனால் மேலதிகாரிகளின் அனுதாபம், ஆதரவு இருக்கும். எதிர்ப்பாளர் ஆதரவு தருவார்கள். காணி பூமி வீடு மனைச்சிறப்பு வரும். அடிக்கடி கோவம் வரும். நாரிநோ, சளிமுட்டு, விறைப்பு, வாய்வுத்தொல்லை என்பன கொடுக்கும். இடமாற்றங்களில் பொருள் தவறலாம். நண்பர்கள், அயலவர்களில் கவனமாக இருக்கவும். பத்திரிகைத்துறை, செய்தித் துறை, வியாபாரம், வாசனைப் பொருள்கள், நிர்வாக வேலை போன்றவர்களுக்கு மாற்றங்களும் பொருள் வரவுகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### துலாம்

மாடி வீடு அல்லது அடுத்தவீடு உங்கள் வீட்டுச் சுவாமி அறை முகட்டிற்கு நேரெதிரே வரவோ உயரவோ கூடாது. அதனால் சில பாதிப்பு, தோஷ நிலைகள் வர இடமுண்டு. வாஸ்த்து சாஸ்திரம் தெரிந்தவர்களைக் கொண்டு அக்குறைதீர வழி தேடுங்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி போட்டிகள் வரும். தவிர்த்துக் கொள்ளுங்கள். பிரச்சினைகள், துன்பங்கள் வரும். சமமனோநிலை, தளம்பல் நிலையைச் சமப்படுத்தும். ஓய்வு முக்கியம். எதிர்ப்பாளர் ஆதரவு தருவர். காரியச்சித்தி பெரியவர்களின் உதவிகள் புதிய ஆடை, அணிகள் வாகனச் செலவுகள் என்பன வரும். வாய்வுத் தொல்லை, நாரிநோ, வயிற்றில் வருத்தம் தலையிடி இருக்கும். தகப்பன் வழியினருக்கு இழப்பு கொடுக்கும். சட்டத்துறை, குருத்துறை, விவசாயத்துறையினருக்கு இலாபங்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

கோயில் திருப்பணிகள், தொண்டுகளை எல்லோரும் தொடர்ந்து செய்யமாட்டார்கள். ஒரு சிலர்தான் புனிதமாகச் செய்து பலன் அடைகின்றார்கள். அதுபோல தொழில் ஸ்தானத்தில் கடமைகளை எல்லோரும் திறம்படச் செய்து முடிக்கமாட்டார்கள். இதற்கு விதி விலக்கு நீங்கள். இதயசுத்தியுடன் போராடி தொழில் பீடத்தில் கடமைகளை நிறைவேற்றுவீர்கள். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். புதிய ஆடைகள் கிடைக்கலாம். நண்பர்கள் உதவுவார்கள். மதக்காரியங்கள், கோயில் தரிசனம் மனஅமைதி தரும். தீய சக்தியால் வீண்பழி கேட்க நேரிடும். நெஞ்சு, தலை, வயிறு, நாரி போன்ற இடங்களில் சிறுரோகம் வந்து மாறும். வியாபாரம், விவசாயம், அரசியல்துறை, கமிஷன்துறை போன்ற துறையினருக்கு அதிக மாற்றங்கள் வரும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

### தனுசு

நாம் ஒரு குறுகிய வட்டத்துக்குள் திரும்பத் திரும்ப ஓடி ஓடி வருகின்றோம். ஆனால் உங்களை எவரும் கட்டுப்படுத்த முடியாது. வெளிப்படையாகப் பேசி எதையும் சாதிக்க முயலுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் சிலர் எதிர்ப்புக் காட்டுவர். மேலதிகாரிகள் வாழ்த்துவார்கள். இடமாற்றங்கள், லீவு எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொருள் களவு போகலாம். பெரியவர்களால் உதவிகள் கிடைக்கும். அரச அதிகாரிகள் ஆதரவு தருவார்கள், இனஜனவிரோதம், அயலவர்கள் கோள் சொல்லுவார்கள். இடமாற்றங்களால் நற்பலன் ஏற்படும். வைத்தியம் செய்து சுகம் அடையலாம். விவசாயம், செய்தித்துறை, ரீ.வி, கலைத்துறை, வியாபாரத் துறையினர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

## மகாதேவா ஜோதிடம்

### மகரம்

கொம்பியூட்டரில் திருமணப் பொருத்தம் பார்ப்பதில் குற்றம் இல்லை. ஆனால் கொம்பியூட்டரினால் பொருத்தம் எனக் கொடுக்கப்பட்டவை மகாதேவா ஜோதிடத்தினால் பொருத்தம் இல்லை என முடிவு சொல்லப்பட்டுள்ளது. எனவே தொழில் ஸ்தானத்தில் நீங்கள் தவறுகள் விடாது, போட்டிகள் போடாது விவேகமாக நடந்து கொள்ளுங்கள். அல்லது இழப்புகள் ஏற்படும். குடும்பத்தில் எதிர்ப்புக்கள் வரும். சகோதரங்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். சளி, வயிற்று நோ, நரம்புப் பிடிப்பு, நாரிநோ என மருந்து எடுக்க நேரிடலாம். எந்த விஷயத்திலும் சலிப்படையாது பொறுமையாக மற்றவர்களை தூற்றாமல் இருக்கத் தெண்டியுங்கள். கடல்துறை, வைத்தியத்துறை, விஞ்ஞானத்துறை, குருத்துறை, சம்பந்தப்பட்டவர்களுக்கு மாற்றங்கள் வரும்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.*

### கும்பம்

அவசர உலகம். மணப்பெண்ணுக்கு மணமகன் கிடைக்காத காரணத்தினால் பல பெற்றோரை ஏமாற்றிச் சில புரோக்கர்கள் திருமணம் செய்தவர்களையே திரும்பவும் பதிவுத் திருமணம் செய்து தமது புறோக்கர் கமிஷனை வசூலித்துள்ளார்கள். இதேபோன்று தொழில் ஸ்தானத்தில் பல தில்லுமுல்லுகளை சக நண்பர்கள் செய்ய நேரிடும். மிகக் கவனமாக இருக்கவும். களவு போகலாம். மேலதிகாரிகள் கண்டிக்கலாம். இடமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. நாரிவலி, நரம்புநோ, சளி, வாய்வுக்குத்து, தலைச்சுற்று என்பனவரலாம். குருத்துறை, வியாபாரம், விவசாயத்துறையினர் போக்குரத்து, சட்டத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.*

### மீனம்

சுழிஓடி வழிதேடும் சிலர் பல அப்பாவிகளை ஏமாற்றுவதை பல நூற்றாண்டாக நடந்து வந்துள்ள சம்பவங்கள் மூலம் நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம். ஏமாற்றி வருபவர்கள் ஏமாறும் காலம் அதிக தூரத்தில் இருக்காது. என்ன? ஏமாற்றங்கள் தொழில் ஸ்தானத்தில் வந்தால் எதிர்கொண்டு சமாளித்து விடுங்கள். போட்டிகள் சர்வசாதாரணம். நெஞ்செரிவு கைகால் நரம்பு விறைப்பு, வாய்வுத் தொல்லை என்பன வந்து வருத்தலாம். கடன் கொடுத்து கவலைப்படுவீர்கள். வியாபாரத்துறை, மருந்துத்துறை, சட்டத் துறை, கமிஷன்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.*

## நாற்காலி

நாலு காலி நாற்காலி
நன்றாய் இருக்க நற்காலி;
கோலும் பணிகள் எவையேனும்
கொள்ளை உள்ளோர் குவி காலி;
சாலும் என்று இருப்போர்க்கு(த்)
தகமை சேர்க்கத் தகுகாலி;
மேலும் கீழும் இருப்போர்கள்
மிகுவாய் நாடும் மிடுக்காலி;
ஏலும் மட்டும் இதன்மீது
இருந்த பேர்கள் பலர்காலி;
நாலும் தெரிந்தோர் இதில்அமர்ந்தால்
நாட மாட்டார் பிறர்சோலி
மடிகால் போட்டு முன்நாளில்
மமதை இல்லா(து) இருந்தார்கள்;
வடிவாய்(க்) கருமம் ஊர்மெச்ச
வகைவகை ஆகச் செய்தார்கள்;
சரியாய்(த்) தகுதி உள்ளவரை(த்)
தலைமைப் பதவிக்(கு) இட்டார்கள்;
பரிவாய் அதற்கு அணிசெய்யும்
பாங்கில் கடமை புரிந்தார்கள்;
இடிப்பா(டு) இல்லை ஏக்கமில்லை
இன்ப மரக வாழ்ந்தார்கள்;
குடியாய்(க்) கூடி ஒருகுலம்போல்
குடிகள் ஆட்சியில் உயர்ந்தார்கள்;
தம்கால் ஆட்டி நாற்காலில்
தடல்புடல் என்னப் பின்நாளில்
தெம்பாய் இருந்தார்; அதிகாரச்
செருக்குத் தலைமேல் ஏறியது;
சாந்த குணங்கள் அகன்றிடவும்
சமரசப் போக்கு அற்றிடவும்
மாந்திப் பதவிப் போதையிலே;
மற்றவர் நலன்கள் துறந்தார்கள்
அறநெறி அக்லத் துணைநின்றார்;
ஆளுமை இன்றித் தவித்திட்டார்;
திறமெலாம் இழந்து செய்கருமம்
தேய்ந்திட ஓய்ந்து போனார்கள்!
வெற்று எலும்பாம் பதவியதில்
விருப்பாய் சதையும் இருக்கென்று
பற்றி ஓர்நாய் பல்கடிக்க(ப்)
பக்கம் செல்லும் பலநாய்கள்;
உற்று உறுமி ஒவ்வொன்றாய்
உரத்துச் சண்டை இட்டிடுமாம்;
இற்றுப் போகும் ஒன்றிற்காய்
இவர்கள் தமக்குள் பகைப்பதனை(ச்)
சற்றும் பாரும்! நாற்காலி
சார்ந்த பதவி என்பதுவும்
வெற்று எலும்பே! இதற்காய் ஏன்
வேண்டா விதண்டா வாதங்கள்
பதவி வரைத்தன்(று) பலர்உதவி
பதவி வகுப்பார் சால்பினதே!
பொறுதி பதவிக்(கு) உறுதியது;
குறுகு வழியெனில் குன்றிடுமே!
சோலி வளர்த்துச் சொகுசிருந்தால்
காலி ஆகும் நாற்காலி!


\- தீவகன் -

## கேள்விகளின் தவிப்புகள்

மனிதராக நாங்களொன்று வாழ்வதிந்த நாட்டிலே.
'வலி' மறைந்த நெஞ்சினிக்க என்றுயர்வோம் வீட்டிலே!
முனி அடித்த மாதிரியாய் முனகும் எங்கள் பாட்டிலே
முன்பு போன்ற இதங்கள் வேணும்; இடிவிழுவும் வேட்டிலே!
சனிபிடித்த மாதிரியாய்ச் சாய்ந்ததெங்கள் ஆற்றலே!
தலையெடுத்து.... எமையடக்கத் திரியும் பேய்கள் காற்றிலே!
குனியவைக்கும் கொடுமை தன்னை கரைத்தகற்றும் ஊற்றிலே
குளிக்க வேணும்; எத்தனைநாள் நிற்பம் குருதிச் சேற்றிலே?

பேய்பிசாசு வாழும் கூட்டில் பேரெழில்கள் சூழுமா?
பிச்சை தேடி உண்ண ஓடின்.... பிணி மறைஞ்சு போகுமா?
காய்ச்சுப் போன நெஞ்சில் அன்புக் கேணி.... தேன் சுரக்குமா?
கையிருப்பிழந்த பின்பு.... கனவை வாங்கின் லாபமா?
ஏய்ந்த வில் முறிந்திடாமல் நிம்மதி நிலைக்குமா?
எய்தவர் அகன்றிடாமல் எண்திசை சிரிக்குமா?
மாயமானை நம்புமெங்கள் வாழ்வென்ன கூ தாட்டமா?
மறைந்து போன உண்மை தோன்றி மீண்டும் மகுடம் சூடுமா?

\- அருணன் -



# வெள்ளை றோஜா முள்

14

மோரீஸ் கபே சல்லடை போடப்பட்டிருக்கிறது. மேவின் வேறு இங்கு வேலை பார்க்கிறான். வங்கிக் கொள்ளையர்கள் துணிவாக இங்கே வந்து போயிருக்கிறார்கள்.

தகவல்களுக்கு முடிச்சுப்போட முயன்று கொண்டிருந்தாள் எமிலி. அங்கு வேலை செய்பவர்களில் வேறு யாராவது மேவினுடன் சிறையில் இருந்தவர்களா? மைக்கிற்கு வேண்டியவர்களா?

கேள்விகளால் மண்டையைக் குடைந்தபடி தனது காருக்குத் திரும்பினாள் அவள். கதவைத் திறக்க முற்படவும் கண்ணில் பட்டது நெஞ்சில் சுருக்கெனத் தைத்தது.

காரின் கதவில் செலோடேப் போட்டு ஒட்டப்பட்டிருந்தது அந்தக் கருகிய ரோஜா மலர்க் காம்பு - முட்களுடன்!.



இது! இது? இது???

சவாலா? கரோல் அனுப்பி வைத்ததா? அவளின் லொக்கரில் இருந்ததா? கரோல் கருகி இறந்து விட்டாளா? இது யார் வேலை? கேள்வி மேல் கேள்வி கேட்டுத் தவித்தாள் எமிலி. மீண்டும் ஹோட்டலுக்குள் நுழைந்தாள்! மேவின் முகத்தைப் பார்க்க வேண்டும். அவன் கண்கள் சேதி சொல்லுமா?

மேவினிடம் புதிதாக எந்த மாற்றமும் தென்படவில்லை. இவள் முகத்தில் வேகம் கொடூரமாகத் தெரிந்தது. அவனைப் பச்சையாகத் தின்ன வேண்டும் போலிருந்தது. எல்லாம் மேவினின் வேலைதான் என நினைக்கிறாள் எமிலி. துப்புகள் கிடைக்கவில்லை.

விரக்தி மேலிட மீண்டும் காருக்குத் திரும்பினாள். கிளப்பிக்கொண்டு புறப்பட்டாள்.

இன்று எக்ஸ்பிறஸ் எலக்ரோனிக்ஸ் சல்லடை போடப்படுகிறது. மேனுக்கு வியர்த்துக் கொட்டியது. அதிகாரிகள் சிரித்துச் சிரித்து அவனோடு பழகினாலும் பயம் மனதைக் கௌவிக்கொண்டுள்ளது.

என்ன தேடுகிறார்கள்? எதைத் தேடுகிறார்கள்? என்பதெல்லாம் விளங்கவில்லை. நிலவறை பிடிபட்டுப் போகிறது. அங்கேகூட ஏதும் வித்தியாசமாக இல்லை. எங்கும் எலக்ரோனிக் தகடுகள் தான் குவிந்து கிடந்தன. அவை என்னென்ன வேலைகளைச் செய்யுமோ என்பது கடும் ஆராய்ச்சிக்குரிய விடயம்.

சாதாரண தேடல்களில் ஏதும் வித்தியாசமாகப்படவில்லை. போகப் போக தேடலின் பாணி மேனுக்கு ஆறுதலைத் தந்தது.

இரத்தக்கறை இருக்கும் இடங்கள் துல்லியமாக ஆராயப்பட்டன. தொழிலாளர்கள் கடமையின் போது ஏதாவது காயப்பட்டு கறைகள் ஏற்பட்டிருக்கலாம். பெரிதாக ஏதும் இல்லை.

எக்ஸ்பிரஸ் எலக்ரோனிக்ஸின் விபத்துக்குள்ளான டிறக்கினுள் இருந்த இரத்தக் கறைகள் கரோலினதும் மைக்கினதும் என உறுதி செய்யப்பட்டமையே இந்தத் தேடலுக்கு காரணம் என அறிந்து கொண்ட மேன் சற்று ஆறுதலடைந்தான்.

தேடலுக்கும் வங்கிக் கொள்ளைக்கும் தொடர்பில்லை என்ற தெம்பு அவனுக்குப் போதுமாக இருந்தது.

திடீரெனத் தலைமறைவாகாமல் மெல்ல மெல்ல நழுவ வேண்டும். கொள்ளையடித்த பொருள்களுடன் எங்காவது போய் சொகுசாக வாழ வேண்டும். இதுவே மேனின் திட்டம்.

இனிக் கரோல், டானியல், மைக், ஜோன் என்று சுற்றுவது சரிப்படாது. அது சிக்கலை வளர்த்து விடும். தேடிச் சேர்த்ததெல்லாம் இழக்க வேண்டிவரும். ஆனால் மைக்கையோ ஜோனையோ ஏமாற்றித் தப்புவது கடினமாகலாம்.

சோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே தீவிரமாகச் சிந்தித்தான் மேன். அவ்வேளை எமிலியின் கார் வந்து நின்றது சற்றுச் சங்கடமாக இருந்தது.

மைக்கின் சிறைச்சாலைச் சிநேகிதர்கள் பட்டியலில் மேனும் மேவினும் இணைகிறார்கள் என்ற எண்ணம் எமிலியை இங்கு இழுத்து வந்தது. பொலீஸாரும் இருவரின் தொழிலிடங்களையும் துளைத்து இருக்கிறார்கள்.

என்றாலும் சிக்கலான முடிச்சு அவிழ மறுக்கிறது. எமிலி மேனிடம் செய்தி சேகரிப்பது போல உரையாடினாள். மேவின் என்ற பெயரைச் சொன்னதும், மேனின் முகம் சற்று மாறுவதை அவதானித்தாள்.

மேன் சங்கடத்தில் நெளிந்தான். டானியலின் வனவாசம் பற்றி மேவின் ஏதாவது உளறி ஜோன் பிடிபட்டால் கரோல், மைக், அவர்களை ஒப்படைத்த தான் என்று பட்டியல் நீண்டு விடுமோ என்ற மனப்பயம்...

அள்ளி வந்ததை அனுபவிக்க முதல் உள்ளே தள்ளிவிடுவார்களோ என்ற அச்சம் தலையெடுத்தது. இப்படி எடுத்ததெற்கெல்லாம் மிரண்டால் நிம்மதியாக வாழ முடியாது.

வருவது வரட்டும் என்று வாழ்க்கையைச் சவாலாக ஏற்கத் தயாராகினான் மேன்.

சல்லடை போட்டவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். எமிலியும் புறப்பட்டுவிட்டாள். பொலீஸ் அதிகாரி மோலரும் எமிலியும் நிறையவே இரகசியம் பேசிக் கொண்டனர்.

மேனும் மேவினும் சந்திக்கும் வாய்ப்புக்கள் ஏதாவது உண்டா என்பது பற்றி இப்போ எமிலி தீவரமாக ஆராய்ந்தாள்.

பொலீஸாரும் தகவல்களை இலேசில் வெளியிடமாட்டார்கள். இவளும் தான் சேகரித்த தகவல்களை அவர்களுக்குத் தருவதில்லை. இணைந்து இயங்காமல் தாம் தாம் பேரெடுக்கும் நோக்கில் செயற்படுவதும் சங்கதிகளை அம்பலப்படுத்த இயலாமைக்குக் காரணமாகிறது.

என்றாலும் மேவின் - மேன் தொடர்புபற்றி ஏதாவது துப்பு உண்டா - சிறைக்குப் பிந்திய உறவு உண்டா என எமிலி மோலரிடம் கேட்ட கேள்வி மோலரைச் சிந்திக்க வைத்தது.

முதலில் கம்பனியை பொலீஸார் வளைத்தபோது மேவின் நழுவியதை அப்போது பொலீஸ் கண்டு கொள்ளவில்லை. மோரீஸ் கபே சோதனையின் போதும் அவனைப் பற்றி பொலீஸ் கவலைப்படவில்லை.

இப்போ எமிலியின் கேள்விக்கு சபாஷ் போட்டு விடை தேடத் துடித்தான் மோலர்.

தீர விசாரித்ததில் விடைகள் பிசகிப் போயின. கொள்ளை நடந்த அன்று முழுவதுமே மேவின் மோரீஸ் கபேயை விட்டு வெளியேறவேயில்லை.

கம்பனியில் மேனின் பாவனைக்குத்தனி லிப்ட் இருப்பதால் அவன் போவது வருவது தெரியாது.

## பாகம் II

எனினும் கொள்ளை நடந்தபின் தொடர்பு கொண்டபோது அவன் கடமையில் இருந்திருக்கிறான். கொள்ளைக்குச் சில்மணி நேரம் முன்பும் கூட பொலீஸ் கம்பனியை வளைத்தபோது மேன் உள்ளே தான் இருந்தான்.

மோலரும் எமிலியும் அடிக்கடி சந்தித்துத் தலையைப் பிய்த்துக் கொண்டனர். போத்தல்களைக் காலி பண்ணினர். மோரீஸ் கபேயிலும் மோலரின் அல்லது எமிலியின் அலுவலகத்திலும் வீட்டிலும் சந்திப்புக்கள் அடிக்கடி இடம்பெற்றன.

ஆளுக்கு ஆள் போதை ஏற்றித் தகவல் பிடுங்க முனைந்து கொண்டிருந்தனர். இந்தப் போட்டியில் அடிக்கடி எமிலியிடம் மயங்குவது மோலர்தான். பிடிவிடாமல் நழுவி நழுவி நடித்துக் கறப்பதில் எமிலி படு சுட்டி.

மோலரின் தவிப்பு எமிலிக்கு நகைப்பாக இருந்தது. நல்லாகத் தவிக்கட்டும் என்று பாச்சா காட்டுவாள். ஏற்றி விட்டு ஏணியை எடுத்து விடுவாள். எதற்கும் விட்டுக் கொடுக்காத காரியக்காரி அவள்.

இவ்வளவு நடித்தும் மோலரிடம் உள்ளதெல்லாம் கறந்தும் தகவல்கள் போதவில்லை. இது நேரத்தை வீணடிக்கும் முயற்சிபோல்பட்டது எமிலிக்கு.

. அன்று எமிலி மேவின் பரிமாறும் மேசைக்கே வந்துவிட்டாள். மோரீஸ் கபேயில் கூட்டம் அதிகமில்லை.

மேவின தடுமாறினான். வியர்த்துக் கொட்டியது. பதற்றத்தைத் தணிக்க முயன்றான். இயலவில்லை.

இவள் ஏன் இங்கே சுற்றுகிறாள்? அடிக்கடி தனித்து வந்து நோட்டம் விடுகிறாள்? ஏதோ பிடுங்கப் பார்க்கிறாள்.

டானியலைக் கடத்தி ஒட்டாண்டியான தன் கதைக்குள் இவள் மூக்கை நுழைக்கப் பார்க்கிறாளா? வேறெதை அவன் நினைப்பான்?

அவன் பரிமாற வரவும் அவள் பேச்சுக் கொடுத்தாள். ஒவ்வொன்றாக, கொஞ்சம், கொஞ்சமாக ஓடர் கொடுத்து அடிக்கடி அவனைத் தன் பக்கம் இழுத்தாள்.

சிறைச்சாலை பற்றிக் குசலம் விசாரித்தாள். அவனோடு இருந்த கைதிகள் பற்றிக் கேட்டாள். மைக் பற்றி அவள் கேட்ட போது கூட அவன் சாதாரணமாகவே தென்பட்டான். மேன் என்ற சொல்லைக் கேட்டதும் மேவின் முகம் மாறியதை எமிலி கவனித்தாள்.

இவன் பெயரைச் சொன்னபோது மேன் முகம் சுருங்கியது நினைவுக்கு வந்தது.

இந்த அதிர்ச்சியோடு சில கேள்விகளைக் கேட்டு மேவினைக் குழப்பி விடலாம். தகவல்கள் ஆழமாக இருந்தால் இடத்தைக் காலி பண்ணி விடுவான். பின்பு ஆளைப் பிடிக்கவும் இயலாது என நினைத்தாள்.

காரியத்தைக் கெடுக்குமாப்போல் மோலர் வழிந்து கொண்டு வந்து சேர்ந்தான். எமிலிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. அழையா விருந்து. (தொடரும்)

## அன்னையின் சன்னதம்!

மூவேந்தர் முடியாளத் தமிழாண்ட காலம்
முடிவின்றித் தமிழன்னை யரசாண்ட கோலம்
பாவேந்தர் பாமீது பைந்தமிழின் தாளம்
பலகாலம் ஒலித்திட்ட போதிந்த ஞாலம்

தமிழென்ற மொழிகேட்டுத் தலைசாய்த்த நேரம்
தளராத திறலோடு வாழ்ந்திட்ட வீரம்
அமிழ்தென்ற தமிழ்நின்ற புகழுச்சி ஓரம்
அதையாவும் வரைத்திட்டா வாகிடுமே பாரம்!

பூமீது சாய்ந்தாடும் காற்றிங்கே கூறும்
பூபாளம் கேட்டெங்கள் புகழென்றும் ஏறும்
காமீது பாய்ந்தோடும் அருவிதினம் தோறும்
கமழ்கின்ற மொழிகளிரே எம்மனமும் ஆறும்

மின்னலென எம்மன்னை வழிகளிலே யாடும்
வண்ணமொழி யழகினிலே வானவெளி பாடும்
கன்னலென எம்மன்னை கூறும்மொழி கூட
காற்றலையின் மீதுஒரு கவிதையினைத் தேடும்

எம்மட்டு மெம்மொழியின் புகழ்நின்ற போதும்
இன்றெங்கள் மீதுதினம் துயரலையே மோதும்
செம்மணியில் ஆழ்ந்திட்ட எம்முறவின் காதும்
இங்கெமது இன்னலிசை கேட்டுமனம் ஓதும்

எழில்கொண்ட எம்பூமி இடுகாடாய்ப் போச்சு!
இன்றுஇது சாத்தானின் இராச்சியமாய் ஆச்சு!
அழியாத புகழ்கொண்ட தமிழ்கெட்டுப் போச்சு!
அதுகாட்டச் சான்றுகளும் இல்லாது ஆச்சு!

தமிழன்னை தான்பெற்ற த[illegible]ாட வெந்தாள்
தருவாயோ நீதியெனக் கேட்டு[illegible]ம் நொந்தாள்
அமிழாத அவள்மானப் பட[illegible]யெ மீட்க
அன்னையவள் சன்னதமிவ் வவனியினை அழிக்கும்!

- அனலையூர்ச் சேந்தன் -

## குறள்வெள்ளம்

அடுத்தவனால் உனக்குப் பாதிப்போ துன்பமோ ஏற்படும் போது உலகோரின் அனுதாபம் உன்பக்கம் சேருதலை அவனால் தடுக்க இயலாமற் போய்விடும். எதுவரை அந்த அனுதாபம் நிலைக்கும்? நீ பொறுமை காத்துப் பதிலடி கொடுக்காதவரை மட்டுமே அது நிலைக்கும்.

பழிக்குப் பழி பாணியில் நீ நடந்துவிட்டாள் - பொறுக்காமல் ஒறுத்துவிட்டால் - தவறை இருவரிடமும் கண்டுகொள்ளும் உலகம் இருவரையும் ஒதுக்கி வைத்துவிடும். இதில் முதல் தவறியவர்தான் பழிகாரன் என்றெல்லாம் எவரும் உனைப் பாராட்டமாட்டார்கள்.

உனது பொறுமை நிலைக்கும்வரை மதிப்பும் மரியாதையும் உயரத்தான் செய்யும். உனது அமைதியான சுபாவம் அடுத்தவர்களால் கணிக்கப்படும் உயர்ந்தோர் மனதில் உனது நினைவு பொன்போல் பொதிந்திருக்கும்.

*ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்*
*பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.* - 0155

- அம்பிகைபாகன்.

# பெயர் சொல்லி அழைக்கும் பேய்கள்

"நான் குமரியாய் இருந்த பொழுது..." இப்படித்தான் ஆச்சி தனது இளமைக்காலத்து பசுமையான நிகழ்வுகளை கதை வடிவில் சொல்ல ஆரம்பிப்பாள். அவளுக்குத் தன் இளமைக் காலத்தை மீட்டிப் பார்ப்பதில் நிறைய ஆர்வம் இருந்தது. அவள் கதை சொல்லும் போது வெட்கம், சந்தோஷம், வேதனை, வெறுப்பு, விரக்தி, சாந்தம் எனப் பல்வேறு உணர்ச்சிகள் அவள் முகத்தில் தோன்றும். இன்னும் சுருக்கமாகச் சொன்னால் அவள் முகத்தில் நவரசம் பிறந்து மறையும். அவள் சொல்லும் கதைகளில் உண்மை இருந்ததோ இல்லையோ சுவை இருந்தது; அதைவிட வீரம் இருந்தது; காதல் இருந்தது; பாசம் இருந்தது. ஆச்சிக்கு மட்டுமென்றில்லை. எவருக்கும் தம் இளமைக் காலத்தை நினைவு கூர்வதில் ஒரு சந்தோஷமிருக்கின்றது.

"ஆச்சி சரியான அறுவைக் கேஸ்" மாலதி அடிக்கடி சொல்லிக் கொள்வாள். அவளுக்கு ஆச்சி பொய்யைக் கலந்து தன் இளமைக் காலத்தை நினைவு கூர்வதாகத் தோன்றும். தவிரவும் ஆச்சியின் கதைகளை கேட்பதில் மாலதிக்கு விருப்பமில்லை என்பதுடன் ஆர்வமுமில்லை. ஆனால் மாதுளன் இதற்கு முற்றிலும் நேர்மாறானவன். ஆச்சியின் கதைகளை ஆர்வமாகக் கேட்பான். அம்மாவிற்கு ஆச்சியின் கதை கேட்க நேரமில்லை. அப்பா அதிகம் ஆச்சியுடன் கதைப்பதில்லை. இதனால் மாதுளன் மட்டுமே ஆச்சியின் கதைகளுக்கு ஒரேயொரு வாசகன். ஆச்சி சில கதைகளை பகுதி பகுதியாக நாளாந்தம் பிரித்துச் சொல்லியுமிருக்கிறாள். இந்நேரத்தில் மாதுளனுக்கு சென்னை வானொலியின் 'புதினப்பக்கங்கள்' நிகழ்ச்சி ஞாபகம் வரும்.

"படிக்கிற நேரத்தையும் மண்ணாக்கிக் கொண்டு ஆச்சியின்ர புளுகல்களைக் கேட்டுக்கொண்டிரு. சோதினை நேரம் விளங்கும்" அக்கா மாலதி மாதுளனுக்கு உபதேசிப்பாள்.

அவன் வேறுவிதமாகப் பதில் சொல்வான். "அக்கா! நீயும் ஆச்சியின்ர வயதுக்கு வரேக்க இப்படித்தான் கதைப்பாய்"

மாலதிக்கு சட்டென்று கோபம் பற்றிக் கொள்ளும்.

கோபம் மாறாமல் கேட்பாள்.

"எப்பிடி கதைப்பன்?"

"அவவைப் போல உன்ரை இளமைக்காலத்தை நினைவுபடுத்தி" அவனுடைய இந்தப் பதிலால் மாலதியின் கோபம் மேலும் அதிகரிக்கும்.

"தேவையில்லாமல் கதையாதை" மாலதியின் வார்த்தைகள் மாதுளனை மௌனியாக்கும்.

பாக்கை பக்குவமாகச் சீவி பாதி வெற்றிலையைக் கிழித்து சுண்ணாம்பு தடவி பாக்கு உரலில் போட்டு இடித்துப் பின்னர் அதைக் கையில் கொட்டி சிந்தாமல் சிதறாமல் ஆச்சி வாயில் போட்டுக்கொள்வதைப் பார்க்கும் போது 'மீண்டும் கோகிலா' திரைப்படத்தின் 'சின்னஞ் சிறு வயதில்' பாடல்காட்சி மாதுளனின் கண்முன் விரியும். அவனாக ஒருபோதும் ஆச்சியைக் கதை சொல்லும்படி வற்புறுத்தியதில்லை. ஆச்சி தானாகவே ஆரம்பிப்பாள். அவன் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருப்பான். அவன் கதை கேட்பதில் ஆர்வம் காட்டுவதால்தான் ஆச்சி சொல்வதில் ஆர்வமாய் இருக்கிறாளோ என்னவோ? சில நேரம் மாதுளனும் மாலதியைப் போல் இருந்திருந்தால் ஆச்சி கதை சொல்லவே மாட்டாளோ? யாருக்குத் தெரியும். மாதுளன் ஒருபோதும் மாலதிபோல் இருந்ததில்லையே.

"தேவதைகள் மெல்லிய வெள்ளை. பேய் பிசாசெல்லாம் கறுப்பு" ஆச்சி இவ்வாறு ஒருநாள் சொன்னாள்.

"எப்பிடியாச்சி உனக்கு இது தெரியும்?" மாதுளன் கேட்டான்.

"நான் தேவகணம். என்ர கண்ணுக்கு உதெல்லாம் தெரியும். அதோட மனிச கணத்திற்கும் தேவதை, பேய் பிசாசெல்லாம் தெரியும். மற்றக் கணங்களுக்கு தெரியாது" ஆச்சி விளக்கமளித்தாள்.

"ஆச்சி நீ உந்தப் பேய் பிசாசுகளை நேரில் கண்டிருக்கிறியோ?" மாதுளனின் விசாரணை தொடரும்.

"ஓ! எத்தினை நாள் கண்டிருக்கிறன். பகல் பன்னிரண்டு மணிக்கும் இரவு பன்னிரண்டு மணிக்கும் அதுகள் வெளிக்கிட்டு உலாவும்"

"ஆச்சி தேவதைக்கும் பேய், பிசாசுகளுக்கும் என்ன வித்தியாசம்?" மாதுளன் கேட்டான். அவனுக்கு அந்த வித்தியாசத்தை அறிந்து கொள்வதில் நிறைய ஆர்வம் இருந்தது.

ஆச்சி வித்தியாசத்தை விளக்கத் தொடங்கினாள். "தேவதையள் நல்லது செய்யும். பேய், பிசாசுகள் இரண்டும் கூடாத வேலையள்தான் செய்யும். உந்தப் பேய், பிசாசுகளிலை, கொத்தி எறிமாடன், சுடலை மாடன், காட்டேறி எல்லாம் பொல்லாததுகள். உதுகள் தான் இரவில் வந்து பெயர் சொல்லி ஆட்களைக் கூப்பிடும். மூண்டு தரம் பெயர் சொல்லிக் கூப்பிடும். மூண்டு தரத்துக்குள்ள அது பெயர் சொல்லிக் கூப்பிட்ட ஆள் குரல் கொடுத்தால் அந்தாளைக் கூட்டிக்கொண்டு போயிடும். அதுதான் சொல்லுறது இரவில ஆரேனும் கூப்பிட்டா மூண்டு தரம் கூப்பிட்டாப் போலதான் ஓமெண்ட வேணுமெண்டு. தம்பி இந்த விசியத்தில் நீயும் வலுகவனமாய் இருக்க வேணும்"

"இதெல்லாம் உனக்கு எப்பிடியணை தெரியும்?" இது மாதுளனின் அடுத்த சந்தேகமாகவிருந்தது.

அவனுடைய சந்தேகம் ஆச்சியைத் தொடர்ந்து கதை சொல்லத் தூண்டிற்று. ஆச்சி தொடர்ந்து கதை சொன்னாள்.

"என்னடா விசரன் மாதிரிக் கேள்வி கேக்கிறாய்? இதெல்லாம் என்ர சொந்த அனுபவங்கள். இதெல்லாம் என்ர வாழ்க்கையில நடந்த தடா தம்பி. சொன்னா நம்பமாட்டாய். ஒருநாள் இரவு நடுச்சாமம் பன்னிரண்டு மணி இருக்கும். ஆரோ படலையடியிலை வந்து நிண்டு 'லட்சுமி' எண்டு கூப்பிட்ட மாதிரிக் கிடந்தது. ஒரு குரல்தான் கேட்டுது. நான் உடனே 'ஓம் வாறன்' எண்டபடி படுக்கையில இருந்து எழும்பி ஓடினன். ஓடிப்போய் படலையை அவசரமாத் திறந்து வெளியில பார்த்தா ஒரு உருவம் கறுத்த மொட்டாக்குப் போட்டுக்கொண்டு நிக்குது. நான் உடனே 'ஆரது?' எண்டு கேட்டன். அந்த உருவம் கொஞ்ச நேரம் ஒண்டும் பேசாமல் நிண்டுது. பிறகு ஒரு கரகரப்பான குரலில் 'அது நான், ஒருக்கால் கோப்பாய்ச் சந்திக்கு போகவேணும். என்னோட வா' எண்டு சொல்லிப் போட்டு விறுவிறெண்டு முன்னால போச்சுது. நான் மறு பேச்சில்லாமல் அதுக்குப் பின்னால நடக்கத் தொடங்கினன். பால் போல நல்ல நிலவும் எறிச்சுக் கொண்டிருந்தது. அந்த உருவம் தொடர்ச்சியா நடந்துகொண்டேயிருந்தது. நானும் நடந்து கொண்டேயிருந்தன். கடைசில எனக்கு முன்னால நடந்துகொண்டிருந்த அந்த உருவம் மறைஞ்சிட்டுது. அந்த நேரத்தில எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல. அப்பதான் நான் நிண்ட இடத்தைச் சுத்திப்பாத்தன். அங்கங்கே சில வடலியலும், பூவரசுகளும் ஆடாமல் அசையாமல் நிண்டுது. வடிவாய் உற்றுப்பார்த்தன். அதுக்குப் பிறகுதான் விளங்கிச்சுது நான் நிண்ட இடம் செம்மணிச் சுடலையெண்டு"

மாதுளனின் கேள்வி அந்தப் பகல் வேளையிலும் பயங்கலந்து வெளிப்பட்டது. "பிறகு என்ன நடந்தது ஆச்சி?"

ஆச்சி தொடர்ந்தாள்.

"நல்ல காலம் ஒண்டும் நடக்கேல்ல. நான் வீட்டால வெளிக்கிட்டு வந்ததைப் பார்த்துப்போட்டு அப்பு எனக்குப் பின்னாலையே வந்திருக்கிறார். அவர் கையில 'வெள்ளிப் பூண் போட்ட தன்ர பிரம்பையும் கொண்டு வந்தவர். அவர் அந்தப் பிரம்பால ஒரு அடி எனக்கு முதுகில அடிச்சுப்போட்டு 'கெதியா நடவடி வீட்டை' எண்டு உறுக்கினார். நான் ஒரு கதையுமில்லாமல் அவருக்குப் பின்னால வீட்டை வந்திட்டன். அதுக்குப் பிறகுதான் தெரியும் அப்பு வைச்சிருக்கிற அந்தப் பிரம்பு பேய் விரட்டுற பிரம்பெண்டு"

ஆச்சி சொன்னதைக் கேட்ட மாதுளன் சிறிது நேரம் மௌனமாய் இருந்தான். ஆச்சி சொன்ன கதை உண்மையா? தற்போதும் இவ்வாறு நடக்குமா? என்ற கேள்விகளும் கூடவே எழுந்தன. அவனுக்கு விடை கிடைக்கவில்லை. தவிரவும் இந்த விடயத்தில் எந்தவிதத் தெளிவும் பிறக்கவில்லை. இதை இத்துடன் மறந்துவிடுவதெனத் தீர்மானித்தான். "பேய், பிசாசுகள் கெட்ட குணமுள்ளவை. தீங்கு செய்யக் கூடியவை. தேவதைகள் எப்போதும் நல்லதையே நினைக்கும். நல்லதையே செய்யும்" ஆச்சி சொன்னது மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது. மாதுளனுக்குத் தன்னை நினைத்துப் பார்த்த போது வெட்கமாக இருந்தது. அவன் தனக்குத்தானே கூறிகொண்டான் 'சே... அறிவியல் எவ்வளவு வளர்ந்திருக்கு. நான் பிசாசுக்கும் பேய்க்கும் பயந்துகொண்டிருக்கிறன்'



"மாதுளன் சந்தைக்கொருக்கால் போய் வாறீயோ?" அம்மா சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள்.

"கொஞ்சம் பொறுங்கோ அம்மா வாறன்" எனக் குரல்கொடுத்தபடியே தான் வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகையை மடித்து மேசையில் வைத்தபடியே மாதுளன் எழுந்தான். அப்போது எங்கோ ஒரு மூலையில் பல்லி சொல்லியது. அது ஆச்சியின் காதில் தெளிவாகக் கேட்டிருக்க வேண்டும்.

"தம்பி பல்லி சொல்லுது. இப்ப வெளிக்கிடாதை" ஆச்சியின் எச்சரிக்கை அம்மா என்பவளைப் பாதித்தது. அவளுக்கு ஆச்சி மீது எரிச்சலும் கோபமும் ஒருங்கே எழுந்தன. அது அவள் வார்த்தைகளில் வெளிப்பட்டது.

"இவவுக்கு மட்டும் பல்லி சொல்லுறதும் பாம்பு கீச்சிடுறதும் வலு தெளிவாகக் கேட்டுது. மனிசர் ஒரு வேலைக்கு வெளிக்கிடேக்கை. எல்லாருக்கும் [illegible] புடுங்கிக் கொண்டிருப்பா. காது கேட்காது எண்டு உவ சொல்லுறதெல்லாம் வெறும் பம்மாத்து" ஆச்சிக்கு இது கேட்டிருக்காது. ஏனென்றால் அம்மா கதைக்கும் போதெல்லாம் அவள் செவிடாகிவிடுகின்றாள். உலகத்திலே செவிடாக இருப்பதென்பது ஒரு குறைபாடாகத் தெரிந்தாலும் எத்தனையோ பிரச்சினைகள் வராமல் தடுப்பதற்கு அது ஒரு நல்ல மருந்து. செவிடாக இருப்பதென்றால் பிறவியிலே செவிடாக இருப்பதென்றில்லை. செவிடாக பாவனைசெய்து கொள்ளவேண்டும். என்பதும் அடங்கும். ஆச்சியும் ஆரம்பத்தில் செவிடாக இருக்கவில்லை. அப்போதெல்லாம் மாதுளனின் தந்தைக்கு அம்மா தரப்பில் இருந்தும், ஆச்சி தரப்பிலிருந்தும் முறைப்பாடுகள் வரும். இந்த முறைப்பாடுகளை விளங்கி தீர்ப்பு சொல்லவே அவருக்கு நேரம் போதாமலிருக்கும். ஆனால் ஆச்சி செவிடாக மாறி விட்டபின் அவருக்கு எந்தமுறைப்பாடும் வருவதில்லை.

ஆச்சி சொன்னது மாதுளனுக்கு கேட்டது. அதைவிடத் தெளிவாக அம்மா சொன்னது அவனுக்கு கேட்டது. 'ஆச்சி எனக்கு பேய்க்கதை சொல்லி என்னைப் பேயனாக்கப் பாக்கிறா. உவவின்ரை சொல்லுக்கு இனி செவிசாய்க்கக் கூடாது.' அவன் தனக்குள்ளே ஒரு தீர்மானம் எடுத்துக் கொண்டான்.

"ஒரு கிலோ உருளைக்கிழங்கும், ஒரு ஈரப்பிலாக்காயும் வாங்கிக் கொண்டுவா. மோகனனைச் சந்தைக்கனுப்பலாமெண்டு பார்த்தால் குரங்கு எங்கையோ கிரிக்கற் மச் பார்க்க போயிடுத்து" என்றவாறு கூடையையும் காசையும் ஒருங்கே நீட்டிய அம்மாவிடமிருந்து அவற்றை வாங்கிக் கொண்டு சந்தைக்குப் புறப்பட்டான் மாதுளன். அவன் புறப்பட்டுப் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த ஆச்சி மிக மெல்லிய குரலில் தனக்குத்தானே கூறிக் கொண்டாள். "என்ர சொல்லுக்கு மதிப்புக் குடுக்கிறதுக்கு ஒருத்தருமில்லை."

ஆச்சி சொன்ன பேய்க்கதை மாதுளனை நிறையவே பாதித்திருந்தது. அவனால் அதைச் சுலபமாக மறக்கமுடியவில்லை. மறக்கமுடியாததெதுவும் மனதைப் பாதித்ததாகவே இருக்கும். அதனால்தான் அவனால் அந்தக் கதையைச் சுலபமாக மறக்கமுடியவில்லை. அவனது கால்கள் சந்தையை நோக்கி போன போதும் மனம் மட்டும் அந்தக் கதையை விட்டு நகராமலேயே இருந்தது.

'நான் இதற்கு முக்கியத்துவமளிக்கக் கூடாது. நான் சிந்திக்கத் தெரிந்தவன்; பகுத்தறிவாளன்; அறிவு ஜீவி. எதிர்காலத்தில் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகப் போகிறவன். அஞ்ஞானத்திற்கெல்லாம் மதிப்பளிக்கக் கூடாது' இவ்வாறு அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

சந்தைக்குள் நுழைந்த மாதவனின் கண்கள் ஈரப்பலாக்காய் விற்பவனைத் தேடின. அவனைக் காணவில்லை. ஆனால் ஈரப்பலாக்காய்க் குவியல் இருந்தது. அவனுக்குப் பதில் அந்தக் குவியலின் முன்னாள் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அனேகமாக அவள் அந்த ஈரப்பலாக்காய் விற்பவனின் மனைவியாக இருக்க வேண்டுமென அவன் மனம் எண்ணியது. 'அவள் யாராய் இருந்தால் உனக்கென்ன? உனக்குத் தேவை ஈரப்பலாக்காய். நீ அதை வாங்கிக்கொள்' மனத்தில் இவ்விதமாக ஓர் எதிர்ப்புணர்வும் எழுந்து மறைந்தது.

மாதுளன் ஈரப்பாலாக்காய் குவியலுக்கு முன்னாள் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணை அணுகினான். அவள் இவன் வந்ததைக் கவனிக்கவேயில்லை. வேறு ஒரு திசையில் தன் பார்வையை நிலைக்க விட்டிருந்தாள். அமைதி என்பது அங்கே கொஞ்சமும் இல்லை. அதைத்தவிர சுவாசிப்பதற்கே மூக்கு கூச்சப்படும் நாற்றமடித்துக் கொண்டிருந்தது. மாதுளனுக்கு அவளை என்ன பெயர் சொல்லி அழைப்பதென்று விளங்கவில்லை. 'அம்மா!' என்று அழைக்க யோசித்தான். ஆனால் அவள் இளமையாக இருந்தாள். 'அக்கா!' என அழைக்கலாமென்றால் கொஞ்சம் முதுமையாகத் தெரிந்தாள். இறுதியில் இதில் எந்தப் பெயரையும் தெரிவு செய்யாமல் "ஈரப்பலாக்காய் என்ன விலை?" சற்று உயர்ந்த குரலில் கேட்டான் மாதுளன். அவன் குரல்தான் அவளை நேர்த்திசையில் பார்க்கச் செய்தது.

"சின்னக்காய் இருபது ரூவா. பெரியக்காய் முப்பது ரூவா" என்றாள் மாதுளனுக்கு தெளிவாகக் கேட்கக் கூடியதான குரலில். 'இவள் குரல் இனிமையில்லை' என்றது மாதுளன் மனம். அவன் குனிந்து ஒரு ஈரப்பலாக்காயை எடுத்தான். ஏனோ மனம் பெரிய ஈரப்பலாக்காயைத் தான் விரும்பியது. அவன் எடுத்த அந்தக் காயைப் பார்வையால் அளந்தவள் "முப்பது ரூவா தாங்கோ" என்று சொல்லி வாய் மூடுவதற்குள் அந்தச் சந்தையே அதிரும் வண்ணம் 'டமார்' என்ற சத்தத்துடன் மிக அருகில் "ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கிகள் 'பட..... பட.....'வெனக் குண்டுகளைத் துப்பின. சந்தைக்குள் இருந்தவர்களும் நின்றவர்களும் சிதறி ஓட ஆரம்பித்தனர். மாதுளனுக்கு ஒரு கணம் எதுவும் செய்யத் தோன்றவில்லை. நெஞ்சில் பய அமிலம் சுரக்கும்போது அது ஒரு கண நேரத்திற்கு அல்லது அதற்கு மேல் சில கண நேரத்திற்கு மூளையை விறைப்படையச் செய்து உடல் உறுப்புக்களை இயங்கவிடாமல் செய்துவிடுமென முன்னர் எப்போதோ தான் வாசித்ததை இப்போது அனுபவ ரீதியாக மாதுளன் தன்னிடத்தில் உணர்ந்தான். அடுத்த கணம் கையிலிருந்த பையைத் தூர வீசிவிட்டு சந்தைக்கு வெளியே வேகமாக ஓட ஆரம்பித்தான். அவன் ஓட்டத்தின் வேகம் அதிகமாகவும் நிதானமில்லாமலும் இருந்தது. நிதானமில்லாத ஓட்டம் ஆபத்து நிறைந்தது. கண்ணைக் கட்டிக் கொண்டு ஓடுவதைப் போன்றது. மாதுளனின் ஓட்டம் எதிரேயிருந்த எதையும் கவனிக்க இடம்கொடுக்கவில்லை. அதனால் எதிரேயிருந்த முட்கம்பி வேலியுடன் மோதி விழுந்தான். நெற்றி, கை, கால், சாரம் எனப் பலவற்றையும் முட்கம்பிகள் பதம் பார்த்தன. அத்தனையும் கடும் காயங்கள், இரத்தக்கசிவுடன் கூடிய காயங்கள். ஆனால் பயத்தில் வலி தெரியவில்லை. அவன் சுதாகரித்து எழுந்து மீண்டும் நிமிடத்திற்கு இதயம் நூறு தடவைகள் துடிக்க ஓடினான்.

மாதுளனுக்கு வீடு வந்து சேர்ந்த பின்னர்தான் காயங்கள் வலித்தன. சாரம் 'ட' வடிவில் பெரிதாகக் கிழிந்திருப்பது தெரிந்தது. அடையாள அட்டை எங்கோ தவறி விழுந்திருப்பதும் தெரிந்தது. அவனுக்கு மீண்டும் நெஞ்சில் பய அமிலம் சுரந்தது. மூளை விறைத்தது. அம்மா ஓடி வந்தாள் "ஐயோ! என்ர ராசா என்னப்பு நடந்தது?" பதறியபடியே கேட்டாள்.

"சந்தி... க்... காம்பு... க்கு... கிரனைட்.... எறிஞ்... சிரு... க்கிறாங்கள்" மாதுளன் பயத்துடன் பதற்றமும் கலந்திருந்ததால் வார்த்தைகளை முறித்து முறித்து பதிலளித்தான்.

அ... ம்.... மா.... அடையாள அட்டையும் எங்கேயோ.. விழுந்து... போச்சு..." அவன் இவ்விதம் கூறியதும்,

"ஐயோ! என்ர கடவுளே..." எனக் கதறினாள் அம்மா. அன்று முழுவதும் வீடு நிம்மதியிழந்திருந்தது.

"நாளைக்கு பொலீசில் போய் என்றி போடுவம்" என்று சொன்னார் அப்பா. மாதுளன் ஒரு தற்காலிக நிம்மதியோடு உறங்கப்போனான்.


கடிகாரம் அந்த இரவில் பன்னிரண்டு தடவைகள் அடித்து ஓய்ந்தது. அடுத்த கணம் நாய்கள் மோசமாகக் குரைக்கத் தொடங்கின. மாதுளன் திடீரென தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான். வெளியே நல்ல நிலவு. அதுவும் பால்போல நிலவு. படலையடியில் பூவரசம் சருகுகள் சரசரத்தன. அதனையடுத்து படலைக்கு வெளியே நின்று "மாதுலன்... மாதுலன்..." என யாரோ இரண்டு தடவைகள் கூப்பிட்டது கேட்டது. மாதுளன் மந்திரத்தால் கட்டுண்டவன் போல் எழுந்து வெளியே வந்து படலையடியை நோக்கி விரைந்தான். படலைக்கு வெளியே மூன்று கரிய உருவங்கள் நின்று கொண்டிருந்தன. அவை வெளியே வரும்படி சைகை செய்தன. மாதுளன் படலையைத் திறந்து வெளியே வந்தான்.

**- சித்திரா -**

அந்த உருவங்கள் சிறிது நேரம் அவனை உற்றுப்பார்த்தன. பின்னர் தம்முடன் வரும்படி சைகை செய்தன. அந்தச் சைகைக்குக் கட்டுண்டவனாக அந்த உருவங்களோடு மாதுளன் நடந்தான். அப்போது 'தேவதைகள் நல்லவை. பேய், பிசாசுகள் கெட்டவை' என்று ஆச்சி சொன்னது மாதுளனுக்கு நினைவுக்கு வந்தது. கூடவே ஆச்சியின் அப்பு வைத்திருந்த வெள்ளிப்பிரம்பு ஞாபகத்திற்கு வந்தது. அவன் நினைவு முழுவதும் இப்போது அந்த வெள்ளிப்பூண் பிரம்பே நிறைந்திருந்தது. அவன் தனக்குத்தானே கூறிக்கொண்டான் 'ஆச்சிக்குப் பிசாசுகள் பிடிக்க அவவைக் கூட்டிக் கொண்டு போன நேரம் அவவின்ர தகப்பன் வெள்ளிப்பூண் பிரம்போட பின்தொடர்ந்து போய் அவவை மீட்டு வந்த மாதிரி என்னை மீட்டுக் கொண்டு போக அப்பாவும் வெள்ளிப்பிரம்போட வராமல் விடார்' இவ்வாறு கூறியது மட்டுமன்றி நம்பிக்கையோடு தனக்குப் பின்னே வெள்ளிப்பூண் பிரம்போடு அப்பா வருகிறாரா? எனத் திரும்பிப் பார்த்துப் பார்த்து மாதுளன் அந்த உருவங்களின் பின்னே நடந்துகொண்டிருந்தான். ஆனால் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் யாரும் தென்படவில்லை.

(யாவும் கற்பனை)


# பீஜித்தீவுகளில் வசிக்கும் சுதேசிக



நாட்டியக்காரர்கள் தமது தலைவனின் கூரை வீட்டிலிருந்து கிராம மைதானத்துக்குப் புறப்படுகின்றார்கள்.



பசுபிக் தீவுகள் கிளிகளுக்குப் புகழ் பெற்றவை. அவற்றில் ஒன்று படத்தில், ஈரப்பலா மரத்தில்.



வற்றுக்கடலின் போது ஒரு தீவு வாசி ஈட்டியுடன் மீன் குத்த நிற்கின்றார். இவர் நிற்பது உயிருள்ள முருகையுருப் பிராணிகளைக் கொண்ட முருகைக் கற்களின் மேல்.

பசுபிக் மகாசமுத்திரத்தில் பரவலாகப் பல தீவுக்கூட்டங்களுண்டு. இத்தீவிக்கூட்டங்களில் வாழும் மக்கள் பொதுவாக போலினேசியர்கள் (Polynasians) என்றும், தீவுக்கூட்டங்கள் போலினேசியா (POLYNASIA) என்றும் அழைக்கப்படும். பீஜித் தீவுக்கூட்டம், ராஹிற்றித் தீவுக்கூட்டம், ஹவாய்த் தீவுக்கூட்டம், கிறிஸ்மஸ் தீவுக்கூட்டம் போன்றவையெல்லாம் இதில் அடங்கும். இத்தீவுக்கூட்டங்களுக்குரிய சுதேசிகள் எங்கிருந்து இங்கெல்லாம் குடியேறினார்கள் என்பதற்குப் பலர் பல விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். இந்த விளக்கங்களில் ஆய்வாளர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் சில சமயங்களில் ஆட்சி செலுத்துவதுண்டு. (இந்திய இதிகாசங்களைப் போன்று); உண்மைநிலை சில சமயங்களில் மறைக்கப்படுவதுமுண்டு. ஆயினும் இம்மக்கள் ஆசியாவிலிருந்து, சிறப்பாக இந்தியாவிலிருந்து



தீக்கிடங்கில் மரக்குற்றிகள் அடுக்கப்பட்டு தீ மூட்டப்படுகின்றன. 24 மணிநேரம் இவை எரிய விடப்படும்.

குடியேறியவர்கள் என்ற கருத்து இப்பொழுது பெரும்பாலோருக்கு ஏற்புடையதாக உள்ளது. ஆயினும் கிறிஸ்மஸ் தீவுகளுக்குரியவர்கள் போலினேசியர்கள் அல்லர்; மாயர்களின் வழித்தோன்றல்கள்; தென்னமெரிக்காவில் பேருவிலிருந்து குடியேறியவர்கள் என்ற ஒரு விளக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் மாயர்கள் இந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்களின் வழித்தோன்றல்கள் என்றவொரு விளக்கம் அணமையில் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆதிகாலத்தில் முதன்முதலாகத் திரைகடலோடியவர்கள் தமிழர்கள் என்ற கருத்து உரம்பெற்று வருகின்றது. இந்தியாவிலுள்ள ஆதிவாசிகள், வேடர்கள், ஆஸ்திரேலியப் பிர




ஆய்வாளர் ஒருவர் நெடிய உணர் கொம்புள்ள சிவப்பு இறால்களை ஆராய்கின்றார். இதற்கு இவர் சிறப்பு அனுமதி பெற வேண்டியிருந்தது. தற்செயலாக இறால் இறந்திருந்தால் இவரின் உயிரும் ஊசலாடியிருக்கும்.

தேசத்திற்குரிய மயோறிகள், ஒஸ்றலோயிட்டு (AUSTRALOID) கூட்டத்திற்குச் சேர்ந்தவர்கள் என்றகருத்து நிலவியது. நாகர்களும் இதில் அடங்குவார்கள். இவர்களைத் திராவிடக் குடும்பத்திற்குச் சேர்ந்தவர்கள் என்றும் கொள்ளலாம். இவர்களின் நடையுடை பாவ



பாறையின் மேல் அமர்ந்து கொண்டு பெண்கள் பாடிக் கடலாமைகளை அழைக்கின்றார்கள்.



கிராம மைதானத்தில், ஈட்டிகளையும் ஓலையினாற் செய்யப்பட்ட கேடயங்களையும் நாட்டியமாடுகின்றனர். பின்னணியிசையைப் பெண்கள் இசைக்க தாளம் மர மேளத்தினால்

னைகள், பழக்கவழக்கங்கள், கலாசாரம் போன்றவற்றில் ஒற்றுமைகள் உண்டு. இன்று "நாகரிகம்" என்ற பெயரில் மேல் நாட்டவரின் தாக்கங்களினால், இவை பெரிதும் மறைந்து விட்டன; ஆயினும் சமயச்சடங்குகள், கலாசார நிகழ்ச்சிகளின்போது இது வெளிப்படுவதுண்டு. கலாசார ஒற்றுமை மாத்திரமல்ல, தமிழ்மொழிக்கும் மயோறிகளின் மொழி, ஜப்பானிய மொழிக்கும் ஒற்றுமைகள் இருப்பதாகத் தெரிகின்றது. (போலினேசிய மொழிகளெல்லாம் மயோரிய மொழியின் திரிபுகளே.)

## குடிபெயர்வு

சரித்திரகாலத்திற்கு முற்பட்ட காலத்தில் ஆரியர்களின் வருகைக்கு பலகாலம் முன்பே - தென்னகத்திலிருந்து பலதிசைகளிலும் கடல் வழிக்குடிபெயர்வு ஏற்பட்டதாகத் தெரிகின்றது. கிழக்கு நோக்கிப் பரவியவர்கள், ஆஸ்திரேலியாவை அடைந்து அங்கிருந்து அண்டிய தீவுகளுக்கு மாத்திரமல்லாமல், தொடர்ந்தும் பரவியிருக்கிறார்கள். ஏற்றநீரோட்டங்கள் இவர்களின் பரவலுக்கு உதவியிருக்கின்றன. நில வாழ்க்கைக்குரிய ஓணான்கள், பாம்புகள், ஆமைகள் போன்றவை மரக்குற்றியின் உதவியுடன் ஆசியாவிலிருந்தும் ஆஸ்திரேலியப் பிராந்தியத்திலிருந்தும் இத்தீவுகளுக்கெல்லாம் பரவியிருக்கின்றன. (இயற்கையன்னை மரக்குற்றிகளின் மூலம் இவற்றைப் பரப்பியுள்ளாள்). இது இப்படியானால் ஆறறிவு படைத்த மனிதன் கட்டுமரங்கள் மூலமும், குடைந்தெடுத்த ஓடங்கள் (DUG OUT CANOES) மூலமும் பரவியிருக்க முடியாதா?

## மழைவீழ்ச்சி

பீஜித் தீவிக் கூட்டங்களின் (FIJI ISLA-NDS) மக்களையும் அவர்களின் வாழ்க்கை முறையையும் இப்பொழுது கவனிப்போம். காலம் மாறிவிட்டது; ஆயினும் பழைய பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் இன்றும் சில சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டப்படும்.


பீஜித் தீவுக்கூட்டத்தில் மழைபெய்வதில்லை; பொழியும். உதாரணமாக சுவாவில் ஆண்டொன்றுக்குப் பெய்யும் மழையின் அளவு பத்து அடிகள்; சில ஆண்டுகளில் பத்தொன்பது அடிகள் மழைவீழ்ச்சி நிகழ்வதுண்டு. பூமத்தியரேகையை அண்டியிருப்பதனால் திடீரென மழை பெய்யும்; பின் வெய்யில் எறிக்கும்; தொடர்ந்து மழை பெய்யும். எப்பொழுது மழைபெய்யும், எப்பொழுது வெய்யில் எறிக்கும் என்று சொல்ல முடியாது, சூரியோதயமும், சூரிய அஸ்தமனமும் மிகஅழகாகவிருக்கும். ஆயினும், மழைகாலம் என்றும் ஒன்றுண்டு;



பெண்களின் பாடலில் மயங்கிய ஒரு ரசிகன் கடலாழத்திலிருந்து மேல் நோக்கி வருவதைக் கவனியுங்கள் (மயக்கத்தைத் தருவது மங்கையரா அல்லது அவர்களின் பாடலா?).

அதாவது கார்த்திகையிலிருந்து சித் கனத்த மழை பெய்யும்.

இத்தீவுக்கூட்டத்தில் வேறுமொரு முண்டு. காற்றுப்பக்கம் (WINDWA காற்றெதிர்ப்பக்கம் (WAY WARD S வேறுபாடு உண்டு. காற்றுப் பக்கத்தி மழைபெய்ய, மழை நிழற்பக்கத்தி



கடைசி மனித மாமிச உண்ணி. இவரின் வயது 96 (நீண்ட நா கைக்கு உணவு வகைதான் கார இவரின் பெயர் சனெய்லா. இவரி கரத்திலுள்ளது நீண்ட பன்றி விருந் பயன்படுத்தப்படும் மர முள்ளுச் இடது கையிலிருப்பது ஈட்டி.

SHADOW) மழை பெய்வதில்லை வேறு பிரிக்கும் இக்கோடு சில இ அடிமட்டத்தின் விளிம்புபோல மிக துல்லியமாகவுமிருக்கும்

## தீவுகள், இடங்களின் பெ

பீஜித் தீவுக்கூட்டத்தை அத் விற்றி (VITI) என்றுதான் அ சில தீவுகள், இடங்களின் பெயர் யாக இங்கு தரப்பட்டுள்ளன; சில ஏதோ பரிச்சயமானவை போலத் தெ யகாவா, வாயா, மலோலோ, கொறவைவை, வட்டுக்கைவா, ந தோக்கா, நம்பைனதினி, சுவா, வாஹாயா, மாகொங்கை, நம் கொறோற்றசேறி, லம்போகா, தி றம்பி, தவோனி, உலுஇன்கலோ, பலரவு, மாங்கோ, தித்தியா, நாயே கந்தாவு, நமு வானா, தவுக்கி, ந



சமபந்தி போசனம். அலங்கா களைக் கவனிக்கவும். சகலரினது டலுக்கு ஏற்ப, சேம்புக்கிழங்கு உ கொண்ட முதற் சிரட்டையைக் கொ விறைப்புடன் நடந்து செல்கின்றார்.


# ...தேசிகள் யாரின் வம்சாவழியினர்?



...ய்யப்பட்ட கேடயங்களையும் அசைத்து ...க்க தாளம் மர மேளத்தினால் தரப்படும்.

...து கார்த்திகையிலிருந்து சித்திரைவரை ... மழை பெய்யும்.

...தீவுக்கூட்டத்தில் வேறுமொரு விசித்திர ... காற்றுப்பக்கம் (WINDWARD SIDE), ...திர்ப்பக்கம் (WAY WARD SIDE) என்ற ...டு உண்டு. காற்றுப் பக்கத்தில் கனத்த ...பய்ய, மழை நிழற்பக்கத்தில் (RAIN



...டசி மனித மாமிச உண்ணி. 1958இல் ...் வயது 96 (நீண்ட நாள் வாழ்க் ...ு உணவு வகைதான் காரணமோ?). ... பெயர் சனெய்லா. இவரின் வலது ...லுள்ளது நீண்ட பன்றி விருந்தின் போது ...டுத்தப்படும் மர முள்ளுக்கரண்டி. ...கையிலிருப்பது ஈட்டி.

...OW) மழை பெய்வதில்லை. இங்கனம் ...பிரிக்கும் இக்கோடு சில இடங்களில் ...த்தின் விளிம்புபோல மிகநேராகவும் ...மாகவுமிருக்கும்

### ...கள், இடங்களின் பெயர்கள்

...த் தீவுக்கூட்டத்தை அத்தீவுமக்கள் ...(VITI) என்றுதான் அழைப்பார்கள். ...வுகள், இடங்களின் பெயர் எழுந்தபடி ...ங்கு தரப்பட்டுள்ளன; சில பெயர்கள் ...ரிச்சயமானவை போலத் தென்படலாம்:- ..., வாயா, மலோலோ, வைலேக்கா, ...வவை, வட்டுக்கைவா, நந்தி, சிங்க ...ா, நம்பைனதினி, சுவா, நெளசோறி, ...யா, மாகொங்கை, நம்பெனவாலு, ...ற்றசேறி, லம்போகா, திகொம்பியா, ...நவோனி, உலுஇன்கலோ, வனு அம் ...மாங்கோ, தித்தியா, நாயோ, கம்பாரு, ..., நமு வானா, தவுக்கி, நம்புக்லெவு

(நம்புக்மலை) பெயர்கள் மேலோட்டமாகத் தரப்பட்டுள்ளன. உங்கள் பொறுமையைச் சோதித்தாலும், ஆவலைத் தூண்டினால் அதுவரவேற்கத் தக்கதொன்றாகும்.

### கைவினையில் வல்லவர்கள்

SUPERLATIVE CARFTMEN கைவினைப் பொருட்கள் செய்வதில் பீஜியர்கள் கைதேர்ந்தவர்கள். ஓடங்கள், வள்ளங்கள், தோணிகள் செய்வது மரச் சிற்பங்கள் செய்வது, பாய் இழைத்தல், மட்பாண்டங்கள் செய்வது போன்றவற்றில் திறமைசாலிகள்.



முதற் பன்னிரண்டு பேரும் தனிவரிசையில் சென்றபின், ஏனையோர் இலைகுழைகளைப் பரப்பி தீமிதித்தலில் ஈடுபடுகின்றனர். களத்திலிருந்து புறப்படும் புகைமண்டலத்தைக் கவனியுங்கள்.

### மனிதமாமிசம் புசித்தல் (CANIBALS)

பீஜித் தீவுக்கூட்டத்திற்குரிய சில தீவுகளில் வசித்தவர்கள் மனித மாமிசத்தையுண்ணுமியல்புடையவர்கள் என்ற நம்பிக்கை பல காலமாக நிலவிவந்தது. மாலுமிகள் மற்றும் யாத்திரீகர்கள்(TRAVELLERS) வாயிலாகவே இத்தகைய கதைகள் பரவின. இவற்றில் ஓரளவு உண்மையுண்டு; பல கட்டுக்கதைகளாகும். பீஜித்தீவைப் பொறுத்தவரை இவ்வழக்கம் 1890களில் நிறுத்தப்பட்டது. 1958இல் கடைசியாக உயிருடனிருந்த மனிதஉண்ணி (CANNIBAC)யின் வயது 96. பெயர் சனெய்லா(SANAILA). ஐரோப்பியர்களின் தொடர்பு ஏற்படுவதற்கு முன்னரே உணவு கொள்வதற்கு முள்ளுக்கரண்டியைப் பயன்படுத்தியவர்கள் மனித மாமிசம் உண்ணும் பீஜியர்கள் மாத்திரமே. இவர்கள் மனதமாமிசத்தைப் புசிப்பதற்கு மாத்திரமே மரத்திலானான ஒருவகை முள்ளுக்கரண்டியைப் பயன்படுத்தினார்கள். மனித மாமிசத்தைக் கையினால் உண்டால் தமக்குப் பிணியேற்படும் என்று அவர்கள் கருதினார்கள். போராட்டங்களின் போது கைப்பற்றிய கைதிகளையே அவர்கள் உணவாகக் கொண்டார்கள். இதையொரு சமயச்சடங்காகவே அவர்கள் கருதினார்கள். கைப்பற்றியவர்களை அவர்கள் "நெடிய பன்றி"(LONG PIG) என்றே அழைத்தார்கள். கைப்பற்றிய வெள்ளையர்களை "நெடிய வெள்ளைப்பன்றி" என்று நினைத்திருப்பார்கள், "நெடிய வெள்ளைப் பன்றி" சுவையாக இருந்திருக்குமோ தெரியாது!

### மதுவருந்தும் வைபோகம்.

ஏனைய பசுபிக்தீவுவாசிகளைப் போல பீஜியர்களும் கவா(KAVA) என்ற பானத்தை அருந்துவதில் மிகுந்தவிருப்புடையவர்கள். ஓர் இன மிளகின்(PIPER METHYSTICUM) வேர் அரைக்கப்பட்டு நீருடன் கலந்து மேற்படிபானம் தாயாரிக்கப்படும். இது மதுசாரம் அல்ல; வெறியைத்தராது; ஆயினும் நாக்கிலும் வாயிலும் ஒருவித விறைப்புத்தன்மையை ஏற்படுத்தும். தொடர்ந்து பருகினால் இதுகால்களில் விறைப்புத்தன்மையை(Paralysis) ஏற்படுத்தும். ஆயினும் வெப்பம் மிகுந்த இப்பிரதேசத்தில் இதையொரு களைப்பாற்றும் பானமாகக் கொள்ளலாம்.

## சூகன்

பீஜியர்களின் சமூகவாழ்கையில் கவா பருகுவது மூலாதாரமான நிகழ்வாகும். விருந்து வைபோகங்களைப் போல, கவா பருகும் வைபோகங்களும் அடிக்கடி ஒழுங்கு செய்யப்படும். விருந்தாளிகள் அழைத்தவரின் வீட்டுக்கு வருவார்கள். பாதஅணிகளை வெளியே விட்டு, உட்சென்று வட்டமாகத் தரை யிலமர்ந்து பாடுவார்கள். கவா தயாரிப்பதற்கென்று ஒருவர் சிறப்பாக அமர்த்தப்பட்டிருப்பார். இவர் நடுநாயகமாக அமர்ந்திருப்பார். இவரிடம் அரைத்த மிளகுத்தாவர வேரும் நீரும் தரப்படும். இவர் அரைத்தவேருடன் அளவாக நீர்கலந்து, நன்றாகப்பிசைந்து, துளாவி, பின் தென்னந்தும்புக் கற்றையினால் வேர்த் தும்புகளை வடித்தெடுப்பார். இங்ஙனம் சில தடவைகள் வடித்தபின் பானம் தயார் நிலையிருக்கும். சிரட்டையில் சிறிதளவு எடுத்துச் சுவைத்தபின், சகலருக்கும் சிரட்டைகளில் பானம் வழங்கப்படும். (கள்ளும், சிரட்டையும், பன்னாடை வடியும் சிலரின் ஞாபகத்திற்கு வரலாம்.)

விருந்து வைபோகங்களும் நிகழ்வதுண்டு. சேம்புக்கிழங்குமாவிலிருந்து தயாரிக்கப்படும் பதார்த்தங்களே சிரட்டைகளில் வழங்கப்படும். விருந்தாளிகள் வட்டமாகத் தரையிலிருந்து விருந்துண்பார்கள். பாடுவது, ஆடுவது போன்ற நிகழ்வுகளும் நடக்கும். பாடுவதிலும் ஆடுவதிலும் இவர்கள் மிகுந்த நாட்டமுடையவர்கள்.



சங்கொலி மூலம் மீனவர்களுக்கு செய்திகள் தெரிவிக்கப்படும். பெண்களே சங்கொலி எழுப்புவார்கள். திறைற்றன் (TRITON SHELL) ஓடு சங்காகப் பயன்படுத்தப்படும். பெண்ணின் முடி அலங்காரத்துக்கு செவ்வரத்தம் பூ உதவும் (முடியும் அலங்காரமானதுதான்!). தோளில் மஞ்சள் அலரிக் கிளைகள் தொங்குகின்றன. இதுவும் அலங்காரத்துக்கே.

### தீக்குளித்தல்(FIRE WALRING)

பீஜித்தீவுகளில் தீக்குளித்தலும் ஒரு பாரம்பரிய சமயச்சடங்காகும். தற்பொழுது ஒரு தீவில் மாத்திரமே இது நிகழ்த்தப்படுகின்றது. ஒரே வம்சாவழியினரே இதில் ஈடுபடுகின்றார்கள். இவர்கள் மதன்காளி(MATHANGGALI)கள் எனவழைக்கப்படுகின்றார்கள்.

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

தீக்குளிப்பதற்கு முன் ஒரு பாரிய கிடங்கு வெட்டப்படும். சுமார் 15 அடி அகலம், 5 அடி ஆழம். இதை எரிமலைக் கற்களைக் கொண்டு நிரப்புவார்கள். இவற்றின்மேல் குற்றிகளை அடுக்கி தீ மூட்டுவார்கள்; 24 மணி நேரம் எரிய விடுவார்கள். குற்றிகள் எல்லாம் எரிந்து நீறுபூத்த தணல்களால் நிரப்பியிருக்கும். இப்பொழுது நீண்ட கோல்களினால் தணல்களை அகற்றுவார்கள். தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு பேர் நெருப்புக் கற்களின் மேல் நடந்து செல்வார்கள். இவர்கள் ஒரு சுற்று வந்த பின், கற்களின் மேல் புற்களையும் குழைகளையும் போடுவார்கள். அவை பெரிதாகப் புகைப்பதுடன், உலர்ந்தவை தீப்பற்றிக் கொள்ளும். இப்பொழுது ஏனையோரும் களத்தில் இறங்குவார்கள். தீக்குளிப்பதில் சில தடைகளுண்டு. துடக்குள்ளவர்கள் (அதாவது வீட்டில் யாராவது இறந்து ஒரு மாதம் செல்லாதிருந்தால்), மனைவி கர்ப்பிணியாயிருப்பவர்கள், சமூகச் சண்டையில் ஈடுபட்டுக் குற்றவாளிகளாகக் கணிக்கப்பட்டவர்கள் தீக்குளிப்பதற்கு இடமளிக்கப்படுவதில்லை. மேலை நாட்டவர்கள் இந்நிகழ்ச்சியை ஆராயமுற்பட்டு, இதில் ஏமாற்று வேலை ஒன்றுமில்லை என்று கண்டறிந்தார்கள். ஆயினும் அவர்களால் விஞ்ஞான விளக்கம் எதுவும் தரமுடியவில்லை.

### கூட்டுப்பாடலின் மூலம் கடலாமைகளைக் கூவியழைக்கும் பெண்கள்

பெண்கள் தங்களை நன்றாக அலங்கரித்துக்கொண்டு, கடற்கரையை அடைந்து, பெரிய பாறை மேல் அமர்ந்து கொண்டு, ஒன்றாக இனிய குரலில் பாடுவார்கள். என்ன ஆச்சரியம், சில் நொடிகளில் கடல் ஆழத்திலிருந்து ஆமை



தலைவன் (CHIEF) நடனத்திற்குரிய அலங்காரத்தில். வலது கையில் நாகமரத் தடியினாலான ஈட்டி. இடது கையில் ஓலையினாற் செய்யப்பட்ட கேடயம். கைவளையங்களாகவும் இடுப்பிலிருந்தும் குறோட்டன் இலைகள் தொங்குகின்றன. வாசற்படியின் மேல் உள்ள வெள்ளைச்சோகிகள் தலைவனின் வீடு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. தலைவனின் கழுத்திலும் இதேபோன்ற சோகி தொங்குகின்றது. வாயிற்படியில் தோரணம் தொங்குகின்றது.



...ந்தி போசனம். அலங்கார உடை ... கவனிக்கவும். சகலரினதும் கைதட் ... ஏற்ப, சேம்புக்கிழங்கு உணவைக் ... முதற் சிரட்டையைக் கொடுப்பதற்கு, ...டன் நடந்து செல்கின்றார்.



ஈரப்பலாக்காயும் அதை அழகு பார்க்கும் நங்கையும். (இரண்டும் அழகாகத்தானிருக்கின்றன). முடியலங்காரமாக செவ்வரத்தம் பூவைக் கவனியுங்கள். ஈரப்பலா பசுபிக் தீவுகளுக்குரியதாகும்.



சேம்புக்கிழங்கிலிருந்து விருந்துணவு தயாராகின்றது. விருந்திற்கு ஏற்ற வகையில் தங்களை அலங்காரம் செய்துள்ளார்கள்.



தீக்குளிப்பதற்கு முன் சூடேறிய கற்கள் நெடிய கோல்களினால் சமப்படுத்தப்படுகின்றன. அலங்கார உடையைக் கவனிக்கவும்.

# என் பிரிய பூமிக்காக...


(14)

மறுநாள்... இவானும் சிசிலியாவும் மேலதிக ஆராய்வின் பொருட்டு 'மேய்கு'வின் மற்றைய பிரதேசங்களுக்குச் செல்லத் தீர்மானிக்கப்பட்டது. நிக்கலஸ், சியாராவுக்காகச் செய்யப்பட வேண்டிய இரசாயனப் பரிசோதனைகள் அநேகம் காத்திருந்தன.

சிசிலியாவும் இவானும் புறப்படத் தயாராகியிருந்தார்கள் - சியாரா நிறைய எச்சரித்திருந்தான். அடர்ந்து இருண்டிருக்கும் காடு இன்னும் எத்தனை அபாயங்களை வைத்திருக்கிறதோ...யாரும் எதிர்வு கூறமுடியாது!

ஊர்தி கூடாரம் விலத்தி நகரத் தொடங்கிற்று. இனி ஆராய்ச்சிகளைத் தொடங்க வேண்டியது தான். நிழல்தடுப்புக்களால் சூரிய ஒளிபடாமல் தடுத்தாயிற்று. கரியநிறமான அவை வெப்பக் கதிர்களையும் உறிஞ்ச வல்லவை. அநேகமாய் இனியொரு தீ விபத்து நிகழாதவாறு நிக்கலஸ் எச்சரிக்கையாயிருந்தான். சியாராவின் உதவியும் ஆய்விற்கு உறுதுணையாக இருக்கும்.

நல்லவேளையாகத் தனியாக எடுத்து வைக்கப்பட்டிருந்த சில வில்லை அமைப்புகள் எஞ்சியிருந்தன: தீயினால் விழுங்கப்படாமல்! இரசாயனக் கலவைகள், உபகரணங்கள் எல்லாமே தயார்.



நிக்லஸ் ஒருவில்லை அமைப்பை எடுத்தான். முற்புற விளிம்பின் ஓரமாய்ச் சிறிய இரு கரும்புள்ளிகள், சிறிய முளை போன்ற அமைப்பு என்பன இது முன்னர் ஓர் உயிரியாக இருந்திருக்குமோ என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாய் இருந்தது.

மீதப் பாகங்கள் அசல் ஒரு வில்லைபோலவே! உருளை வடிவில் சற்றே நீண்டு...

"சியாரா...இன்று இவ்வமைப்பின் உடலிலுள்ள இரசாயனச் சேர்வை, அதன் அமைப்புகள், இயல்பு என்பனவற்றை அறியவேண்டும்..." நிக்கலஸ் சொன்னான்.

"இரசாயனக் கலவைகளை நான் தயாரிக்கிறேன்..."

நிக்கலஸ் ஒரு வில்லை அமைப்பை எடுத்து உடைத்தான் உள்ளேயிருந்து வெண் சிறு துகள்கள் சிதற அவற்றைச் சேகரித்துக் கொண்டான்.

அந்த வெண்துகள் பற்றிய இரசாயன ரீதியான அத்தனை தகவல்களையும் பெறுவது அவனுக்குக் கடினமான பணியல்ல. மனம் சுற்றுச் சூழலை மறந்து போயிற்று. என்றோ ஒரு காலத்தில் கற்ற கல்வி கண்முன் நிற்க கைகள் ஓயாமல் பணி தொடர்ந்தது.

மிக நிதானமாகச் செய்ய வேண்டும். மிக நுண்ணிய இரசாயனக் கட்டமைப்பை, அதனை ஆக்கிய அணுக்களை அறியப பொறுமை வேண்டும்.

எள்ளளவும் பிசகிவிடாத செறிவில் இரசாயனக் கலவைகளைத் தயாரிக்க வேண்டும். கதிர்ப்பிரி கருவிகளால் மூலக்கூறுகளைத் தனிமைப்படுத்த வேண்டும். மூளையின் ஞாபக நிலையங்களில் சேமிக்கப்பட்ட தகவல்களோடு உருப்பெருக்கிகள் தரும் தகவல்களை ஒப்பிட்டு நோக்க வேண்டும்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது... செயலின் ஆர்வம் வார்த்தைகளை விழுங்க மௌனமாய்ப் பணி தொடர்ந்தது. சற்றே பொழுது சாய்கின்ற போது... நிக்கலஸ் சொன்னான்...

"இனி நாளை காலை வரை காத்திருக்க வேண்டும் விளைவுகளுக்காய்....!"

"ஆம்! எனக்கு நம்பிக்கை இருக்கிறது ஒரு பயன்மிக்க தகவல் வருமென்பதாய்த் தெரிகிறது."

"மாலையாகப் போகிறது... அவர்களை இன்னமும் காணோம்..."

"சற்று நேரத்துள் வந்துவிடுவார்கள் என நினைக்கிறேன்..."

அவர்கள் இருக்கையில் சாய்ந்து ஓய்வெடுத்து பத்து நிமிடங்கள் கூட கழிந்து இருக்கவில்லை.

சூழலில் அசாதாரணமான ஒரு கலக்கம்... அச்சமான குழப்பம்! விலங்குகளின் கீச்சொலியில் பயம் தொனித்ததோ! தரையும் சிறிதாய் நடுங்கினாற் போல... தொடர்ந்து காற்றும் கருமழையும் ஒன்றாகத் திரள்கின்ற சப்தம்...!

அவர்கள் எச்சரிக்கையானார்கள்... "நாசகாரிகளின் ஊர்தி இறங்குகிறது..." நிக்கலஸ் சொன்னான்.

"நிக்கலஸ் கவனி... இந்தச் சப்தம் எழக்கூடிய தூரத்தை உன்னால் ஓரளவு கணிக்க முடியுமா, உன்னுடைய முந்திய அனுபவத்தைக் கொண்டு...?"

"ஏறத்தாழ மூன்று கிலோமீற்றர்..."

"இந்த ஒலியெழும் திசையையும், தூரத்தையும் நோக்கினால் அவர்கள் சிசிலியாவும் இவானும் சென்ற பகுதிகளில்தான் இறங்குகிறார்கள் போலிருக்கிறதே...!"

"ஆம்! சியாரா...ஆனால் அச்சப்படாதே...ஊர்தி அவர்கள் வசம் இருக்கிறதே. 400மீற்றர் தொலைவில் அவர்கள் விரைந்து கடந்துவிட்டால் போதும் பிறகு நாசகாரிகளால் அச்சமில்லை......"

"ஆம். எதுவும் செய்வதற்கில்லை, காத்திருப்பதைத்தவிர!"

அவர்கள் மௌனமாயபார்த்துக் கொண்டிருந்தார்கள்...

அதேவேளை...காட்டில்...தமக்கு மிக அருகில் நாசகாரிகள் ஊர்தி இறங்கப்போவது சிசிலியாவுக்கும் இவானுக்கும் புரிந்தது...தாமதிக்க நேரமில்லை. அவர்களில் இருந்து 400மீற்றர் தொலைவினுள் அவர்கள் அகப்பட்டுக்கொண்டால்...நினைக்க நெஞ்சம் நடுங்கிற்று.

"சிசிலியா ஓடு...ஓடு...!" இவான் சற்றே தள்ளி ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவன் உரத்துக் கத்தியவாறு ஓடிவந்தான்.

"சிசிலியா சத்தம் வரும் திசைக்கு எதிராக ஓடு..."அவனுக்கு மூச்சிரைத்தது. சிசிலியாவுக்குத் தெரியும் அவர்களின் நீலக் கதிர்களில் சிக்கிக்கொண்டால்... இவானைப் பின்பற்றித் தோளில் கனக்கும் பையுடன் ஓடத்தொடங்கினாள்.

துரதிர்ஷ்டவசமாக அவர்கள் ஊர்தியை விட்டு விட்டு அநேக தூரம் ஆராய்ச்சிசெய்வதற்காக வந்து விட்டார்கள். சியாராவின் எச்சரிக்கை ஏனோ மறந்துபோனது.

தோளில் பைகள் கனத்தன. அன்று காலை முதல் சேகரித்த மண் மாதிரிகள்...பல்வேறு இடங்களில் கண்டெடுத்த பல்வேறு பருமனுள்ள வில்லை அமைப்புக்கள்... கால்கள் துவளத்தொடங்கின...

சிசிலியா இவானிலிருந்து பின்தங்குவது புரிந்தது. தோளின் சுமை கால்களைத் தடுப்பது தெரிந்தது. காடு அதிர ஊர்திகளின் இரைச்சல் காதைப் பிளந்தது.

"சிசிலியா பையைக் கீழே போட்டுவிட்டு ஓடு...இன்னும்... இன்னும் கொஞ்சத் தூரம்...அவர்கள் நிலத்தை நெருங்கிவிட்டார்கள். சிசிலியா..." இவான் தோளின் சுமையைத் தாங்கியவாறே ஓடினான்...

பையைத் தோளில் இருந்து உதறிவிட்டு சிசிலியா இவானைத் தொடர்ந்து ஓடினாள். மூச்சிரைத்தது. வியர்வை கன்னங்களில் கோடிழுத்தது. நிலத்தின் அதிர்வு மிகத் துல்லியமாகக் கேட்டது. இதயத்தின் ஒலி அதனிலும் மேலாய்க் காதுகளில் இடித்தது.

இப்போது ஊர்தியின் இரைச்சல் குறைந்து. மெல்லிய உறுமல் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. ஆயிற்று! ஊர்தி தரையிறங்கிவிட்டது! அபாயம் கண்முன்னால் நெருங்கிவிட்டது!

"சிசிலியா...தளர்ந்துவிடாதே இன்னும் ஒரு நூறு அடிகள் வரைதான் பாக்கி...சிசிலியா கொஞ்சம் முயற்சிசெய்!" ஏறத்தாழ முற்றிலுமாய்க் களைத்துப்போன சிசிலியாவை இவானின் வார்த்தைகள் ஊக்கப்படுத்தின.

அவர்கள் ஓடினார்கள்...

ஆயிற்று! இன்னும் கொஞ்சத் தூரம்தான்!

நாசகாரிகளின் கதிர்கள் எதுவும் இன்னமும் துரத்தவில்லை... ஆக, இன்னும் இவர்களைத் தெரியவில்லை.

இவான் கையிலிருந்த தூரம் காட்டும் கருவியைப் பார்த்தான். "பாதுகாப்பான பிரதேசத்துக்கு வந்தாயிற்று சிசிலியா!" சொல்லியவாறே மூச்சுவாங்கத் தரையில் வீழ்ந்தான்.

சிசிலியாவுக்கு வார்த்தைகளை உச்சரிப்பதே கடினமானதாக இருந்தது. மூச்சுத்திணறலிலிருந்து விடுபடச் சற்று நேரமாயிற்று. இவான் அருகிலிருந்த மரத்திலேறி தொலைநோக்கியினூடாக நாசகாரிகளின் ஊர்தி இறங்கிய திசையில் பார்த்துக்கொண்டிருந்தான்.

"அவர்கள் நான்கு பேர் வந்திருக்கிறார்கள் சிசிலியா... எங்கள் ஊகம் சரியானதுதான். அவர்கள் 'டெரோகாப்பஸ்' தாவர அடியில் மண்ணைப் புரட்டித் தாம் கொண்டு வந்திருந்த ஒருபெட்டியை அங்கே வைக்கிறார்கள்... பழையபடி மண்ணால் மூடுகிறார்கள்... இப்போது மற்ற மரம்...! அங்கும் இதேபோல்தான்! எங்கள் ஊகம் சரியாகிவிட்டது" குரலின் மகிழ்ச்சி களைப்பை விரட்டி விட்டது.

எத்தனை காலங்களாக இருந்த சந்தேகங்களின ஒரு பகுதியை இவ்வளவு விரைவாய் அவர்களால் தீர்க்க முடிந்து விட்டது! சிசிலியாவுக்கும் மகிழ்வு பெருகிற்று.

"நீ பார்க்க விரும்புகிறாயா சிசிலியா....?"

"இல்லை இவான்... நீயே தொடர்ந்து சொல்!"

"இப்போது....இப்போது அவர்கள் வேறு மரங்களை நோக்கிச்செல்கிறார்கள்.... என்ன அதிர்ஷ்டவசமாகத் தப்பியிருக்கிறோம் நாம் என்று நினைக்கிறாய் நீ! மதியம் நாங்கள் வில்லை அமைப்புகளைத் தோண்டி எடுத்த அதே பகுதியில் இப்போது அவர்கள் நிற்கிறார்கள்!"

"அப்படியானால் இவான்.." சிசிலியாவின் குரலில் சற்றுத் திகில் கலந்திருந்தது. "அப்படியானால், தங்களைத் தவிர வேறு யாரோ அந்த வில்லை அமைப்பகளை எடுத்துவிட்டதை அவர்கள் அறியமாட்டார்களா?"

"நிச்சயம் அறிவார்கள்...! சற்றுப் பொறு... ஏமாற்றத்தில் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை வேடிக்கை பார்க்கலாம்!"

ஆனால் வேடிக்கை பார்க்கத் தக்கதாய் இவான் சொன்னதுபோல இருக்கவில்லை அவர்கள் செயல்! இவானும் சிசிலியாவும் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது...!

"ய்ய்பீயீயீயீங்ங்ங்ங்க்" நெஞ்சை அதிரவைத்தக் காதைத்துளைத்தது அந்த ஒலி.......

"சிசிலியா! அவர்கள் எச்சரிக்கையாகி விட்டார்கள்.... அந்நியர்கள் இருப்பதாய்ச் சந்தேகிக்கிறார்கள்....." இவான் அச்சந்தொனிக்கும் குரலுடன் சொன்னபடி மரத்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும்போது....

பளீரென்ற நில ஒளியுடன் அவர்களிடமிருந்து வெளிப்பட்டு காட்டின் மரங்களையும் துளைத்தவாறு அப்பிரதேசமெங்கணும் வெட்டிச்சென்றன.... அநதப் பயங்கரமான நிலக் கதிர்க்கற்றைகள்!.

* * *

சீலியாவினுள் மீண்டும் அந்த 'விரக்தி படர்ந்து கொண்டது. ஜோர்ஜ் தன் அறைக்குள் போனவர்தான். அதன்பிறகு நீண்ட நேரங்களாய் அவளும் காத்துக்கொண்டுதான் இருக்கிறாள்.... அவர் வரவில்லை. அந்த ஒலியும் நின்றுவிட்டது.

மாளிகையெங்கும் அச்சந்தருவதாய் படர்ந்து கிடந்த அமைதி தன்னுள் அநேக இரகசியங்களைப் புதைத்து வைத்திருப்பதாய் தோன்றிற்று.

சீலியா ஆரம்பநாட்களில் அவரின் இரகசியமான நடவடிக்கைகளைப்பற்றி ஓரிரு தடவைகள் கேட்டபோதே அவரின் வார்த்தைகள் தாம் எதையும் சொல்ல விரும்பவில்லை என்பதை உணர்த்தின.

அதன்பிறகு அவளும் கேட்க விரும்பவில்லை. ஒரேயொரு உடன்பிறந்த அண்ணனைத் தவிர வேறு உறவுகளற்ற அவளுக்கு உலகமாயிருந்தவர் அவர். அவர் தயங்கிய போது அவள் அவற்றை அறிய விரும்பவில்லை. அதன்பின் -

ஆனால்.... பின்னர்....தன் உயிரில் பூத்த மழலையைப் பிரிய அவர் காரணமானபோது அவளுள் அவர் செயல்கள் பற்றி வினாக்கள் பிறந்தன. ஆனால் ஜோர்ஜ் என்றைக்குமே தன் செயல்கள் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்ல மறுத்து விட்டார்.

இப்போதுங்கூட சீலியாவினுள் ஒரு வேகம் பிறந்தது.

**குமுதினி**
. சங்கத்தானை

'இப்போது அவர் அறையைத் திறந்து அவர் செயலை நேரடியாகவே கண்காணித்தால் என்ன?'

போர்வைகளை விலத்திக் கட்டிலிருந்து இறங்கினாள். உடல் தள்ளாடியது. கண்களுள் இருட்டுப் பனிச்சிட்டது. சமாளித்து நடந்தாள். இதோ! ஜோர்ஜின் அறை..... அவள் சப்தமிடாமல் சென்று கதவில் கையை வைத்தாள்... நெஞ்சத் துடிப்பு காதுகளில் தாளமிட்டது.

(தொடரும்)

## சொந்தம்தா! கவிதைக்கும் சந்தம்தா!

பூவில் பிறந்தவளே புனிதம் உறைந்தவளே
கூவும் குயிலினிமை குணத்தினிலே கொண்டவளே
சாவி கொடுத்தென்னைத் தத்தளிக்க விட்டு விட்டு
கோவிலடியிலன்று குனிந்தபடி சென்றவளே!
ஏவற்படைக் கண்ணால் என்னை அருட்டிவிட்டு
மோன நிலாபோல முகிலுள் மறைபவளே
ஆவி துடிக்குதடி! ஆன்மாவோ சாந்திபெறத்
தேவி உனதின்பத் திருவடிக்கு ஏங்குதடி?

முத்தந்தா! முத்தத்தில் மோகம்தா! நானிழந்தேன்
ரத்தம்தா! ரணம்மாறத் தனங்கள் தா! புதுஇதயச்
சத்தம் தா! வாழ்வியங்கச் சாந்தம் தா! உன் அன்புச்
சொத்தைத்தா! சுகம் சிலிர்க்கச் சுவர்க்கந்தா! என்மனதில்
சுத்தம்தா! என்னுயிர்க்குத் துணையுந்தா! நாளையொரு
முத்துத்தா! என்வம்ச முகத்தைத்தா! எனக்கிப்போ
பித்துத்தான்! அதை அழிக்கப் பிச்சைதா! இனிமேல் நீ
மத்தாகி எனை அமுதாய் மாற்றித்தா! வரமே வா!

- த.ஜெயசீலன் -

## கோபம்

வாசலைக் கடக்கும் போது
வழியிலே இடித்துக் கொண்டேன்
ஊமையாய் உள்ளே காயம்
உள்ளத்தில் சற்றுக் கோபம்
பேசவே வந்த சொற்கள்
பேதமாய் ஆக முன்னர்
வீசலாம் யாரில் என்று
வேலையை விட்டு வந்தேன்!

வேலியைப் பிய்த்துக் கோழி
மேய்வது எங்கள் சாடி
கோழியாஸ், சின்னக் குரோட்டன்
கொத்தியே கிழித்து வைத்தல்
நாளெலாம் நடப்ப துண்மை
நட்புடன் வாழும் அயலின்
சோலியைக் கிளப்ப வேண்டாம்
சொல்வதற் கெதுவு மில்லை!

ஆயினும் காலின் வலியை
யாரிலே தீர்த்துக் கொள்ள?!
வேகமாய்க் கற்கள் கொண்டு
வீசினேன் கோழி மீது
பேசவே இயலாச் சீவன்
பெருங்குரல் எழுப்பக் கண்டு
வாசலை எட்டிப் பார்த்தார் - அடுத்த
வளவிலே வாழும் "முகத்தார்"

தொடங்கிய சண்டை வெற்றி
தோல்வியை காணும் சாட்டில்
விடமென நெஞ்சில் ஏறி
வேதனை ஆச்சு, கண்டீர்!
குஸ்திகள் கற்ற மகனைக்
கூப்பிட்ட முகத்தார் - ஆசுப்
பத்திரிக் கட்டில் ஏறி
அடியனைப் படுக்க வைத்தார்!

- கி.குருபரன் -

# உங்கள் கவிதைகள்

காதல்!
அது உருவம் பார்ப்பதில்லை
உள்ளத்தை மட்டுமே பார்க்கிறது.
உடலழகு பார்ப்பதில்லை
உண்மை அன்பை மட்டுமே பார்க்கிறது.
பணம் கேட்பதில்லை
பாசம் மட்டுமே கேட்கிறது.
இச்சை தீரும் வரை வருவதில்லை
இறுதி வரைக்கும் வருகிறது.

- கதா
யாழ். பல்கலைக்கழகம்.

பார்வையில் கனிவிருக்கும்
பாசத்தில் வலுவிருக்கும்
இதயங்கள் இடம் மாறும்
இல்லறத்தில் ஒளி வீசும்
ஓர் இதயம் அழும் போது
மறு இதயம் துடிதுடிக்கும்.
இதயங்கள் சங்கமித்தால்
காதலுக்குப் பொருளிருக்கும்.

சரோ. தம்பித்துரை

*எழுதுகிறேன் என்னிதயச் சுவர்களில்*
*பழுதற்றது என் காதலென்று!*
*இதயத்துள் ஊடுருவிய உயிர்ப்பு*
*உதயத்துக்காய்த் தவிக்கிறது!*
*வழியில்லை...!*
*வாயில் மொழியில்லை...!*
*மௌனப் பூமியில்...*
*புதைந்து போகிறது உயிர்ப்பு!*

- பரன்

காற்றுக்கும் கதவடைப்பேன் - உன்
கார்கூந்தல் தொடாதபடி
நேற்றைப் போலல்ல இன்று!
பெண்ணே உன்
நேசக்கரம் தொட்டுச் சொல்கிறேன்
என் உயிர் நீ
உன் உயிர் நான் என்று!!

- என். தனுசுஜன்
சண்டிலிப்பாய்

காவலுக்கு வைத்த நாய்
கடிக்கிறது.
காவலிட வந்தபேய்
கன்னியரைப் பிடித்திழுத்து
கசக்கி முகர்ந்து
காவு கொண்டு நிற்கிறது.
காரிருள் விலகி
காலை விடியட்டும் - மண்ணில்
கால் படட்டும் - கண்ணே
காதகர் இருக்கும் வரை
காதலர் தினத்தை ஒத்திவைப்போம்
காதலையும் சிறிது பொத்தி வைப்போம்.

பண்ணாக நாரதன்

இதயங்கள் இணைந்து விட்டால்
கண்ணீர்தான் மிஞ்சுமோ
சுட்டி விளக்கது கண்ணீரால் தான்
சுடர்விட்டெரிகிறதோ!

- பரநி
சுண்டுக்குளி

காதலர் தினம் - எனக்கு
கண்ணீர் தினம்
காணமல் போன என்னவள்
மீண்டு(ம்) வரும்வரை(?)
காதலர் தினம் - எனக்கு
கண்ணீர் தினம்...!

- கலைநேசன் சிவம் -

காதல் என்னும் ஜீவ ஊற்று
கண்களில் தொடங்கி
'மௌன மொழிக்'
கவிதையில் நிறையுமா?

- கே. எம். எஸ். -
கோண்டாவில் வடக்கு.

*கண்களால் நோக்கினேன்*
*புன்னகைத்தாய்...*
*மனைசத் திறந்தேன்*
*இதயத்தில் பூப்பூத்தாய்...*
*நிரந்தர இணைவுக்காய்*
*கைகளை நீட்டினேன் ~ நீயோ*
*பின்னுக்கு மறைத்துக் கொண்டாய்*
*புரிந்து கொண்டேன்*
*நீயும் நானும்*
*இலங்கையின்*
*வடக்கும் தெற்கும்!*

- த. சாம்பவன் -

காதலர்தினம் கொண்டாடினேன்!
காவலரணில் கற்பழிக்கப்பட்டு...
கதறக் கதறக் கொல்லப்பட்ட - என்
காதலியின் சமாதியருகில்!

- சு. சுதர்சன் -
வதிரி

வளரட்டும் காதல்
வாழட்டும் காதலர்கள்
கொண்டாடுவோம் காதலர் தினத்தை

வே. விஜி
நல்லூர்.

தினைப்புலம் காக்க வைத்த
வள்ளி -
பாவத்திற்கு வித்திட்ட
ஏவாள் -
பிரிவின் இலக்கான
யசோதை -
உலக புகழ் பெற்ற
லைலா -
யாவர்க்கும் Good Luck!

- ஆரணி -
சாவகச்சேரி.

இணையத் துடிக்கிறது
இரு மனம்
பிரிக்க முனைகிறது
இரு முகம்!

- நித்தி -
அரியாலை

ஒளிபரவும் வேளையில்
சூரியனைப் பார்த்து
முகம் மலரும்
கமலக் காதலிகள்
தம் காதல்
கைகூடாமல்
இருள்சூழும் வேளையில்
முகம் சூம்பிப் போகின்றன.
இன்று பல
மனிதக் காதல்களும்
இவ்வகைதான்.

த. கிருபாகரன்
அல்வாய்



தெருக்காதல் திருப்பத்தில் போனது...
கற்பூர சத்தியம் காற்றோடு போனது...
வயிற்றில் கருவோடு காதலன் மறைந்தான்
திருவோடு வேறோரு திருமணம் செய்தான்.
காதல் தெய்வீகமானதா? காமக் களியாட்டமா?

செ. பிரியதர்ஷினி
அச்சுவேலி.

இரு மனங்கள் இணைந்தால்!...
இனிய திருமணமாகும்!...
இரு இனங்களும் இணைந்தால்
இன்றே அமைதியான இலங்கையாகும்!...

சு.சுதாகர்
வதிரி

இதயங்கள் இரண்டு
இணைகின்ற வேளை...
இங்கே அன்பெனும் சுடர்
ஆனந்தமாய் ஒளிர...
இரண்டு கரங்கள் சேரவே!
இனி இவர்கள் வாழ்வு இன்பமே!!

க. சிறீதரன்
கிளிநொச்சி

காதலுக்குத் தான்
எத்தனை போராட்டம்
இதோ,
இணைந்த இதயங்களின்
இன்ப ஊற்றாக
பின்னிப் பிணைந்திருக்கிறார்கள்
காதலர் தினத்தில்!

எம். கார்வண்ணன்
கோண்டாவில் வடக்கு.

காணாமற் போதல்
சந்தேகக் கைதுகள்
நிறைந்துவிட்ட - இரத்தக்
கறைபடிந்துவிட்ட
இந்தத் தேசத்தில்
இதயங்கள் சங்கமிக்கும்
இனிமையான காதல் என்பது
வெறும் கானல் நீர் கண்மணி
அதனால் காத்திரு
சுதந்திரக் காற்றை
சுவாசிக்கும் நாள்வரைக்கும்.
அந்த நாள் வரும்போது
காதல் வானில்
நிம்மதியாய் கண்நிறைந்த
கனவுகளோடு
சிறகடித்துப் பறப்போம்!

- தாரிணி
யாழ். பல்கலைக்கழகம்.

காதல்
தூய்மையானது என்பதும்
காதல்
காலத்தை வென்றது என்பதும்
காதல்
காலத்தால் அழியாதது என்பதும்
காலம்
கடந்து விட்ட
கட்டுக் கதையாகிவிட்டது.
காதலிப்பது ஒருவர்
கருத்தரிப்பது இன்னொருவர்
கைப்பிடிப்பது வேறொருவர்
இதனால்தான் கூறுகின்றேன்
கலாசார சீரழிவுக்கு
காதலும் ஒரு
காரணமாகலாம்!

- வி. ரமேஷ்
யாழ். பல்கலைக்கழகம்

# மௌனமொழி

"இதயத்தின் சங்கமிப்பில்
இங்கே ஓர்..
வாழ்க்கையின்,
வசந்தகால ஒப்பந்தம்
வரையப்படுகிறது"

அ. றெனிஷியஸ்
குருநகர்

**விழியாலே மொழிபேசி**
**இரவெல்லாம் உறவாடி**
**இன்ப லோகத்தில்**
**இமயத்தைத் தொட்ட வேளை**
**'சீதனப்புயல்' சுழன்றடிக்க**
**பரஸ்பரம் பகிர்ந்தனர்**
**திருமண வாழ்த்துக்களை!**

இரா. ஜெயக்குமார்.

இதய சங்கமங்களில் ஊற்றெடுக்கும்
காதல் உணர்ச்சிகளை
கவிதையில் வடிப்பதற்கு
எனது கையில் புட்டியுமில்லை.
மடியில் குட்டியுமில்லை.
நான் கவியரசுவும் இல்லை.
தேசம் எரியும் போது
இத் தெருக்கூத்துக்கள்
தேவையுமில்லை!

- யாழ். வதிரி வாசன்

யார் சொன்னது!
வார்த்தைகளுக்குத்தான் வலிமை என்று...
காதலித்துப் பார்!
மௌனத்தின் வலிமை புரியும்....!

எஸ். எஸ். கௌரி
புத்தூர்

இணைந்திட்ட இதயங்கள்
இணை சேர முடியாமல்
இருக்கையிலே...
இதயத்தின் சங்கமிப்பே
இல்லாமல்...
இன்று பல திருமணங்கள்.

அ. குருதாஸ்
குருநகர்

இதயங்களைத்
தந்து விட்டோம்
மனசுகளில் பாரமில்லை
ஆனாலும்.......
இருக்க இடம் ஏதுமில்லை
இடப்பெயர்வினாலே!

-எம்.ஷாந்தன் -
அரியாலை

இக் காதலர் இருவரும் தம்
இரத்தத்தை நெய்யாக்கி
ஏற்றிய சுடர் எரிவதன்
மர்மம் தான் என்னவோ?

க. சுகிர்தா
யாழ். பல்கலைக்கழகம்

நான் இல்லாமல் நீயும் வாழலாம்
நீ இல்லாமல் நானும் வாழலாம்
நாடில்லாமல் நாமிருவரும்
நலிந்து நெளிந்து வாழமுடியாது!

- லோ. யாழினி
வண்ணை.

தேய்ந்தாலும் வளர்ந்தாலும்
விண்ணோடு தான் - அந்த
வெண்ணிலா!
இருந்தாலும் - இனி
இறந்தாலும்
உன்னோடு தான்
உயிர்வாழ்வேன்
என்றும் அன்புடன்

- என். தனு
சண்டிலிப்பாய்.

வானத்தில் பூத்திருக்கும்
வெள்ளி நிலா நானிருக்கும்
வாசல் வந்து சேரும் என்று
சொர்ப்பனத்தில்
நினைத்ததில்லை!
மாளிகையில் வாழ்ந்திருக்கும்
மாடப்புறா நானிருக்கும்
எல்லை வந்து காதலிக்கும்
என்று எண்ணிப்பார்த்ததில்லை!

- ரஞ்சினி
கட்டப்பிராய்.

பெப்ரவரி பதின்னான்கு,
'பெடி பெட்டை' எல்லோர்க்கும்
பெருநாளாம் இங்கு!
இவர்களும் இங்கே
இணைந்த இதயங்களுடன்,
இரு கரம் சேர்க்கும்
இரண்டு காதலரோ!!

- லக்ஷ்மி
சுண்டுக்குளி.

## மௌனமொழி - 75



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் குருநகரைச் சேர்ந்த ஜே. கோபிராஜ்.

# இனம்

உட்பக்க அறைகள் எல்லாம் கூட்டிக்கொண்டு வெளி விறாந்தைக்கு வந்தவன் திரும்பிப் பார்த்தான். காற்றுச் சுழன்றடித்து வீட்டு நாற்சாரத்தின் வெளியினூடாகச் சருகுகளைக் கொண்டுவந்து பரப்பிப் போட்டது. அவனுக்கு எரிச்சல் வந்தது.

"கோதாரிக் காத்து"

வாய் திட்டியது. மறுபடியும் கூட்ட முடியாது. பள்ளிக்கூடம் போக வேண்டும். வெளி விறாந்தை கூட்டி முடிக்க குசினிக்குப் பக்கத்து அறையில் இருந்து சத்தம் வந்தது.

"உது அடுத்த எலிச் சனியன்ரை வேலை. ஏதோ தட்டிப்போட்டு ஓடுது" அவன் புறுபுறுத்தான்.

"சே! சின்ன வீடாய் அளவாய் இருந்தால் எவ்வளவு நல்லாய் இருந்திருக்கும். கூட்டித் துடைக்க வேலையும் குறைவு. இந்தப் பென்னம்பெரிய நாற்சார் வீட்டைப் பாக்கிறத்துக்கு ஒருத்தர் தனிய வேணும்" அவன் மேலும் புலம்பினான்.

அவன் அப்பாவுக்குக் கொடுத்த சீதன வீடு. பழைய கால ஆஸ்பத்திரிக் கட்டடம் மாதிரி நிமிர்ந்து நின்றது. நாற்பத்தைந்து பரப்புக்குள் எழும்பி நின்ற வீடு இன்று ஐந்து பரப்பில் வேலியோடு ஒட்டி நிற்கிறது. மற்றையதெல்லாம் விற்றுக் கைமாறி விட்டது.

தெருவில் செல்கின்றவர்கள் எல்லோரும் ஒருமுறைதன்னும் வீட்டைத் திரும்பிப் பார்க்காமல் செல்ல மாட்டார்கள். தெருவோடு ஒட்டியபடி வீட்டு வாசற்கதவு இருந்தது. அவனுடைய பேரன் அந்தக் காலத்தில் பெரிய வியாபாரி. லொறியில் வியாபாரத்துக்கு வரும் மூட்டைச் சாமான்களை 'சுணங்காமல்' உடனேயே இறக்கி வைப்பதற்காகத்தான் இப்படித் தெருவோடு வாசல் கதவினை வைத்ததாகப் பேர்த்தியார்க் கிழவி இடையில் அவனுக்குச் சொல்லியிருந்தாள்.

ஆனால் இன்றைய நிலைமையோ...?

கிழவி பாண் வாங்கிக்கொண்டு வந்துவிட்டாள். தலையின் வெண்மையும் உடலைச் சுற்றியிருந்த மெல்லிய பருத்திச் சேலையும் அவளின் நிறத்துக்கு ஒத்துப்போயிருந்தன. எழுபது வயது கடந்த நிலையிலும் அவளில் தளர்ச்சி தெரியவில்லை.

கடந்த காலத்தில் நடந்துமுடிந்த அவலங்களைத் தாங்கி நின்று, வீட்டிலிருந்த சின்னங்களை வளர்த்தெடுப்பதற்கு இந்தத் தளராத மனமும், உடம்பும் தேவையாக இருந்தன.

சின்னவள் பள்ளிக்கூடம் போகும் தயார் நிலையில் இருந்தாள். அவள் அணிந்திருந்த வெள்ளை யூனிபோம் 'காவி' ஏறிப்போய் இருந்தது. முகத்தில் சோகம் நிரந்தரமாக அப்பிக் கிடந்தது. என்ன காரணமென பேர்த்தியார் அவளிடம் கேட்பதில்லை. காரணம் கிழவிக்குத் தெரியும்.

மறுபடியும் எலி பொருள்களைத் தட்டிவிட்டு ஓடும் சத்தம் கேட்டது.

"சனியன்கள் என்ன செய்தாலும் ஒழியுதுகள் இல்லை. ஒரு சாமான் சக்கட்டும் வைச்செடுக்க முடியாமல் கிடக்கு"

பேர்த்தியார்க்கிழவி சத்தம்போட அவன் உள்ளே வந்தான்.

"என்னணை ஆச்சி திரும்பவும் எலியோ?"

"இங்க வந்து பார் ராசா. பெட்டிக்க கிடந்த மாவை கோட்டிப் போட்டுப் போகுது." கிழவி வேதனையுடன் சொன்னாள்.

மா கீழே கொட்டிப் பரவிக் கிடந்தது. கிழவி கீழே குந்தி இருந்தபடி மேல் மாவைக் கிள்ளத் தொடங்கினாள்.

சின்னவள் இருவரிடமும் சொல்லிவிட்டுப் பள்ளிக்கூடம் போனாள்.

"ஆச்சி என்னணை உதுகளுக்கு செய்யிறது" நானும் கிழமைக்கு ரண்டு எலியாவது சா அடிச்சுக் கொண்டுதான் வாறன். எலியும் பொறிக்கையும் ஆப்பிட்டுக் கொண்டுதான் இருக்கு. என்ன செய்தும் சனியன்கள் ஒழியுதுகள் இல்லை."

"ராசா நாங்கள் கனகாலத்துக்கு மேல இங்கே இருக்கேல்லையெல்லே. சண்டை தொடங்கி இடம் பெயர்ந்தெல்லே வன்னிக்குப் போட்டம். அதுதான் ஆக்கள் இல்லாமல் வீட்டில எலி பெருகிப்போச்சு" கிழவி சொன்னது அவனுக்குச் சரியாகப்பட்டது.

இந்த நேரத்தில்தான் அவனுக்குப் பள்ளிக்கூட ஞாபகம் வந்தது. திடுக்கிட்டான். புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு கிழவியிடம் சொல்லி விட்டு வேகமாகப் பள்ளிக்கூடம் நோக்கி ஓடினான்.

அவன் போவதற்குள் பள்ளிக்கூடம் தொடங்கிவிட்டது. அவன் வேர்த்து வேர்த்து பயந்தபடி வகுப்பறைக்குள் நுழைய, உயிரியல் வாத்தியார் அவன் வந்த கோலத்தைப் பார்த்துவிட்டு அவனை உள்ளே போயிருக்க அனுமதித்தார்.

அவனுக்கு உயிரியல் வாத்தியாரை மிகவும் பிடிக்கும். இரக்க குணம், அதட்டி, வெருட்டாத பேச்சும், எளிதில் பாடங்களை விளங்கப் படுத்தும் தன்மையும் இவையெல்லாம் அவரிடம் அவனைப் பாசங் கொள்ள வைத்தன.

கரும்பலகையில் நெடுக்கு வெட்டுமுகமாக வெட்டுப்பட்டுக் காணப்படுகின்ற நிலையில் எலியின் பாகங்கள் குறிக்கப்பட்டிருந்தன. அவனுக்கு எலியின் வரைபடத்தைப் பார்த்தபோது சிரிப்புத்தான் வந்தது. அடக்கினான்.

வீட்டில்தான் எலியென்றால் இங்கேயும்...

அவனும் எலிகளை 'கீச்சுக் கீச்சு' என்று கத்தக் கத்த தடியால் அடித்துக் கொன்றிருக்கிறான். வாயினால் இரத்தம் கொப்புளிக்க, கண்கள் வெளியே பிதுங்கிவந்து உடல் நசிந்துபோய்...

இந்த நிலையில்தான் அவன்



எலிகளைப் பார்த்திருக்கிறான். எலியின் உள்ளுக்குள் இப்படியான 'சமாச்சாரங்கள்' இருப்பதை இப்போதுதான் உயிரியல் வாத்தியார் மூலம் அதிசயமாகப் பார்க்கிறான்.

"மாணவர்களே எலியின் உணவுத் தொகுதியும் எங்கள் உணவுத் தொகுதியும் ஒரே மாதிரியான அமைப்பில் உள்ளவை. அதனால்

தொகுதியின் விவரங்களை அறிந்து கொள்ளலாம்"

வாத்தியார் சோக்குக்கட்டி மூலம் எலியின் வாய்ப்பகுதியில் இருந்து ஆரம்பித்து உடல் பாகங்களை மாணவர்களுக்கு விளங்கப் படுத்தத் தொடங்கினார். அவனும் ஆர்வமாகக் கேட்கத் தொடங்கினான். அப்போதுதான் அவன் மனதில் அந்த யோசனை எழுந்தது.

பாடம் முடியுமட்டும் காத்திருந்தான். பாடம் முடிந்து வாத்தியார் வெளியேபோக, இவன் போய் அருகில் நின்றான்.

வாத்தியார் அவனைப் பார்த்தார்.

"என்ன...? ஏதும் பாடம் விளங்கேல்லையோ?"

"இல்லை சேர். எங்கட வீட்டில கனக்க எலி சேர். நான் எலி பிடிச்சுக்கொண்டுவந்து தாறன். நீங்கள் இப்ப கீறிக் காட்டி விளங்கப்படுத்தின மாதிரி எலியை வெட்டி விளங்கப்படுத்துங்கோ சேர்!"

அவன் ஆவலாய்ச் சொல்ல வாத்தியார் சிரித்தபடி தலையசைத்து விட்டு நடந்து போனார்.

இரவு அவனுக்கு நித்திரை வரவில்லை. எப்போது எலிப்பிள்ளை கையில் அகப்படும் என்ற வெறியில் இருந்தான்.

'எலிச் சனியன்களை முழுக்க வீட்டில இருந்து ஒழிச்சுப்போட வேணும்' மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

கொஞ்சம் கண்ணயர்ந்தவேளையில் 'படீரென்று' ஏதோ உடைந்த சத்தம் கேட்டு எல்லோரும் திடுக்கிட்டு எழுந்தனர்.

"தம்பி 'குண்டு' வெடிச்ச சத்தமோ?"

"இல்லை ஆச்சி கண்ணாடி விழுந்து உடைஞ்ச சத்தம் மாதிரிக் கிடக்கு"

"கண்ணாடியோ...?" கிழவி யோசித்தாள்.

"ஆச்சியணை அப்பா, அம்மான்ரை படங்கள் ஏதும் விழுந்து உடைஞ்சு போச்சோ?"

"இந்த எலிச் சனியன்கள் கயித்தை வெட்டிப்போட்டுது போல"

அவர்கள் சொல்லிக்கொண்டு கைவிளக்கைக் கொழுத்தியபடி வெளிவிறாந்தைக்கு வர எலிகள் குறுக்கால ஓடின. பின் அவர்கள் கீழே பார்த்தால்...சுவரில் மாட்டப் பட்டிருந்த அப்பா, அம்மாவினது படங்கள் கீழே விழுந்து நொருங்கியபடி கிடந்தன.

"ஐயோ! எங்கட அப்பா, அம்மான்ர படம்" என அவன் கத்தியபடி படங்களைத் தூக்கினான். உடைந்த கண்ணாடித் துண்டொன்று அப்பாவின் மார்பைத் துளைத்து விட்டிருந்தது.

"தம்பி! ராசா!! கவனம் கண்ணாடி குத்திப்போடும்" கிழவி பதற்றமாகக் கூறினாள். அவன் பாதுகாப்பான இடத்தில் படங்கள் இரண்டையும் எடுத்துவைத்தான்.

மேலே கூரையில் எலிகளின் 'கீச்சுக் கீச்சு' சத்தம் அவனைக் கேலி செய்வதுபோல் அவனுக்குத் தெரிந்தது. வாய்க்குள் வந்தபடி திட்டித்

தன.

"அப்பா..! அம்மா...!!"

உள்ளே வந்து படுத்தார்கள். அவனுக்கு நித்திரை வர மறுத்தது. அன்று அப்பா, அம்மா இருவரையும் உடைந்த கண்ணாடித் துண்டுகள் [illegible] கட்டிக் கொண்டுவந்து பெட்டியில் வைத்தார்கள்.

வானத்தில் இருந்து அந்த [illegible] பறவை போட்ட [illegible] அவர்களை இந்தக் கோலத்துக்கு ஆக்கியது.

'கடவுளே! அநியாயமாக இந்தச் சண்டையில் இருவரும் செத்துப் போனார்களே. இது போதாதென்று வேலைக்குப் போய் வந்த அண்ணனும் காணாமற் போய்விட்டானே!' உடம்பு முழுவதும் அவனுக்கு என்னமோ செய்தது; உடன் மூச்சடைத்தது. கண்களில் இருந்து கண்ணீர் அவனையறியாமல் கன்னத்தில் வழிந்தோடியது.

'அண்ணாவின் நிலைதான் என்ன?'

அண்ணனின் முடிவு தெரிந்தால், அப்பா, அம்மா படங்களுக்கு அடுத்து அவனின் படமோ?

இந்த நிலையைக் கேட்பதற்கு ஒருவருமில்லையா?

விடிந்தது. அவன் ஓடிச்சென்று எலிப்பொறியைப் பார்த்தான். பொறி வெறுமையாக இருந்தது. இரவு எலி வரவில்லை. இராத்திரி நடந்த அமளிதான் காரணமென நினைத்தான்.

இந்த நேரத்தில் கிழவி அவசரமாக அவனிடம் வந்தாள்.

"தம்பி இண்டைக்கு யாழ்ப்பாணம் போகவேணும். நானும் ராத்திரி அமளியில மறந்து போனன். காணாமற் போன ஆக்களைப்பத்தி இன்று விசாரிப்பாம்"

அவன் கிழவியாரைப் பரிதாபமாகப் பார்த்தான். அதில் நம்பிக்கையின்மை தெரிந்தது. கிழவிக்கும் அது புரிந்தது.

"போய் வந்தால்தான் அப்பு மனதுக்கு நிம்மதி. கொண்ணனை சில வேளை எங்கேயாவது பிடிச்சு வைச்சிருந்தால் விட்டிடுவினம் அல்லே?"

அவர்கள் யாழ்ப்பாணம் போவதற்குத் தயாரானார்கள்.

மறுநாள் காலை சின்னவள் ஓடி வந்து அவனை எழுப்பினாள். கிழவியும் அவளின் சத்தம் கேட்டு கண் விழித்தாள். நேற்று யாழ்ப்பாணம் போய் வந்த களைப்பு வேறு. புதிதாய் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. மறுபடியும் கூப்பிடுவோம் என்று சொல்லி இருவரையும் அனுப்பி விட்டார்கள்.

பாவம் கிழவி. பஸ்வண்டியில் பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஒவ்வொரு இராணுவத் தடுப்புச் சாவடியிலும் அவன் பேரன் இறங்கி ஏறவேண்டியிருந்தது. அதனால் அவனைத் தனியாக விடப் பயந்து அவளும் இறங்கி ஏறினாள்.

அதனால் வழமைபோல் 'வெள்ளென' எழும்ப இருவராலும் முடியவில்லை. சின்னவளோடு அவர்கள் எலிப்பொறி வைத்த இடத்துக்கு ஓடினார்கள்.

ஒருகொழுத்த எலி பொறியில் அடிபட்டு செத்துக் கிடந்தது. வாய் பிளந்து இரத்தம் ஓரத்தில் உறைந்து கிடந்தது. அவர்கள் கண்பிசகாமல் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவன் திடீரென்று வெளியே ஓடி வந்து, தடியொன்றைக் கொண்டு வந்து செத்த எலியை அடிக்கத் தொடங்கினான். கிழவி திகைத்துப் போய்விட்டாள். சின்னவள் அண்ணனை ஏசினாள்.

"அண்ணைக்கு விசரோ? செத்த எலியை போட்டு ஏன் அடிக்கிறாய்?"

இருவரும் அவனிடமிருந்து தடியைப் பறித்து எறிவதற்கு இடையில் எலி சக்கையாகிவிட்டது.

அவன் விறைத்தபடி நின்றான் கண் முன்னே எலி மறைந்து அப்பா, அம்மாவினது உடைந்த படங்கள் தோன்றி மறைந்தன.

சில நிமிடங்களில் எல்லாம் வழமைக்கு வந்தன. அவனுக்குப் பிறகு கவலையாகிவிட்டது.

'அட! எலியைக் கொண்டுபோய் வாத்தியாரிடம் கொடுத்திருக்கலாம். உடன வந்த ஆத்திரத்தில எல்லாத்தையும் மறந்து போனன். எனி எலி பொறியுக்க அடிபடும்வரைக்கும் பார்த்துக் கொண்டு இருக்க வேணும்.... சே...?

அவன் பெரிதாய் அலுத்துக் கொண்டான்.

இந்த அமளியில் சின்னவள் பள்ளிக்கூடம் போவதை ஞாபகப்படுத்த இருவரும் விழுந்தடித்து பள்ளிக்கூடம் ஓடினர். இரண்டு நாள்கள் கழிய அவன் எதிர்பார்த்தபடி எலியொன்று பொறியில் அடிபட்டுச் செத்துக் கிடந்தது.

அவனுக்கு ஒரே சந்தோசம். அவன் அன்று எலியை வாத்தியாரிடம் கொண்டு போய்க் கொடுத்துவிட அவர் ஆய்வு கூடத்தில் வைத்து விட்டார். பின்னேரம் பள்ளிக்கூடம் முடிய மாணவர்களை வீட்டுக்குபோகாமல் ஆய்வு கூடம் வரும்படி அவனிடம் சொல்லி விட்டார்.

அவன் ஒரே சந்தோஷத்தில் மிதந்தான்.

மாணவர்கள் எல்லோரும் ஆய்வு கூடத்தில் குழுமியிருந்தார்கள். அவர்களின் மத்தியில் வாத்தியார் இருந்தார். அவர் முன் மேசை மேல் இருந்த பாத்திரத்திலுள்ள திரவத்தில் எலி மல்லாந்து கிடந்தது. அதன் நான்கு கால்களும் நன்றாக இழுக்கப்பட்டு ஊசியால் குத்தப்பட்டு இருக்க, வாத்தியார் தோல் மேற்புறத்தில் மெல்லியதாக வெட்டத் தொடங்கினார்.

அவன் ஒரு விதமான வெற்றிக் களிப்புடன் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கும் எலியை பார்த்தான்.

"என்ன மாதிரிவீட்டில இருந்து கூத்தடிக்கிறவர் இப்ப கிடையாக கிடக்கிறார். வாத்தியார் நல்லாய் வெட்டுங்கோ. உவருக்கு உது தான் சரி"

அவன் வாய் மகிழ்ச்சியில் சும்மா இருக்கவில்லை. தோல் வெட்டப்பட்டு முடிய இப்போது அதன் உட்பாகங்கள் தெளிவாகத்தெரிய வாத்தியார் மாணவர்களுக்கு விளங்கப் படுத்தத் தொடங்கினார்.

அவன் பள்ளிக் கூடம் விட்டு வீடு திரும்பிவந்த போது மனது என்னவோ போல் இருந்தது அவனைக்கண்டு சின்னவள் ஆவலாய் கேட்டாள்.

"அண்ணை, எலியை வெட்டிப் பாத்தனிங்களோ?"

அவன் அவளுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கவில்லை. மனது தீவிரமாக எதனையோ யோசித்துக் கொண்டு இருந்தது.

இந்த நேரத்தில் குசினியில் இருந்து பூனைகத்தும் சத்தம் கேட்டு அவன் திடுக்கிட்டான்.

"ஆச்சிதான் ஒலை பின்னிப் போட்டு வரேக்க பூனைக்குட்டி கொண்டு வந்தவ"

சின்னவள் சொல்லியபடி அவனைக் கூட்டிக்கொண்டு குசினிக்குள் ஓடினாள். பூனை சின்னக் குட்டியாக இல்லாமல் பார்ப்பதற்கு ஓரளவு பெரிதாக இருந்தது. பூனை கயிற்றால் கட்டப்பட்டிருக்க இவர்களைப் பார்த்து "மியா" என்றது.

"அண்ணை இவர் வளர்ந்து வந்தால் எங்கட வீட்டில் ஒரு எலிப் பிள்ளையளும் இருக்க மாட்டினம். எல்லாத்தையும் பிடிச்சு அழிச்சுப் போடும்"

அவளும் சந்தோஷமாக சொல்லிக் கொண்டு போனாள். ஆனால் அவனோ! அதனை கேட்கக் கூடிய மனநிலையில் இருக்கவில்லை. அவளுக்கு அவன் அப்படி இருந்தமை கண்டு ஆச்சரியமாக இருந்தது

"அண்ணைக்கு என்ன நடந்தது?" அவள் மெதுவாக பின் கொட்டிலில் பெட்டி பின்னிக்கொண்டிருந்த கிழவியிடம் விஷயத்தை சொன்னாள். கிழவி விரைந்து அவனிடம் வந்தாள்.

"அப்பு உடம்புக்கு என்ன செய்யுது?"

அவன் சின்னவளை முறைத்துப் பார்த்தான்.

"ஒண்டுமில்லையணை ஆச்சி எனச் சொல்லிக் கொண்டு வலிந்து சிரித்தான். இருந்தாலும் கிழவி அவனில் ஏற்பட்ட மாற்றத்தை உணர்ந்தாள். அவன் ஏதோ யோசித்தவனாக இவர்களின் சந்தேக பார்வையில் இருந்து தப்ப, தனது வழமையான வேலைகளில் ஈடுபடத் தொடங்கினான். இருந்தாலும் அந்தக் காட்சி அவன் முன்னால் அடிக்கடி தோன்றி மறைந்தது...

தோல் எல்லாம் வெட்டி உரிக்கப்பட்டு உடல் உறுப்புக்கள் தெரிய மல்லாந்து கிடந்த எலி.

சில நாள்களில் பூனை பழகி விட்டது. எல்லா இடமும் சுற்றிச் சுற்றி வந்தது. இரவில் வீட்டின் கூரையெல்லாம் ஏறித் திரிந்தது. நித்திரை கொள்ளவில்லை. எலிகள் அதனை இடையில் எதிர்பாராதவிதமாகக் கண்டு ஓடி மறைந்தன. குசினிக்குள் இருந்த உணவுப் பொருள்கள் அப்படியே இருந்தன. பாத்திரங்கள் உருளவில்லை, கண்ணாடிச்சாமான்கள் உடையவில்லை.

மொத்தத்தில் இரவில் நித்திரை சுகமாக, அவனைத் தவிர மற்றவர்கள் கொண்டார்கள். பூனை இன்னும் எலிகளைப் பிடித்துப் பிடித்துச் சாகடித்து, அவர்கள் முன் போட்டுத் தனது வீரத்தை - விசுவாசத்தைக் - காட்டியது.

**சி.கதிர்காமநாதன்**
**தொல்புரம்**

'பார்த்தீர்களா. இனி உங்களுக்குப் பயமில்லை. எலி இனத்தையே நான் அழித்து விடுவேன். நிம்மதியாய் இருங்கள்.' எனச் சொல்வது போல் அவர்களைப் பார்த்து "மியா" எனக் கத்தியது

சில மாதங்களில் எலியின் அட்டகாசம் கொஞ்சம், கொஞ்சமாக அடங்கத் தொடங்கியது. இடையில் உயிரியல் வாத்தியார் ஆய்வு கூடத்துக்கு எலி தேவையெனச் சொல்லி விட்டார். ஆனால் அவனுக்கோ ஓர் எலியைத் தன்னும் பார்க்க ஆசையாக இருந்தது. அவனுக்கு நெஞ்சு வலித்தது.

'கடவுளே எல்லா எலிகளும் அழிந்து விட்டனவா? எலிக்கும் எங்கள் இனத்துக்கும் என்ன வித்தியாசம்? எதனையும் யாரும் எங்களுக்குச் செய்யலாம்; பிடிக்கலாம்; அடிக்கலாம்; வெட்டலாம்; கண்ணுக்கு தெரியாமல் எதனையும் செய்யலாம். கேட்பதற்கு ஒருவருமில்லை; எலிக்கும் இதே நிலைமைதான். பாவம் அதற்கும் எங்கள் நிலை வரவேண்டாம்'

எதிரே கொழுத்து உருண்டு ஓடி வந்த பூனையைப் பிடித்து ஒரு துணிப்பைக்குள் போட்டு அதனை வெளியில் விட அவன் விரைந்து ஓடினான்.

(யாவும் சிந்தனை)

# பெண்களுக்கு சமையல் தெரிந்திருப்பது அவசியமா?

**வசாவிளான். நித்தி.**
மாமியார் மருமகள் ஒற்றுமையாக இருப்ப தில்லை என்கிறார்கள். ஆனால் எனது அய லில் ஒரு மருமகள் ஆசையாகத் தனது மாமி யின் சாதகத்தை ஜோதிடரிடம் கொண்டுபோய் பலன் பார்க்கின்றாரே...?




☺எப்போது முத்தி சித்திக்கும் என் பதை அறியும் ஆசை அது!

❀ ❀ ❀

**கலட்டி. துளசி.**
திருமணம் செய்யும் பெண்ணுக்கு சமை யல் தெரிந்திருக்க வேண்டியது அவசியமா?
☺சமையல் கணவனும் செய்வான். மையல் தெரிந்திருந்தால் போதும்!

❀ ❀ ❀

**நெல்லியடி. சசி.**
பேய்க்குப் பயப்படாதவரும் மனைவிக்குப் பயப்படுகின்றாரே?
☺எதுக்கு வலிமை அதிகம் என்பது இப்போது புரிகின்றதா?

❀ ❀ ❀

**வேலணை. அழகு.**
மனைவி தாய் வீட்டுக்குப் போனதற்காகக் கணவன் சந்தோஷப்படும் காலம் எப்போது வந்தது?

தனியாகச் செல்லும் போது சாதுவாகவும், நண்பர்களுடன் நிற்கும் போது சகலகலாவல் லவனாகவும் விளங்கும் ஆண்கள் குறித்து...?
☺அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. பல கம்பிகள் சேர்ந்து பலமான தூண் எழும்புவதில்லையா?

❀ ❀ ❀

**ஓடக்கரை. றொபின்.**
ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு விட் டுச் செல்லும் ஆண்களை என்ன செய்யலாம்?
☺விட்டு விடாமல் பார்த்துக் கொள்வது பெண்கள் பொறுப்பு!

❀ ❀ ❀

**உரும்பிராய். ரஜனி.**
பின்னலைத் தூக்கி முன்னால் விடும் பெண் கள் குறித்து...?

# வித்துவான் பதில்கள்

☺முன்னால் விடுவதுதான் அவர்க ளுக்கு ஆசை போலும்!

❀ ❀ ❀

**ஊரெழு சாந்தன்.**
குச்சொழுங்கைக் காதல் நிறைவேறுமா?
☺பல சமயங்களில் குச்சொழுங்கைக் குரிய சிறு(நீர்) க(ளி/ழ)ப்புடன் முடிந்து விடும்.

❀ ❀ ❀

**கொழும்பகம். சுந்தரம்.**
தர்ம துவீபம், அதர்ம துவீபம் ஆனது ஏன்?
☺புத்தன் மக்கள், பித்தர்களாக மாறிய தால்!

# குச்சொழுங்கைக் காதல் நிறைவேற வாய்ப்புண்டா?

☺சின்னவீடு நடைமுறைக்கு வந்த காலத்தில்.

❀ ❀ ❀

**கரவெட்டி. குமார்.**
காதலன் மனம் மாறினால்...?
☺காதலி ஏமாறுவாள்!

❀ ❀ ❀

**அல்வாய். வேலு.**
திருக்குறள் பிரசங்கி ஒருவர் கணவன் இல் லாத பெண்ணின் வீட்டுக்கு அடிக்கடி போகி றாரே?
☺படிப்பது சிவபுராணம்; இடிப்பது சிவன் கோவில்!

❀ ❀ ❀

**சங்கானை. வத்சலா.**
ஏலச் சீட்டு நடத்துபவரை திருமணம் செய் தால்...?
☺எதற்கும் முதலாம் முறை, இரண்டாம் முறை, மூன்றாம் முறை என்று அழைத்த பின்னர்தானே ஓய்வார்!

❀ ❀ ❀

**ஊரெழு. சுசீலா.**
மேல் நாட்டுப் பெண்கள் நாற்பதில்தானே திருமணம் செய்கின்றார்கள்?
☺திருமணம்தானே நாற்பதில் நடக் கின்றது!

❀ ❀ ❀

**நீராவியடி. தங்கன்.**
வானொலியில் நடைபெறும் தொலைபேசி நிகழ்ச்சியால் யாருக்கு லாபம்?



☺ரெலிகொம் நிறுவனத்துக்கு!

❀ ❀ ❀

**கலட்டி. கிருஷ்ணன்.**

❀ ❀ ❀

**மானிப்பாய். ரட்ணம்.**
என் காதலி நீச்சல் பழக்கி விடும்படி கோரு கின்றாள். ஆனால் தன்னைத் தொடாமல் என்ற நிபந்தனையுடன். நான் என்ன செய்ய?
☺றப்பர் உறையைப் போட்டுக் கொண்டு பழக்கி விடும். (நான் கிளவு ஸைச் சொன்னேன்.)

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. ஜோ. ஜெ.**
வித்தூ! நீங்கள் யோகியா?



☺இல்லை. போகி!

❀ ❀ ❀

**சுதுமலை. சுபா.**
அரசியல்வாதிகள், நடிகைகள் - ஒற்றுமை என்ன?
☺ஒன்றுமில்லாததை வைத்துக் கொண்டே மயக்கும் வெளிவேடதாரிகள்!

❀ ❀ ❀

**யாழ்.நகர். சுந்தா.**
இலகுவாகப் பணம் சம்பாதிக்கக் குறுக்கு வழி என்ன?
☺போலி லேபலில் தஞ்சம் புகுந்தால் போச்சுது!

❀ ❀ ❀

**குருநகர். ஜீவா.**
பூச்சியத்தில்(0) ஒன்று(1) போகுமா?
☺நீர் கணக்குக் கேட்கவில்லை. கணக்கு விடுகின்றீர்!

❀ ❀ ❀

# 'பெண்மணிகள்' என்று பெண்களை அழைப்பதேன்?

**கனகம்புளியடி. சந்தியா.**
தமிழனுக்கு பேச்சுச் சுதந்திரம் உண்டா?
☺நாட்டில் இல்லை. வீட்டில் பெண் களுக்கு உண்டு.

❀ ❀ ❀

**நல்லூர். ஆனந்தன்.**
காதலர்கள் கடலோரத்தில் படகின் மறை வில் இருந்து காதலிப்பது போல சினிமாவில் காட்டுவது ஏன்?
☺அது குறியீட்டுக் காட்சி போலும். காதல் எனும் படகு கடலில் மூழ்குவதும் உண்டு. கரை சேர்வதும் உண்டு என் பதை விளக்கும் உத்தியோ?

❀ ❀ ❀

**அரசடி. சுதாகரன்.**
திறமைக்கும் அதிர்ஷ்டத்துக்கும் என்ன வித் தியாசம்?
☺திறமை - காசோலை. அதிர்ஷ்டம்- சுவிப் டிக்கெற். வலுவுள்ள காசோலையும் வாய்ப்புள்ள சுவிப் டிக்கெற்றும் காசாகி விடும்.

❀ ❀ ❀

**கொக்குவில். பரன்.**
காதலர்கள் செஸ் விளையாடலாமா?
☺திருமணம் முடிந்து விட்டால் 'க்' கும் சேர்த்துக் கொள்ளலாம்.

❀ ❀ ❀

**அளவெட்டி. ஷண்.**
காதலியுடன் நெருங்கிப் பழகலாமா?
☺இப்போது கண்டோஸ் வாங்கிக் கொடுக்கும் நீர், பின்னர் மாங்காய் வாங் கிக் கொடுக்க வேண்டி இருக்கும்.

❀ ❀ ❀

**உடுவில். ஷா.**
சிலர் ஒரே நேரத்தில் இரண்டு தாரங்களை நாடுகின்றார்களே?



☺மதில் மேல் பூனைகள்.. சீதனம் கூடிய பக்கத்திற்குக் குதிப்பார்கள்!

❀ ❀ ❀

**நெல்லியடி. ஹரிதன்.**
இந்தியாவில் ஒரு சாமியார், 'பெண்ணாசை யைப் பெண் மூலம்தான் வெல்ல முடியும்' என்கின்றாரே?
☺முள்ளை முள்ளால் எடுக்கும் முயற்சி!

❀ ❀ ❀

**சண்டிலிப்பாய். டேமியன்.**
ஓட்டல் சாப்பாடு நல்லதா?
☺நீர் எந்தச் சாப்பாட்டைக் கேட்கின் றீர்?

❀ ❀ ❀

**வட்டுக்கோட்டை. சுசிலா.**
எனது கணவர் வேறு இடம் நாடுகின்றாரே?
☺அவர் வெளவால் ஜாதி போலும். அது தான் இலுப்பம் பழமும் சாப்பிடும்; வேப்பம் பழமும் சாப்பிடும்.

❀ ❀ ❀

**சாவகச்சேரி. அருணா.**
பெண்ணுக்கு அழகு தருவது எது?
☺கண்ணுக்கு விருந்தாவது எதுவோ அது!

❀ ❀ ❀

**நல்லூர். மோகன்.**
சத்திர சிகிச்சை சில சமயங்களில் தோல் வியில் முடிகின்றதே?
☺அறுவை வெற்றி: ஆள் 'அவுட்'!

❀ ❀ ❀

**அல்வாய். வாசு.**
கனிக்கும் கன்னிக்கும் என்ன வித்தியாசம்?
☺கன்னி கனியைச் சுவைப்பாள். காத லன் இரண்டையும் சுவைப்பான்.

❀ ❀ ❀

**இணுவில். மது.**
ஊர் மாடு சவாரிக்கு உதவுமா?
☺வண்டியில் பூட்டி ஓட்டினால்தானே தெரியும் வண்டவாளம்!

❀ ❀ ❀

**சீரணி. முரளி.**
திருமணம் ஒரு பேய்க்காட்டா?
☺பேய்க்காட்டு அல்ல; பேய்க்கட்டு! (பேயைக் கட்டுதல்)

❀ ❀ ❀

**நாவற்குழி. சீராளன்.**
பெண்களை, 'பெண்மணிகள்' என்று குறிப் பிடுவது ஏன்?



☺எந்த நேரமும் சப்தமிட்டு ஒலித்துக் கொண்டிருப்பதால்.

❀ ❀ ❀

**வண்ணை. பிரசாந்தன்.**
மீசை நரைத்த பின்னரும் காதலிக்கின்றார் களே?
☺ஆசை நரைக்கவில்லைப் போலும்!

❀ ❀ ❀

**ஓடக்கரை. றொபி.**
கண்ட பெண்ணைக் காலிப்பவர் குறித்து...?
☺காணாததைக் கண்டிருப்பார்!

❀ ❀ ❀

**சங்கானை. துஷி.**
மோனை வித்தூ! 'கரம்' ஆடிய அனுபவம் உண்டா?
☺முன்னர் உண்டு; இப்போது (சதுர) அங்கம்தான் ஆட்டம்.

❀ ❀ ❀

**கரவெட்டி. உமா.**
வயதில் இளையவரைக் கைப்பிடிக்க லாமா?
☺அவர் வேறுயாரையும் கைப்பிடிக்கும் அளவுக்கு நீர் கையாலாகாதவராக இல்லா விட்டால் சரி.

❀ ❀ ❀

**தட்டாதெரு. சங்கர்.**
தமது பேனையால் சமூகத்தைத் திருத் தும் வித்தகர்களும் இருக்கிறார்கள். அதே நேரம் உம்மைப்போல் சமூகத்தைச் சீரழிக்கும் வித்துவான்களும் இருக்கிறார்களே?
☺ஆவதும் Penஆல், அழிவதும் Pen ஆல் என்பதும் இதைத்தானோ!

❀ ❀ ❀

**சண்டிலிப்பாய். தாஸ்.**
வித்துவானே! நீர் நல்ல ஓட்ட வீரனாமே!



☺ஓட்டத்தில் மட்டுமல்ல; படிக்கும் காலத்தில் ஆட்ட வீரனும் கூட - குறிப் பாகத் துடுப்பாட்டத்தில்!

## இவ்வார ஜோக்

சிறிய கூட்டல், கழித்தலைக் கேட் டாலும் கைவிரலை மடக்கி எண்ணிப் பார்க்கத் தொடங்கி விடுவான் அச் சிறுவன். அவனைக் கைவிரலை எண் ணாமல் மனதினுள் கணக்குப் பார்க்க வைப்பதற்கு பல தடவைகள் தான் எடுத்த முயற்சி பலிக்காததால் டீச்சர் சலித்துப் போய்விட்டார். ஒரு நாள் கோபம் எல்லை மீறிவிட்டது. சிறுவனை முன்னால் அழைத்தார் டீச்சர்.

"கை இரண்டையும் காற்சட்டையின் 'சைட்' பொக்கற்றுக்குள் வை. கணக் குக்கு விடை கூறி முடியும் வரை பொக் கற்றுக்குள் இருந்து கை எடுக்கக் கூடாது" என்று உத்தரவிட்டார். சிறு வனும் பொக்கற்றுக்குள் கையை வைத் துவிட்டு கணக்குக்குக் காத்திருந்தான்.

"சரி. இப்போது கூறு. ஐந்தும் ஐந்தும் எத்தனை?"

பொக்கற்றுக்குள் சிறுவனின் கை விரல் அசைந்தது. உள்ளே கைவிரல் இருக்கத்தக்கதாக சிறுவன் விரல்களை எண்ணத் தொடங்கினான். முடிந்ததும் படீரென பதில் சொன்னான்.

"பதினொன்று!"

# நோர்வேயில் பேச்சுத் தொடங்கு முன்னர் புலிகள் மீதான தடையை அரசு நீக்குமா?

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - என்ற பாரதியின் கவிதை வரிகளைப் போல, இலங்கையில் இப்போது எல்லோர் வாயிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சாகவே உள்ளது. தமிழர்கள் மத்தியிலும் சரி சிங்களவர்கள் மத்தியிலும் சரி, உத்தேச சமாதானப் பேச்சுக்கள் வெற்றி அடைந்துவிட வேண்டும் என்ற விருப்பமே மேலோங்கி நிற்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் எவ்வாறு அமையும்? தடங்கல்கள், தடைகள் இல்லாமல் நீதியான ஒரு தீர்வு 'எட்டப்படுமா' என்பது பொது மக்கள் மனங்களில் அலைமோதும் கேள்வியாகி உள்ளது. மொத்தத்தில் அரசியல்வாதிகள் தொடக்கம் சாதாரண வேலையாள் வரை எல்லோரின் கவனமும் அக்கறையும் இப்போது சமாதானப் பேச்சுக்கள் மீதே குவிந்துள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதாயின் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும் என்பதனை இப்போது அரசாங்கம் உட்பட (ஒரு சிறுதரப்பினர் தவிர) எல்லோரும் உணர்ந்துள்ளனர்; ஒப்புக்கொண்டுள்ளனர். இது ஒரு வகையில் முன்னேற்றமான நிலையே.

விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டு, ஏனைய தரப்பாருடன் கலந்தாலோசித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கொண்டு வரப்போவதாக நாட்டின் தலைவியான ஜனாதிபதியே கூறிவந்தார். விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்கிய பின்னரே, அரசியல் தீர்வு சாத்தியம் என்று சாத்திரம் கூறிய அமைச்சர்களும் உளர்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது. போரில் வெற்றி காண்பது என்பது இயலாத காரியம். அரசியல் தீர்வே கைகண்ட மருந்து என்ற மனநிலைக்கு அனேகமாக இலங்கையர்கள் எல்லோருமே இப்போது வந்திருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் அரசியல் தீர்வில் நம்பிக்கை இல்லாதவர்கள். இராணுவத்தீர்வின் மூலம் தனிநாடு ஒன்றை நிறுவுவதே அவர்களின் இலக்கு. சமாதானப்பேச்சு என்று வந்தாலும் அதனை இடையில் குழப்பிவிட்டு மீண்டும் போர்க்களத்தையே நாடுவர். பேச்சுவார்த்தைக் காலத்தை தம்மைப் பலப்படுத்தும் வாய்ப்புடைகாலமாகப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் சண்டைக்கு வருவார்கள். பல சந்தர்ப்பங்களில் இதுவே அனுபவம். ஆகையால் அவர்களை நம்பமுடியாது. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனம் அடையச் செய்தாலே அவர்களைப் பேச்சு வார்த்தையமேசைக்குக் கொண்டு வரலாம் - என்பது கடந்த ஐந்து வருடங்களாக அரசாங்கத்தின் மாறாத கருத்தாக இருந்தது. அதனைத் தம்முடன் வைத்திருக்காமல் வெளி நாடுகளுக்குப் பிரசாரப்படுத்தி சர்வதேச நாடுகளில் பிரபல்யப்படுத்திய பெருமையும் அரசாங்கத்தைச் சார்ந்ததே.

விடுதலைப் புலிகள் தமது மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறுவது சுத்தப் பொய். அவர்கள் பயங்கரவாதிகள். நாட்டில் வன்செயல்களை நடத்தியும் தூண்டியும் ஆயுதப் போராட்டத்தைத் தொடரவே விரும்புகிறார்கள். அவர்களிடம் அரசியல் தலைமைத்துவம் இல்லை. அவ்வாறிருக்க அவர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் எப்படி நாட்டம் வரும். விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழிக்கவே அரசாங்கம் போர் நடத்துகிறது. தமிழ் மக்களுக்கு எதிராகவல்ல. தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் பயங்கரவாதப் பிடியிலிருந்து விடுவிக்கவே அரசாங்கம் போரை நடத்தி வருகிறது. ஆகவே வெளிநாடுகள் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு உதவவேண்டும்; உதவிகள் வழங்க வேண்டும் - என்று பிரசாரம் செய்ததும் அரசாங்கம் தான்.

இவ்வாறெல்லாம் கூறிய அரசு விடுதலைப் புலிகளுடன் எந்த முகத்துடன் பேச்சு நடத்தப் போகிறது? தங்களைத் தூற்றிப் பிரசாரம் செய்யும் அரசுடன் பேச்சு நடத்துவதற்கு விடுதலைப் புலிகளுக்கு எங்ஙனம் விருப்பம் வரும்? ஆகையால் அரசு - புலிகள் பேச்சுவார்த்தை என்பது ஆசைக்குச் சொல்லிப்பார்க்கும் உதட்டளவிலான வாசகமாகவே அமையும் என்று கருதப்பட்டது.

மேலும், அரசாங்கமும் சரி, விடுதலைப் புலிகளும் சரி மற்றத் தரப்பு மீது வெறுப்பும் பகைமையும் கொண்டிருந்தனவே அன்றி நல்லுறவோ நம்பிக்கையோ சகத்துக்கேனும் இல்லை. அவ்வாறிருக்க, விடுதலைப் புலிகளுடன் பேசுவதாயினும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்த முடியாது. நேரடிப் பேச்சு மட்டுமே நடத்த முடியும் என்று சந்திரிகா அரசு ஒரு கூட்டத்தில் "கெச்சிதம்" பேசியது.

விடுதலைப் புலிகளை ஓரங்கட்டுவது முதல் மூன்றாந்தரப்பின் உதவியின்றிப் பேச்சு நடத்துவது என்ற அழுங்குப்பிடி வரை, எல்லாமே தளர்ந்த நிலையில், அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்ற யதார்த்தபூர்வமான செயற்பாட்டுக்கு இறங்கி வந்திருப்பதாகத் தோன்றுகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில், நோர்வே நாடு இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டு இந்நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் பணியில்உதவ முன்வந்துள்ளது. இதன் பொருட்டு, முதலில் லண்டனில் உள்ள, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து விரிவாக ஆலோசனை கலந்த பின்னர், இம்மாதம் பதினாறாம் திகதி நோர்வே

## சுமுகநிலையை தோற்றுவிக்கும் வொலிபெக்கின் யோசனை ஏற்பு

வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக் கொழும்பு வந்து ஜனாதிபதி சந்திரிகாவுடனும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடனும் பேச்சு நடத்திவிட்டு அன்றையதினமே திரும்பிவிட்டார். ஜனாதிபதியுடன் அவர் நான்கு மணிநேரமாக நடத்திய பேச்சுக்களின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களில் ஒரு சில அம்சங்களே உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன.

அரசு-விடுதலைப் புலிகள் பேச்சுக்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன. அவற்றை விடுதலைப் புலிகள் தரப்புடன் கலந்தாலோசிக்க வொலேபெக் லண்டன் செல்வார் என்பது தகவல்.

நோர்வே அமைச்சர் இம்மாதம் பன்னிரண்டாம் திகதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்த போது, பேச்சுவார்த்தைக்கு முன்னர் வடக்கு-கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டதாகவும் அது விடயம் ஜனாதிபதியிடம் எடுத்துச் சொல்லப்பட்டதாகவும் இன்னொரு தகவல்.

இயல்பு நிலை தோற்றுவிக்கப்படுவது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை ஜனாதிபதி நோர்வே அமைச்சரிடம் கூறியுள்ளார் என்றும் அதனையும் அமைச்சர் வொலேபெக் லண்டனில் பாலசிங்கத்துடன் கலந்துரையாடுவார் என்றும் இப்போது அறிய வந்துள்ளது.

இத்தகைய தகவல்களின் பின்னணியிலேயே நோர்வே அமைச்சரின் முதலாவது கொழும்பு விஜயம் அல்லது கொழும்புப்பேச்சு அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஒரு நல்ல ஆரம்பம் என கணிக்கப்பட்டது.

இதனைவிட ஒரு படி மேலே சென்று அரசாங்கத்தின் அமைச்சரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நோர்வேயின் 'அனுசரணையை ஒரு திருப்புமுனை என்று வர்ணித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போதே அமைச்சர் பீரிஸ் நோர்வேயின் முயற்சி வெற்றி பெறும் என்று நம்பிக்கை வெளியிட்டியிருக்கிறார்.

நோர்வே அமைச்சரை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்தபோது அரசாங்கத் தீர்வுப்பொதியின் சிருஷ்டிகர்த்தா என வர்ணிக்கப்படும் பேராசிரியர் பீரிஸ் உடன் இருக்கவில்லை என்பது அரசியல் அவதானிகளால் "ஒரு விதமாக" பார்க்கப்பட்டது.

எனினும் ஜனாதிபதி தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்து அமைச்சரவைக்கு அன்றைய தினமே முழுக்க விளக்கம் அளித்திருந்தார். அப்போது நோர்வே அமைச்சர் வொலேபெக்குடன் ஆராயப்பட்ட அரசு-புலிகள் பேச்சுக்கான வழிமுறைகள் (Modalities) குறித்தும் ஜனாதிபதி விவரித்தார் என்று அறியப்படுகிறது.

ஆகையால அமைச்சர் பீரிஸ் விஷயம் தெரிந்தே வெளிநாட்டு செய்தியாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போது கருத்து வெளியிட்டிருப்பார்.

"நோர்வே மேற்கொண்டுள்ள அரசு - புலிகள் பேச்சுக்கான முயற்சி சரியான பாதையில் கால் பதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுக்களில் சமாதானத் திசையில் கணிசமான முன்னேற்றம் உண்டாகும் என நம்புகிறோம். இது விடயத்தில் ஊக்கமளிக்கக் கூடிய சமிக்ஞைகள் தென்படுகின்றன"- இப்படி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தம்மை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்திருந்த நாளில் ( இம்மாதம் 22 ஆம் திகதி) சந்திக்காமல் இருந்தது குறித்துப் பிரஸ்தாபித்த அமைச்சர் பீரிஸ், அதனை வயிற்றில் தற்காலிகமாக வரும் இரைச்சலுக்கு ஒப்பிட்டு இருக்கிறார். ஐ.தே. கட்சியுடன் அரசாங்கம் பேசியே தீரும் என்ற தொனியில் அவர் கருத்து வெளியிட்டார்.

### ஐ.தே.கவுடன் இணக்கம் காண முயற்சி

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும். இதுவிடயத்தில் அரசாங்கம் மிகவும் அக்கறையாக உள்ளது என்பதனையும் அமைச்சர் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் 1997 ஆலோசனைகளில் பெரும்பகுதியை ஐக்கியதேசியக்கட்சி ஏற்றுக் கொண்டுவிட்டதால் இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கநிலை உருவாகுவதில் கஷ்டமிருக்காது என்று அமைச்சர் பீரிஸ் கருதுகிறார்.

அதுபோலவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களின் போது, அதிகாரப் பரவல் எந்தளவுக்கு அமையவேண்டும் என்பதிலேயே பெரிய சிக்கல் இருக்கும் என்று அமைச்சர் மதிப்பிடுகிறார்.

தமிழர்களை ஒரு தேசமாக அங்கீகரிக்க வேண்டும்; தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் குறித்து அமைச்சர் தெரிவித்த கருத்தும் சற்றுப் பிரகாசமானதாகவே உள்ளது.

அவர்களின் கோரிக்கைகள் எதுவாயினும் அவை இறுதியில் அரசமைப்புச் சட்டத்தில் ஏதோ ஒருவகையில் பிரதிபலிக்கப்பட வேண்டும். அரசமைப்பினில் உத்தரவாதம் செய்யப்பட்ட அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதே அரசாங்கத்தின் இலக்கு. ஆதலால் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை அரசு ஆக்கபூர்வமாகப் பரிசீலிக்கும் என்ற தொனியில் அமைச்சர் கருத்துக் கூறியுள்ளார்.

இதனடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் இம்முறை பேச்சுக்களை இடையில் குழப்பமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் அவரிடம் பிறந்துள்ளது. சுரங்கத்தின் (இருளின்) தொங்கலில் வெளிச்சம் தெரிகிறது. அது எமக்குத் தெரியக்கூடிய தூரத்திலேயே உள்ளது. அவ்வாறு தெரிவதனால் (சமாதானப்) பறவை கைக்குக் கிடைத்துவிட்டது என்பதல்ல - என்ற அவரது கருத்து எவரையும் நம்பிக்கை கொள்ள வைப்பதாக உள்ளது.

எனினும் வெற்றி நழுவிவிடக்கூடாது என்பதனை நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். வெற்றி கைநழுவி விடுமானால் அது பெரும் தேசிய பெருவிபத்து ஆகிவிடும் என்றும் அமைச்சர் எச்சரித்திருத்திருக்கிறார்.

### 2 வாரங்களில் ஒஸ்லோவில்?

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்குரிய ஆரம்ப ஏற்பாடுகள் பூர்த்தியானதும் அனேகமாக ஆகக்கூடியது இரண்டு வாரங்களில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் முதற்கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் ஆருடம் கூறுகின்றன.

அதற்கு முன்னர், பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை, வடக்கு -கிழக்கில் சுமுக நிலையை உருவாக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் யோசனையை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு இலகுவானதல்ல. எடுத்த எடுப்பில் செயற்படுத்தக் கூடியதல்ல என்றெல்லாம் சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்கிடையில் நோர்வே அமைச்சர் தெரிவித்த யோசனைகள் ஆக்கபூர்வமானவை. அரசு அவற்றை முன்னெடுக்கும் என்று அமைச்சர் அலவியெளலானா கருத்துக் கூறியுள்ளார்.

எவ்வாறெனினும் நோர்வே அமைச்சர் நட் வொலேபெக் தமது கொழும்பு விஜயத்தின் போது கூறியது போல, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பணி கடினமானது. எனினும் குறிப்பிடுமளவுக்குச் சாதகமான சூழ்நிலை தெரிகிறது. முழுமையான தீர்வை எட்டுவதற்கு நீண்டகாலம் செல்லும் - என்பது உண்மையே.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர், தமிழீழவிடுதலைப் புலிகள் மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்க வேண்டிய தேவை உருவாகும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். தானே தடைசெய்த அமைப்புடன் அரசாங்கம் எவ்வாறு பேசமுடியும் என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதிலும், அதன் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதிலும் இதய சுத்தியுடன் செயற்படுமானால், விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கவேண்டும். அப்போதே அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கை உண்டாகும் - என்று தமிழ் அரசியல்வாதி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்தியாவும் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடை விதித்துள்ளது. அமெரிக்காவோ தனது சர்வதேசப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சேர்த்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் நோர்வே உதவ முன்வந்திருப்பதனை இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் (உத்தியோகபூர்வமாக அன்றி) மறைமுகமாக ஆதரிப்பதாக நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாம் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்ற உணர்வுடன் விடுதலைப் புலிகள் கூனிக்குறுகிய மனதுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதைத் தவிர்க்கும் முகமாக, இந்தியாவும், அமெரிக்காவும் விதித்த தடைகளை நீக்க முன்வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகிறது.

எதற்கும் இலங்கை அரசாங்கமே முதலில் பூனைக்கு (புலிகளுக்கு) மணிகட்ட வேண்டும். அதனைப் பார்த்து இந்தியாவும் அமெரிக்காவும் பின்தொடரக்கூடும் அல்லவா?

### இந்தியாவுக்கு தகவல்

இதேவேளை, விடுதலைப் புலிகளுடன் தான் நடத்தும் பேச்சுவார்த்தை விவரங்களை இலங்கை அரசாங்கம் அவ்வப்போது இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தும் என்று அறியவந்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விவகாரம் இந்தியாவுக்கும், ஏதோ ஒரு விதத்தில் பங்கு இருக்கிறது என்று கொழும்பு அரசு கருதுவதாலேயே இத்தகைய முடிவுக்கு வந்திருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

1987இல் அப்போதைய இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிட்டு, பின்னர் விலகிப்போய், இப்போது அமைதியாக இருந்து அவதானித்து வருகிறது. இன விவகாரத்தில் நேரடியாக வந்து தொடுவதற்கு விரும்பாவிடினும், அவ்வப்போது மறைமுகமான வடிவில், திரைக்குப் பின்னால் நின்று இலங்கை அரசுக்கு இந்தியா அறிவுறுத்தல், அழுத்தங்களைப் போடுவதாக அரசியல் வட்டாரங்களில் "சமாச்சாரங்கள்" பேசப்படுவது உண்டு.

இலங்கைத் தமிழர்கள் அடிமைகளாகவோ, இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ நடத்தப்படுவதைத் தமிழக மக்கள் விரும்பவில்லை. அதே போன்று ஈழத் தமிழர்கள் தமிழகத்தை- இந்தியாவை - தமது நட்பு நாடாகக் கருதுகிறார்கள். அந்த நாட்டுடனான உறவுகளை நிறுத்திவிடும் எண்ணமோ, பகைமை உணர்வோ ஈழத் தமிழ் மக்களிடம் இருந்ததில்லை. அங்கு அரசியல் தலைவர்கள் மாறலாம், ஆட்சிகள் மாறலாம். ஆனால் தமது இரத்தத்தின் இரத்தங்களான தமிழக மக்களின் ஆதரவுக் கரம் சோர்ந்துவிடாது என்ற நம்பிக்கையே இங்கு எப்போதும் மேலோங்கி நிற்கிறது.

ஈழத்தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும், நலன்கள் பேணப்பட வேண்டும் என்பதில் கரிசனையும் அக்கறையும் உள்ள தலைவர்கள் இன்றைய இந்திய அரசாங்கத்தில் உள்ளார்கள். இத்தகைய பின்னணியில் தமிழர் பிரச்சினையைக் கொழும்பு அரசு எவ்வாறு அணுகுகிறது என்பதனை இந்தியா கூர்ந்து அவதானிக்காமல் இருக்காது.

இதனை உணர்ந்து இலங்கை அரசு செயற்பட முன்வந்திருப்பது ஓர் ஆரோக்கியமான அரசியல் பின்னனியைத் தோற்றுவிக்கும், இந்தப் பின்னணி பேச்சுவார்த்தைகள் வெற்றிக்கான உதவியாக இருக்கும் என்று நம்புவதற்கு இடந்தந்துள்ளது. அயல்நாடான இந்தியாவை "மேவாமல்" இன்னொரு நாட்டின் உதவியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது புத்திசாலித்தனமல்ல என்று கொழும்பு சிந்தித்து இருப்பது விவேகமானதே. இலங்கையின் வெளிவிவகாரத்தில் இந்தியக் காரணியை புறந்தள்ளிவிட முடியாது என்பதனை உணர்ந்திருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

# தம்பிக்கோர் 8 வரி

தம்பிக்கோ ரெட்டுவரி, தாயகத்தார் போடும் வரி
தும்பளவே யானாலுந் தூண்துளைக்கும் -
அம்புவரி
வம்புசெறி வாயர்தம் வாலறுக்க வல்லவரி
கம்பியெண்ண அஞ்சா வரி

ஆயுதங் கையளித்தல், ஆளு முரிமையிலாத்
தாயகக் கோளிழத்தல், ஆயபல - நேயமற்ற
வாயடக்கும் வார்தங்கள் வாராத பேச்சுக்கே
தாயகத்தா ரீவர் தமை.

ஆயுதங் கையளித்தால் அக்கணமே நாமிங்கு
பேயிடஞ் சிக்கிய பிச்சாண்டி - வாயுடன்
நாயினுங் கேடாய் நசுங்கி நலியுமோர்
நோயுற்ற நொண்டிகளா வோம்

- அங்குசன்

## நல்ல நீதி..................

நீங்கள் தண்ணீர் குடத்தைச் சுமந்து கொண்டு நிற்கிறீர்கள். அதைக் கொஞ்சம் கீழே இறக்கி வையுங்கள். அதன் பிறகு நிதானமாக நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்!" என்று இவர்கள் இருவரும் கூறினார்கள்.

அதற்கு அந்த நீதிபதி சொன்னார்:-

"இது மக்கள் நடந்து போகும் நடைபாதை. அதனால் நான் வைத்திருக்கும் குடத்தை இங்கே இறக்கி வைத்து... இந்த வழியாகப் போகும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் கொடுக்க விரும்பில்லை. ஆதலால் இந்தக் குடம் என்னிடமே இருக்கட்டும். நீங்கள் உங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள்!" என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் இவர்கள் இருவரும், "சரி, ஐயா... நாங்கள் போய் வருகிறோம்" என்று கூறியபடியே புறப்பட்டார்கள்!

"என்னங்க இது... உங்கள் பிரச்சினை என்ன என்று இன்னும் நீங்கள் என்னிடம் சொல்லவில்லை... அதற்கு நான் தீர்ப்பும் சொல்லவில்லை. அதற்குள் புறப்பட்டு விட்டீர்களே!" என்று நீதிபதி வினவினார்.

"நீங்கள் தீர்ப்பு கூறிவிட்டீர்கள். அதனால்தான் நாங்கள் புறப்பட்டோம்!" என்றார்கள் இவர்கள்.

உண்மைதானே!

தன் கையில் இருக்கும் தண்ணீர் குடத்தையே தரையில் வைக்க விரும்பாத அவர், நடைபாதையில் குடிசை போடுவதை எப்படி "சரி" என்று ஒப்புக்கொள்வார்?

அந்த ஆள் நீதிபதிக்கு நன்றி சொல்லி விட்டு.... தன் நண்பனிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டானாம்!

'நீதியரசர்' என்று நாம் சொல்கிறோம் அல்லவா? அதற்கு நல்ல ஓர் உதாரணம் நீதிபதி ஹம்மாஸ்!

- தென்கச்சி சுவாமிநாதன் -

## பீஜித்தீவு........

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மேலே வருவதைக் காணலாம். இதற்கும் விஞ்ஞான விளக்கமில்லை. (பீஜித் தீவுக்கூட்டக் கடலாமைகள் சங்கீதப்பிரியர்கள் போலும்? குசினியிலுள்ள மனைவியை இங்கு னம் கூவியழைக்க முடியவில்லையே என்ற ஏக்கம் எனக்கு!!)

### விலக்கு (TABOO)

"ராபூ" என்ற சொல் போலினேசிய மொழிக்குரியதாகும். இதை ஐரோப்பியர்கள் கடன் பெற்றதுமல்லாமல் தங்கள் அகராதிகளிலும் சேர்த்துக்கொண்டுள்ளனர்; இதன் கருத்து தடுக்கப்பட்டது அல்லது விலக்கப்பட்டது அல்லது தீண்டத்தகாதது என்பதாகும். பீஜித் தீவுக் கடல்களில் நெடிய உணர்கொம்புகளை உடைய ஒரு வகைச் சிவப்பு இறால்கள் உண்டு. பீஜியர்கள் இவற்றைப் பிடிப்பதில்லை; பிடிபட்டால் கொல்லமாட்டார்கள்; உயிர் போனாலும் உணவாகக் கொள்ள மாட்டார்கள். இவ்வகை இறால்கள் புனிதமானவையாக, பூஜிக்கத்தக்கவையாக கருதப்படுகின்றன; இவற்றின் பிரகாசமான சிவப்பு நிறம் இதற்குக் காரணமாகவிருக்கலாம்.

## 'சிறுவர்சுடர்' விடைகள்

XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர் சுடர்' பகுதிக்கான விடைகள் வருமாறு:-

### அடுத்தது எது?

C

### பொருந்தாதது எது?

D

### ஆடு வாங்கிய விவசாயி

90 ஆட்டுக்குட்டிகள், 9 மறிஆடுகள், 1 கடா ஆடு.

### எத்தனை பேர்?

நானும் எனது நண்பனுமாக இரண்டு பேர் மட்டும். மற்றவர்கள் எதிரில் அல்லவா வந்து கொண்டிருந்தார்கள்?

### சொற்களை எழுதுங்கள்

பொருதா, ஏமாற, யாழ்பா, கடக, கருமி.

## ரி. விக்கள் திருடும் குழந்தைப்..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு அவற்றை நிஜத்தில் விளையாடுவதில் ஆர்வமில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மேலும் டி.வியில் விளையாட்டுக்களைப் பார்க்க விரும்பும் இவர்கள், நிஜமான விளையாட்டரங்கங்களிலும் விளையாட்டை ரசிக்க விரும்புவதில்லை.

தொலைக்காட்சியில் குழந்தைகள் விரும்பி ரசிக்கும் ஒரு விஷயம் விளம்பரங்கள். மொத்த மக்கள் தொகையில் கிட்டத்தட்ட முப்பது சத விகிதம் பேர் 20 வயதுக்குள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது மட்டுமல்ல, மத்தியதர வர்க்கத்தைப் பொறுத்த அளவில் பொருள்கள் வாங்குவதைத் தீர்மானிப்பதில் குழந்தைகளின் பங்கும் கணிசமாக உள்ளது. இது விளம்பர நிறுவனங்களுக்கும் தெரியும் எனவே குழந்தைகளுக்காக வரும் விளம்பரங்கள் தவிர பெரும்பாலான விளம்பரங்கள், வாங்கும் அல்லது வாங்க வைக்கக் கூடிய சக்தியைக் கொண்ட குழந்தைகளை மனதில் கொண்டுதான் தயாரிக்கப்படுகின்றன. விளம்பரங்கள் குழந்தைகள் மனதில் ஏற்படுத்தும் மதிப்பீடுகள் ஒருபுறமிருக்க குழந்தையையும் ஒரு நுகர்வோனாக மாற்றிவிடுகின்றன. இவ்விளம்பரங்கள் தேவையோ, தேவையில்லையோ தொடர்ந்து பொருள்களை வாங்கிக்கொண்டே இருக்கவேண்டும் எனும் நுகர்வோர் மனநிலையைக் குழந்தைகள் மனதில் இவ்விளம்பரங்கள் ஏற்படுத்துகின்றன.

இவ்விளம்பர பிம்பங்களின் மூலமாகவே ஆண் - பெண் சமூக வேறுபாடுகளை, அந்தஸ்து வேறுபாடுகள் மிக இயல்பான ஒன்றாக, சமூக யதார்த்தம் போலக் குழந்தைகள் மனதுள் புகுத்தி விடுகிறார்கள். உதாரணமாக 'டி வீலர்' என்பது 'மன் ஏஜ்' சிறுவனைப் பொறுத்த அளவில் ஆனந்தமான த்ரில் தரக்கூடிய சவாரி அனுபவம். அந்தச் சவாரியின்போது அவன் சாகசங்கள் நிகழ்த்துகிறான். அவனது ஆண்மை நிரூபிக்கப்பட்டு, பெண்கள் அவனுக்காகக் காத்திருக்கிறார்கள். பெண்ணுக்கோ, ஆண்களின் தொல்லைகளிலிருந்து தப்பித்து ஓடக்கூடிய ஒரு கருவி. இப்படிப்பட்ட பிம்ப அமைப்புகள் இளம் வயதிலேயே ஆண் உசத்தி, பெண்மட்டம் போன்ற கருத்துக்களைத் தூவிவிடுகின்றன.

குழந்தைகள்களைக் கவருவதற்காகவும் குழந்தைகளை வைத்துப் பெற்றோர்களைக் கவருவதற்காகவும் நிறைய விளம்பரங்களில் குழந்தைகளே நடிக்கின்றனர். குழந்தைகளை உபயோகிக்கும் விளம்பரங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். விளம்பரங்களில் தோன்றும் குழந்தைகள் பார்க்கும் குழந்தைகளைத் தூண்டும் பிம்பமாக இயங்குகின்றன. அந்தக் குழந்தையைப் போல் தானும் செய்யவேண்டும் எனும் எண்ணமானது நுகர்வோர் கலாசார அமைப்பின் அங்கமாகக் குழந்தைகளையும் மாற்றி விடுகின்றது.

குழந்தைகளுக்குத் தொலைக்காட்சி செய்யும் மாபெரும் கொடுமை அவர்களது குழந்தைப் பருவத்தை திருடிக்கொள்வதுதான். நகர்ப்புறங்களில் வாழும் குழந்தைகள் எடுத்த எடுப்பிலேயே பெரியவர்கள் உலகில் நுழைந்து விடுகின்றன. மூன்று வயதுக்குழந்தைகூட 'முஸ்தபா' பாடுகிறது. மரத்தைச்சுற்றி ஓடும் ஆணையும் பெண்ணையும் பார்த்து 'லவ் பண்றாங்கப்பா' என்கிறது. இதைச் சாத்தியமாக்கியிருப்பது தொலைக்காட்சிதான்.

அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் குடும்பத் தலைவரைப் பார்த்து 'உங்களுக்குப் பிடித்த நடிகை யார்?' என்றால் மாலை போட்டுக்கொண்டிருக்கும் அந்த நபர் 'ரம்பா' என்கிறார். அருகிலிருக்கும் அவரது டீன் ஏஜ் மகனிடம் 'உனக்குப் பிடித்த பாடல் என்ன?' என்று கேட்டால், 'நீ கட்டும் சேலை மடிப்பினிலே கலங்கி நின்றேனே' என்கிறான். மனைவி, மகனை விட வயது கம்மியான மகள், அந்தத் தந்தை எல்லோரும் அந்தப் பாட்டின் வரிகளைப் பாட, பின் திரையில் அந்தப்பாடல் காட்சி இடம் பெறுகிறது. இதைச் சாத்தியமாக்கியிருப்பது தொலைக் காட்சிதான். குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள், பொழுதுபோக்குகள், பாடல்கள், விளையாட்டுகள் என்று எதுவுமே இல்லாமல் பெரியவர்களுக்கான நிகழ்ச்சிகளைக் குழந்தைகளும் அனுபவித்தாக வேண்டிய கட்டாயத்தைத்தான் தொலைக்காட்சி செய்து வருகின்றது.

போதிய வயது, மனப்பக்குவம் போன்றவை இல்லாத நிலையில் பெரியவர்களின் சமாச்சாரங்களைக் குழந்தைகள் எதிர்கொள்ளும்போது கடுமையான மன அதிர்ச்சி ஏற்படுவதுடன் விஷயங்கள் குறித்த தவறான புரிதல்களையும் அவர்கள் மனதில் ஏற்படுத்துகின்றன என உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேல் நாடுகளைப் பொறுத்த அளவில் நிகழ்ச்சிகளின் தன்மைக்கேற்ப அதை வயது வாரியாகப் பிரித்து அதற்கேற்ற சங்கேதக் குறிகளுடன் ஒளிபரப்பு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறைகள், டிவிக்கள் என்றிருக்கும் மேலை நாட்டிலும் குழந்தைகள் பெரியவர்களுக் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத் தடுக்க முடியவில்லை. ஒரே அறையில் எல்லோருடனும் உட்கார்ந்து கொண்டு டி.வி. பார்க்கும் இந்தியக் குடும்பங்களிலும் அது சாத்தியமே இல்லை.

இத்தகைய சூழ்நிலையில் என்ன செய்ய முடியும்? தொலைக்காட்சியில் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளை அதிகரிக்கலாம். குழந்தைகளுக்கென ஓர் அலை வரிசையைக் கூட தொடங்க முடியும். (இப்போது கார்ட்டூன் அலை வரிசை இருப்பது போல).

ஆனால் அதைவிடவும் முக்கியமானது தொலைக்காட்சி எனும் தொடர்புச் சாதனத்தின் சாதக பாதகங்களைப் பற்றிக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது. நிகழ்ச்சிகள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன. நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்வது எப்படி போன்ற விஷயங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுத் தருவதன் மூலம் நிகழ்ச்சிகளைத் தரம் பிரித்துப் பார்த்து மதிப்பீடுகளை உணரச் செய்ய முடியும்.


அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பள்ளிக்கூடங்களிலேயே இப்படிப்பட்ட தொலைக்காட்சிக் கல்வியை ஒரு பாடமாக வைத்திருக்கிறார்கள். இங்கும் அது போலக் கொண்டு வர முயலலாம்.

ஏனெனில் குழந்தைகள் மனதில் தொலைக் காட்சி ஏற்படுத்தும் பாதிப்பு ஆழமானவை மட்டுமல்ல, நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவையுமாகும். நாம் சும்மா டி.வி. பார்த்தாலும் டி.வி நம்மைச் சும்மா விடுவதில்லை. குழந்தைகள் விஷயத்தில் அது அவர்களை இறுகப்பற்றிக் கொள்கிறது. இதை நாம் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். குறிப்பாக தொலைக்காட்சி அலைவரிசைகளும் உள்ளூர் - வெளியூர் நிகழ்ச்சிகளும் பெருகி வரும் இவ்வேளையில் இந்தத் தேவை இன்று அதிகரித்திருக்கிறது. குழந்தைகள் குழந்தைகளாக வளர உதவி செய்ய வேண்டிய கடமை நம்மெல்லோருக்குமே உள்ளது. அதை நம்மால் முடிந்தவரை சரியாகச் செய்வோம்.

இதில் தவறு செய்வோமேயானால் எமது எதிர்கால சந்ததி அதலபாதாளத்தில் விழும் நிலைமை ஏற்படும் என்பதை நாம் மறக்கக் கூடாது. *

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.143




### சொற்சிலம்பம் இல. 143

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 03 - 03 - 2000

### இடமிருந்து வலம்

1. சக்கரவர்த்தி 6. ஆசை. 8. சைவ சமயகுரவர் நால்வரில் ஒருவர். 9. வாயால் எழுப்பும் சத்தம். 10. உடல் வளர்ச்சிக்குத் தேவையானசத்து. 12. நீர் நிலையில் பயணத்துக்கு உதவுவது. 14. படி. 15. மார்பில் பிடிக்கும். 16. கட்டு. 17. சோடனை செய். 19. தெளிவாய்த் தோன்றும். 20. உங்கள் கைகளில் இப்போது உள்ளது. 21. பூமி.

### மேலிருந்து கீழ்

1. செருக்கு. 2. நிலத்துண்டு. 3. பேச்சுத் தடக்குதல். 4. ஒரெழுத்தைக் குறிப்பது. 5. கடனிறுக்கச் சக்தியற்ற நிலைமை. 6. விரிந்த. 7. கயிறு/ கச்சு/ நார். 11. களேபரம். 12. கண்ணாடி போன்ற படிமம். 13.பருவமடைந்த பெண். 15. காலில் அணிவது. 16. பிழைக்க. 17. ஒரு பூ மரம். 18.தடி. 19. ஏத்துதல்.

### சொற்சிலம்பம் 141 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. யோகர்சுவாமி. 7. சிலை. 8. கடைச்சன். 10. வாதம். 12. சம்பா. 13. மணலை. 14. வெம்பல். 15. துர்க்குறி 17. கடதாசி. 20. கவனம். 22. வரகு. 24. விடம். 25. தலைவிதி.

### மேலிருந்து கீழ்

1. யோசி. 2. கலைவாணர். 3. சுகம். 4. வாடை. 5. மிச்சம். 6.அன்பால். 9. சம்பல். 11. தலைக்கனம். 13. மதுரகவி. 14. வெறிதா. 16. குடம். 18.சிவலை. 19. தொகுதி. 21. வட. 23. ரவி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு:- | ஜனனி செல்வரூபன்,<br>மே/பா அ.செல்வராஜா,<br>கல்வயல்,<br>சாவகச்சேரி. |
| இரண்டாம் பரிசு:- | S.சர்மினி<br>145, ஸ்ரேசன் றோட், கொக்குவில். |
| மூன்றாம் பரிசு:- | பா.ஜெபதர்சிக்கா,<br>ஆண்டு 11,<br>சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. |

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு | ரூபா 50.00 |


புதிர்ப்போட்டி இலக்கம் 142 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

**குறிப்பு:-** கடந்த வாரத்து சொற்சிலம்பம் 142 இல் இடமிருந்து வலம் 11 இற்குரிய விளக்கம் 'மேரு' என்று இருக்கவேண்டியது 'நேரு' எனப் பிரசுரமாகிவிட்டது. இத்தவறுக்காக வருந்துகிறோம்.

(ஆ-ர்)

## பொருந்தாதது எது?

கீழே தொகுதியாகச் சில உருவங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் இந்தத் தொகுதிக்குப் பொருந்தாத உருவம் எது என்று உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?




## நீயம்மா

அன்னை என்பவள் நீயம்மா!
அன்புத் தெய்வமும் நீயம்மா!
எண்ணத் தீபமும் நீயம்மா!
இதயக் கோயிலும் நீயம்மா!

உண்ணச் செய்பவள் நீயம்மா!
ஒழுக்கம் தருபவள் நீயம்மா!
கண்ணிற் கிமையும் நீயம்மா!
கருணைக் கடலும் நீயம்மா!

உண்மையின் சின்னமும் நீயம்மா!
உழைப்பின் உருவமும் நீயம்மா!
பெண்மைக் கிலக்கணம் நீயம்மா!
பெருமைக் குடையவள் நீயம்மா!

பண்புச் சந்நிதி நீயம்மா!
பாசச் சந்தனம் நீயம்மா!
தொண்டிற் கரைபவள் நீயம்மா!
தொழுகைக் குரியவள் நீயம்மா!

## எத்தனை பேர்?

நானும் எனது நண்பனும் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தோம். போகும் வழியில் எதிரே சண்முகம் மாமாவும் அவரது பிள்ளைகளான முரளி, சுரேஸ், கமல் ஆகியோரும் வந்துகொண்டிருந்தனர். சண்முகம் மாமாவின் பிள்ளைகளின் கைகளில் ஒவ்வொரு கூடைகள் இருந்தன. ஒவ்வொரு கூடைக்குள்ளும் ஒவ்வொரு நாய்களும், ஒவ்வொரு நாய்க்கும் தலா நான்கு குட்டிகளும் இருந்தன. எனின் நாங்கள் மொத்தம் எத்தனைபேர் சந்தைக்குச் சென்றோம்?

## சிந்திக்கச் சில நிமிடங்கள்

✪ உலகில் எதுவுமே இல்லாதவனுக்குத்தான் எதையும் தாங்கும் இதயமுண்டு.

✪ தீக்குச்சி ஒரு முறை சிரிப்பதால் மெழுகுவர்த்தி வாழ்நாள் முழுவதும் அழுகின்றது.

✪ அரிசியை நிலத்தில் கொட்டினால் பொறுக்கிவிடலாம். ஆனால் வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் மீளப்பெறமுடியாது.

✪ எதைச் சிந்திக்கிறாய் என்பதிலில்லை, எப்படிச்சிந்திக்கிறாய் என்பதில் தான் புதிய கருத்துக்கள் வெளிவருகின்றன.

✪ கட்டுப்பாடு மனிதனுக்கு அவசியம். கட்டவிழ்ந்தால் கெட்டுவிடும் இலட்சியம்.

✪ நல்லதை எண்ணல் அறிவு; எண்ணியதை முடித்தல் முயற்சி

*த. துளசிகா*
*(தரம்4, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை)*




தொகுப்பு: நம்பி

## பனி மனிதன் இருப்பது உண்மையா??



இந்தியாவில் இமய மலையின் அடிவாரப்பகுதி. வீதி சீரமைப்புப் பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடுமையான பனியைப் பொருட்படுத்தாது தங்கள் பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு உதவ மிகப்பெரிய றோட் றோலர்கள், டிரக் வாகனங்கள், தார் டிரம்கள், சிறிய கிரேன்கள் எல்லாம் இருந்தன. மாலை நெருங்கியது. அன்றைய பணிகளை முடித்துக்கொண்டு அவர்கள் அருகில் இருந்த கிராமங்களுக்குத் திரும்பிவிட்டனர். தினமும் இப்படித்தான்.

அடுத்தநாள் காலையில் தங்கள் பணிகளைத் தொடங்க வந்த வீதிப்பணியாளர்களுக்கு ஓர் அதிர்ச்சிதரும் காட்சி காத்திருந்தது. அவர்கள் விட்டுச் சென்ற றோட்றோலர்கள், டிரக்குகள், தள்ளுவண்டிகள், கிரேன்கள் எல்லாமே குழந்தைகள் வீசியெறிந்த விளையாட்டுச் சாமான்கள்போல் சிதறுண்டு கிடந்தன. கிரேன் வைத்துத்தூக்கப்படவேண்டிய கனமான கொங்கிறீட் பலகைகள் எங்கோ மூலைகளில் கிடந்தன. றோட்றோலர் தலைகீழாகப் புதைந்து கிடந்தது. கிரேன் தலைகீழாகப் புரண்டு கிடந்தது. தார்டிரம், கல் உடைக்கும் இயந்திரம் எல்லாம் அப்பளமாக நொறுங்கிக்கிடந்தன.


எல்லோரும் திகிலோடு பார்த்தபோது ஒருபணியாளர் தரையில் ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினார். எல்லோரும் சென்று பார்த்தனர்.

பனித்தரையில் யானையின் கால்களைப்போன்ற அளவில் சுமார் 48செ.மீ அகலமுள்ள பாதச்சுவடுகள் பதிந்து கிடந்தன. கடினமான பனித்தரையில் இப்படியான அகலக்காலடிகள் பதியுமாறு இருக்கவேண்டும் என்றால் அந்த உருவம் எவ்வளவு எடை யுள்ளதாக – உயரமுள்ளதாக – வலிமையுள்ளதாக – இருக்கவேண்டும் என்பதைக் கற்பனைசெய்து பார்த்ததுமே எல்லோரும் பயத்தால் அரண்டு போனார்கள். இந்த நிகழ்ச்சி 1963 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடந்தது.


இரவில் வந்து அட்டகாசம் செய்து விட்டுப்போனது 'யெதி'(YETHI) என்று குறிப்பிடப்படும் இராட்சதப் பனிமனிதன்தானா? என்ற கேள்வி எழுந்தது. இந்த மாதிரி 'யெதி' நடமாட்டம் பற்றிய செய்திகள் எல்லாம் அடிக்கடி இமயமலைப் பகுதிகளில் எழும். இமயமலை மட்டுமல்ல, உலகத்தின் பல பகுதிகளிலும் பனிபடர்ந்த மலைச்சரிவுகளில் இந்த 'யெதி' யின் நடமாட்டம் இருப்பது நாளேடுகளில் செய்திகளாக வெளிவந்துகொண்டே இருக்கின்றது. இங்கிலாந்து நாட்டவர் இந்தப் பனிமனிதனுக்கு வைத்துள்ள பெயர் 'சாஸ் குவாத்'(SAS QUATH) என்பதாகும்.

*(இன்னும் வரும்)*


* * * * * * * * * * * * * * * * * *




## அடுத்தது எது?



மேலே மூன்று உருவங்கள் தரப்பட்டுள்ளன. அவை ஓர் ஒழுங்கில் அமைந்துள்ளன என்பது அவற்றைப் பார்த்ததும் உங்களுக்குத் தெரிந்துவிடும். இவற்றில் நாலாவதாக அடுத்து வர வேண்டிய உருவம். கீழேயுள்ள A,B,C,D,E ஆகியவற்றுள் ஒன்றுதான். அது எது என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!




## சொற்களை எழுதுங்கள்

கீறிட்ட இடங்களில் வரவேண்டிய சொற்களை எழுதுங்கள்

(அகத்தியர்) என்பது (அகதி) ஆகுமாயின்
(பொருந்தாதது) என்பது (...............) ஆகும்
(ஏமாற்றத்தை) என்பது (...............) ஆகும்
(யாழ்ப்பாணம்) என்பது (...............) ஆகும்
(கடல்கன்னி) என்பது (...............) ஆகும்
(கருமைமிக்க) என்பது (...............) ஆகும்

## ஆடு வாங்கிய விவசாயி



ஒரு விவசாயி பத்தாயிரம் ரூபாவுடன் ஆடு வாங்கப் போனான். ஒரு கடாவின் விலை ஆயிரம் ரூபா. ஒரு மறியின் விலை ஐந்நூறு ரூபா. சிறிய குட்டியின் விலை 50 ரூபா. அவன் ஓர் ஆட்டுப் பட்டியில் இருந்து நூறு ஆடுகள் வாங்கினான்.

வாங்கிய ஆடுகளில், குட்டிகளின் எண்ணிக்கை மறி ஆடுகளின் எண்ணிக்கையை விடப்பத்து மடங்கு. அவன் ஒவ்வொரு வகை ஆடுகளிலும் எவ்வளவு வாங்கினான் என்று கண்டுபிடியுங்கள். அவனிடம் மீதியாகப் பணம் எதுவும் இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?

**1.மின்சாரம் தாக்கி உயிர் இழந்ததாகக் கேள்விப்படுகிறோம். நம் உடல் அதிகபட்சமாக எந்த அளவிற்கு மின்சாரத்தைத் தாங்கும்? மின்சாரம் நம் உடலில் பாய்ந்ததும் என்ன மாற்றங்கள் ஏற்படும்? எப்படி உயிர் இழக்க நேரிடுகிறது?**

நம் உடலில் பாயும் மின்சாரத்தின் அளவு 240 வோல்டிற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. அதிலும் D.C (Direct Current) மின்சாரத்தைவிட, A.C(Alternating Current) மின்சாரத்தால் ஐந்து மடங்கு அதிக ஆபத்து எற்படும். மின்சாரம் நம் உடலில் பட்டதும் இரத்தக்குழாய் வழியாக உடல் முழுவதும் பரவுகிறது. அப்போது மூளையும் முள்ளந்தண்டும் மிகுந்த பாதிப்படைந்து செயலிழக்கின்றன. அதனைத் தொடர்ந்து இதயத்துடிப்பும் சுவாசமும் உடனே நின்றுவிடுகின்றது. சிலருக்கு தாக்கிய மின்சாரத்தின் அளவு குறைவாக இருந்தால்கூட அதிர்ச்சி, பயம் போன்ற காரணங்களால் இதயத்துடிப்பு நின்று இறப்புக்குக் காரணமாகின்றது.

**2.காய்கறிகள்,பழம்,கீரைவகைகள்போன்றவற்றில் 'விற்றமின்' சத்து உள்ளதல்லவா? இப்போது விளையும் பயிர்களுக்கு செயற்கை உரங்கள் போடுவதால் அதில் உள்ள சத்துக்கள் குறைந்து விடுமா?**

செயற்கை உரங்கள் போடப்படுவதால் மண்ணில் விளையும் காய்கறி, பழங்களில் இருக்கும் சத்தில் சிறிய சதவீதம் குறைய வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக அமோனியம்சல்பேற், அமோனியம்பொஸ்பேற் உரங்களைப்போடும் போது காய்கறிகளுக்குத் தேவையான துத்தநாகச் சத்து மேறிகூறிய உரங்களோடு தாக்கம் புரிந்து துத்தநாகசல்பேற், துத்தநாகபொஸ்பேற் என்பனவாக மாறிவிடுவதால் அக்காய்கறிகளுக்கு துத்தநாகச் சத்துக் கிடைக்காமல் போய்விடுகிறது.

சிறுவர் சுடரில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் XV ஆம் பக்கத்தில் உள்ளன.